தமிழரசு

Tamilarasu

(Monthly)

செப்டம்பர் 2024 (September 2024)
விலை ரூ.30/– (Price Rs.30/-)

செய்தி – மக்கள் தொடர்புத்துறையின் வெளியீடு

மலர் (Vol.) : 55
இதழ் (Issue) : 3

முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு நினைவு நாணயம் வெளியீடு

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்

திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள்

சுதந்திரத் திருநாளையொட்டி 15.08.2024 அன்று சென்னை, தலைமைச் செயலகக் கோட்டை கொத்தளத்தில் தேசியக் கொடியினை ஏற்றி வைத்து மரியாதை செலுத்தினார்.

தமிழரசு

தமிழ்நாடு அரசு
செய்தித்துறையின் வெளியீடு

திருவள்ளுவர் ஆண்டு 2055
குரோதி வருடம்: ஆவணி - புரட்டாசி
செப்டம்பர் 2024

மலர் : 55 விலை ரூ.30 இதழ் : 03

ஆசிரியர் - வெளியிடுபவர்
மரு. இரா.வைத்திநாதன், இ.ஆ.ப.,
இயக்குநர், செய்தி-மக்கள் தொடர்பு மற்றும்
அலுவலால் அரசு துணைச் செயலாளர்

நிருவாக ஆசிரியர்
இரா. அண்ணா
இணை இயக்குநர் (வெளியீடுகள்)

முதன்மைப் பொறுப்பாசிரியர்
க.அ. முகம்மது ரசூல்
உதவி இயக்குநர்

பொறுப்பாசிரியர்கள்
எஸ். உதயா கதிரவன்
ப. கருணாகரன்
ச. மஞ்சுளா
செய்தி-மக்கள் தொடர்பு அலுவலர்கள்

உதவி ஆசிரியர்கள்
மு. மணிமேகலை
சி. சுஜிதா
இரா. பாலாஜி
கு. சுபாஷ்

நிருபர்கள்
எஸ்.ஆர்.எஸ்.ஸ்ரீந்தர்
ஜெ.ஜெயசிம்ஹன்

ஓவியர்
இரா. உமாமகேஸ்வரி

இதழ் உதவியாளர்
நி. ஷீலா

கணினி வடிவமைப்பு
தி. ஜெய்சங்கர்
க.இரா. உமாமகேஸ்வரி

முதுநிலை அச்சுப்பிழைத் திருத்துபவர்
கோ. சந்திரசேகர்

தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
தமிழரசு அலுவலகம்,
எண்.5, இராஜீவ் காந்தி சாலை,
கானகம், தரமணி, சென்னை-600 113.
தொலைபேசி : 22542221/22542224
மின்னஞ்சல் : ddpub.tamilarasu@tn.gov.in
இணையதளம் : www.tndipr.gov.in

தமிழரசு இதழுக்கு
www.tamilarasu.org என்ற இணையதளத்தில்
சந்தா தொகையினை நேரடியாகச் செலுத்தலாம்.

மகன் தந்தைக்காற்றும் உதவி இவன்தந்தை
என்நோற்றான் கொல்லெனும் சொல். (குறள் - 70)

"ஆகா! இவனைப் பிள்ளையாகப் பெற்றது இவன் தந்தை பெற்ற பெரும்பேறு" என்று ஒரு மகன் புகழப்படுவது தான், அவன் தன்னுடைய தந்தைக்குச் செய்யக்கூடிய கைம்மாறு எனப்படும்'

– திருக்குறள் **கலைஞர்** உரையிலிருந்து...

இந்த இதழில்...

★ தமிழினத் தலைவர் டாக்டர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு நினைவு 100 ரூபாய் நாணயம் வெளியீடு......4

★ கலைஞர் திரு. மு.கருணாநிதி அவர்கள் இந்தியாவின் தலைசிறந்த அரசியல் ஆளுமை, பண்பாடு போற்றியத் தலைவர்......7

★ 'நா-நயம்' மிக்க தலைவர் கலைஞருக்கு நாணயம் வெளியிடப்படுவது மிகமிகப் பொருத்தமானது......12

★ அமெரிக்கா, சான்பிரான்சிஸ்கோ முதலீட்டாளர்கள் மாநாட்டில் ரூ.900 கோடி முதலீட்டில் உலகின் 6 முன்னணி நிறுவனங்களுடன் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள்......15

★ நம்மைக் காக்கும் நாட்டைக் காப்போம்......25

★ 6 முதல் 12 ஆம் வகுப்பு வரை தமிழ் வழியில் பயின்று உயர்கல்வி பயிலும் மாணவர்களுக்கு ரூ.1,000 உதவித் தொகை வழங்கும் 'தமிழ்ப் புதல்வன்' திட்டம்......35

★ ரூ.1,916.41 கோடிச் செலவில் 24,468 ஏக்கர் பாசன நிலங்கள் பயன்பெறும் 'அத்திக் கடவு-அவிநாசித் திட்டம்'......41

★ பழனியில் அனைத்துலக முத்தமிழ் முருகன் மாநாடு......49

★ உயர் கல்வியில் ஆராய்ச்சி படிப்புப் பயிலும் மாணவ, மாணவியர்களுக்கு "முதலமைச்சரின் ஆராய்ச்சி ஊக்கத் தொகை"......55

★ பசுமைத் தமிழ்நாடு இயக்கத்தின் கீழ், தமிழ்நாட்டில் 29 மாவட்டங்களில் 75 மரகதப் பூஞ்சோலைகள்......57

★ அகில இந்திய குடிமைப்பணித் தேர்வு பயிற்சி மையம் ஒரு பார்வை......73

★ தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் வினாத்தாள்......76

முதலாம் பக்க அட்டை

சென்னை, கலைவாணர் அரங்கத்தில் 18.08.2024 அன்று நடைபெற்ற முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு நினைவு நாணயம் வெளியீட்டு விழாவில், மாண்புமிகு ஒன்றிய பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு. **ராஜ்நாத் சிங்** அவர்கள் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு நினைவு 100 ரூபாய் நாணயத்தை வெளியிட, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் பெற்றுக் கொண்டார்.

தமிழினத் தலைவர் டாக்டர் **கலைஞர்** அவர்களின் நூற்றாண்டு நினைவு 100 ரூபாய் நாணயம் வெளியீடு

முத்தமிழறிஞர் டாக்டர் **கலைஞர்** நூற்றாண்டு நினைவு நாணயத்தை மாண்புமிகு ஒன்றிய பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு. **ராஜ்நாத்சிங்** அவர்கள் வெளியிட, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் பெற்றுக்கொண்டார் -(18.08.2024)

தமிழ்நாட்டில் 5 முறை முதலமைச்சராகவும், 13 முறை சட்டப்பேரவை, மேலவை உறுப்பினராகவும் இருந்த தமிழினத் தலைவர் முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவைக் கடந்த 2023ஆம் ஆண்டு ஜூன் 3ஆம் தேதி முதல் ஓராண்டுக்குக் கொண்டாட மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்களின் தலைமையிலான அரசால் முடிவு செய்யப்பட்டது.

இதை முன்னிட்டு தமிழ்நாடு அரசின் தலைமைச் செயலாளர் அவர்கள், தமிழினத் தலைவர் முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு 'நினைவு நாணயம்' வெளியிட ஒன்றிய அரசுக்குக் கடந்தாண்டு ஜூலை மாதம் கடிதம் எழுதினார். கடந்த மாதம் நாணயம் வெளியிடுவதற்கான அனுமதி கடிதத்தில் மாண்புமிகு ஒன்றிய நிதி அமைச்சர் அவர்களால் அனுமதி வழங்கப்பட்டது. தமிழினத் தலைவர் முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு நினைவு 100 ரூபாய் நாணயம், அதன் அமைப்பு, உள்ளடக்கம் விலை ஆகியவை முடிவு செய்யப்பட்டது. இதன்படி, இந்த நாணயத்தை அச்சிடுவதற்குக் கடந்த ஜூலை மாதம் மத்திய அரசிதழிலும் வெளியிடப்பட்டது.

இதனைத் தொடர்ந்து, தமிழினத் தலைவர் முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களின் நினைவு நாணயத்திற்கான மாதிரி வரைபடம் தமிழ்நாடு அரசிடம் இருந்து பெறப்பட்டது. இதை வடிவமைக்கும் பணியை ஒன்றிய நிதியமைச்சகம் செய்துவந்தது. நாணயத்தை, ஒன்றிய நிதி அமைச்சகத்தின் உத்தரவின்படி இந்திய ரிசர்வ் வங்கி அச்சடித்து வெளியிடுகிறது. இந்தி மற்றும் ஆங்கிலத்தில் தமிழினத் தலைவர் முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் மு.கருணாநிதி அவர்களின் பெயருடன், 'தமிழ் வெல்லும்' என்ற தமிழ் வாசகம் அவரது நினைவு நாணயத்தில் இடம் பெற்றுள்ளது.

தமிழினத் தலைவர் முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு நினைவு 100 ரூபாய் நாணயம் வெளியிடுவதற்கான நிகழ்ச்சி 18.08.2024 அன்று சென்னை, கலைவாணர் அரங்கத்தில் வெகு விமர்சியாக நடைபெற்றது. மாண்புமிகு ஒன்றிய பாதுகாப்புத் துறை அமைச்சர் திரு. ராஜ்நாத் சிங் அவர்கள் சிறப்புக் விருந்தினராக கலந்து கொண்டு, முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு நினைவு 100 ரூபாய் நாணயத்தை வெளியிட அதனை, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் பெற்றுக் கொண்டார்.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் இந்தியாவின் தலைசிறந்த தலைவர்களில் ஒருவர்...

முத்தமிழறிஞர் **கலைஞர்** அவர்களின் நூற்றாண்டு நினைவு 100 ரூபாய் நாணயம் வெளியீட்டு விழா 18.08.2024 அன்று நடைபெற்றதையொட்டி மாண்புமிகு இந்தியப் பிரதமர் திரு. **நரேந்திர மோடி** அவர்களின் வாழ்த்துச் செய்தி.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு நினைவு நாணயம் வெளியீட்டு விழா நடைபெறவிருப்பது அறிந்து தான் மிகவும் மகிழ்ச்சி அடைவதாகவும், இவ்விழா இந்தியாவின் மிகவும் புகழ்பெற்றத் தலைவர்களில் ஒருவரான கலைஞர் அவர்களுக்காக நடைபெறும் முக்கியமான விழாவாகும் என்றும் தெரிவித்துள்ள மாண்புமிகு இந்தியப் பிரதமர் அவர்கள், இந்திய அரசியல், இலக்கியம், சமூகப் பணிகள் ஆகிய பல்வேறு களங்களில் உயர்ந்து விளங்கியத் தலைவராகத் திகழ்ந்த கலைஞர் அவர்கள், தமிழ்நாட்டின் வளர்ச்சியிலும், நாட்டின் முன்னேற்றத்திலும் எப்போதும் அக்கறை கொண்டவராக விளங்கினார் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

ஒரு சிறந்த அரசியல் தலைவராகத் திகழ்ந்த கலைஞர் அவர்கள், மக்களால் பலமுறை முதலமைச்சராகத் தேர்ந்தெடுக்கப்பட்டு, அப்பதவியிலிருந்து சமூக வளர்ச்சி, அரசியல் குறித்த அவரது ஆழமான புரிதலை அடிக்கோடிட்டுக் காட்டும் வகையில் நமது நாட்டின் வரலாற்றில் அழிக்க முடியாத அடையாளத்தை விட்டுச் சென்றுள்ளார் என்றும் தெரிவித்துள்ளார்.

பன்முகத் திறமை கொண்ட கலைஞர் அவர்கள், தனது எழுத்துக்களின் மூலம் தமிழ் மொழி மற்றும் கலாச்சாரத்தை மேம்படுத்த மேற்கொண்ட முயற்சிகள் இன்றும் மக்களால் நினைவுகூறப்படுகின்றன என்றும், அவரது இலக்கிய ஆற்றல், அவரது படைப்புகளின் மூலம் பிரகாசித்தது மட்டுமல்லாமல், அவருக்குக் 'கலைஞர்' என்ற அன்பான பட்டத்தையும் பெற்றுத்தந்துள்ளது என்றும் குறிப்பிட்டுள்ளார்.

இந்த நினைவு நாணயம் வெளியிடப்படுவதன்மூலம், கலைஞர் அவர்களின் நினைவு போற்றப்படுகிறது என்றும், இந்த நினைவு நாணயம் கலைஞர் அவர்கள் பின்பற்றிய கொள்கைகள், மரபுகள், அவரது பணிகளை என்றென்றும் நினைவூட்டுவதாக அமையும் என்றும் தெரிவித்துள்ளார்.

மேலும், இந்த முக்கியமான தருணத்தில் கலைஞர் அவர்களுக்கு தனது நெஞ்சார்ந்த அஞ்சலியைச் செலுத்த விரும்புவதாகும் குறிப்பிட்டுள்ள மாண்புமிகு இந்தியப் பிரதமர் அவர்கள், 2047-ஆம் ஆண்டுக்குள் வளர்ச்சியடைந்த இந்தியாவை உருவாக்குவதை நோக்கி நாம் நம்பிக்கையுடன் நடைபோடும் இந்த வேளையில், கலைஞர் போன்ற தலைவர்களின் தொலைநோக்குப் பார்வையும், சிந்தனைகளும், நம் தேசத்தின் பயணத்தைத் தொடர்ந்து வடிவமைக்கும் என்றும், முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு நினைவு நாணய வெளியீட்டு விழா மாபெரும் வெற்றியடைய தனது வாழ்த்துக்களையும் தெரிவித்துள்ளார். ■

கோடிக்கணக்கான மக்கள் கண்ணியமான வாழ்க்கையை வாழ வழி வகுத்தவர் டாக்டர் கலைஞர் அவர்கள்

"முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டில், தமிழ்நாட்டு மக்களுக்குத் தனது அன்பான வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன். அவரது வியத்தகு வாழ்க்கை, பாரம்பரியத்தைப் போற்றும் வகையில் நினைவு நாணயம் வெளியிடப்படுவதை அறிந்து மகிழ்ச்சி அடைகிறேன்.

முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களின் சமூக ரீதியான முற்போக்குப் பார்வையும், மக்களுக்கு அதிகாரம் அளிப்பதில் அசைக்க முடியாத அர்ப்பணிப்பும் கோடிக்கணக்கான மக்கள் கண்ணியமான வாழ்க்கையை வாழ வழி வகுத்தது, அவரது உறுதியான தலைமையின்கீழ், தமிழ்நாடு ஒரு திடமான இலட்சியப் பாதையில் சென்றுள்ளது, அவரது கருத்தியல் தெளிவும் மாற்றத்திற்கான அர்ப்பணிப்பும் தமிழ்நாடு பல்வேறுத் துறைகளில் தன்னை முன்னோடி மாநிலமாக நிலை நிறுத்திக் கொள்ள உதவியது, பல மாநிலங்கள் பெரிய கனவுகள் காண ஊக்கமளித்துள்ளது.

இந்நிகழ்வில், மாண்புமிகு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்களையும் பாராட்ட விரும்புகிறேன், அனைத்துத்தரப்பினரையும் உள்ளடக்கிய இந்தியாவைப் பாதுகாப்பதில் அவரது அசைக்க முடியாத உறுதிப்பாட்டை பாராட்டுகிறேன்."

முத்தமிழறிஞர் டாக்டர் **கலைஞர்** அவர்களின் நூற்றாண்டு நினைவு 100 ரூபாய் நாணயம் வெளியீட்டு விழா 18.08.2024 அன்று நடைபெற்றதையொட்டி, மாண்புமிகு மக்களவை எதிர்க்கட்சித் தலைவர் திரு. **ராகுல்காந்தி** அவர்களின் வாழ்த்துச்செய்தி.

கலைஞர் திரு. மு.கருணாநிதி அவர்கள் இந்தியாவின் தலைசிறந்த அரசியல் ஆளுமை, பண்பாடு போற்றியத் தலைவர்

முத்தமிழறிஞர் **கலைஞர்** அவர்களின் நூற்றாண்டு நினைவு நாணயம் வெளியீட்டு விழாவில் மாண்புமிகு ஒன்றியப் பாதுகாப்புத் துறை அமைச்சர் திரு. **ராஜ்நாத் சிங்** அவர்கள் ஆற்றிய உரை - 18.08.2024

வணக்கம்!

நமது நாட்டில் மிகவும் போற்றப்படும் தலைவர்களில் ஒருவர் கலைஞர் கருணாநிதி. அவரது பிறந்த நூற்றாண்டு விழாவைக் கொண்டாடுவதற்கு, பெருமையுடனும், மரியாதையுடனும் உங்கள் முன் நிற்கிறேன். இந்தச் சிறப்புமிகு விழாவில் கலைஞருக்கு எனது நெஞ்சார்ந்த அஞ்சலியைச் செலுத்துகிறேன். தமிழ்நாட்டைக் கடந்து நாடு முழுவதும் தனது செல்வாக்கைச் செலுத்திய ஒரு மாமனிதர், திரு. மு.கருணாநிதி அவர்கள், இந்தியாவின் தலைசிறந்த அரசியல் ஆளுமை, பண்பாடு போற்றியத் தலைவர், சமூக நீதிக்காக இடை விடாது குரல் கொடுத்தவர் அவர்.

நண்பர்களே, அவரது வாழ்க்கையையும், பெருமையையும் போற்றும் வகையில் நாம் இங்குக் கூடியிருக்கிறோம். இந்த வேளையில், அவரது பொது நலத்தொண்டு தமிழ்நாட்டிற்கு மட்டுமின்றி, ஒட்டுமொத்த நாட்டிற்கும் நன்மையை அளித்துள்ளது என்பதை நினைவு கூற வேண்டியுள்ளது. பன்மைத்துவத்தைப் பேணும் வகையில் அனைத்தையும் உள்ளடக்கிய விதத்தில் ஜனநாயகத்தை முன்னோக்கிச் செலுத்துவதற்கான அர்ப்பணிப்பு உணர்வுடன், ஒரு இந்தியன் எப்படிச் செயல்பட வேண்டும்

என்பதன் எடுத்துக்காட்டாக அவரது தொலைநோக்குப்பார்வையும் செயல்பாடுகளும் இருந்தன.

ஒரு தேசிய ஆளுமையாகத் திகழ்ந்தவர்

திரு. மு.கருணாநிதி அவர்களின் அரசியல் பயணமானது நெகிழ்ச்சியும், உறுதிப்பாடும், மக்களுடன் நெருக்கமான தொடர்பும் கொண்ட ஒரு வரலாறு எனலாம். தமிழ்நாட்டின் முதலமைச்சராக ஐந்து முறை பொறுப்புவகித்த அவரது பதவிக் காலத்தில் சவால்கள் இருந்தபோதும் இந்திய அரசியலின் மைய நீரோட்டத்தில் பயணித்து, ஏழை, எளிய மக்களின் தேவைகளைத் தீர்த்துவைத்தவர் அவர். அவர் ஒரு மாநிலத் தலைவர் மட்டுமல்ல, நாடு முழுவதும் செல்வாக்குச் செலுத்திய ஒரு தேசிய ஆளுமையாகத் திகழ்ந்தார்.

தமிழ் அடையாளத்தில் ஆழமாக வேரூன்றியிருந்தபோது, இந்தியாவின் ஒருமைப்பாட்டைக் குழிபறிக்க, பிராந்தியவாதம் ஒரு போதும் அனுமதிக்கவில்லை இந்திய ஜனநாயகத்தின் பலம் பல்வேறு குரல்கள் மற்றும் அடையாளங்களுக்கு இடமளிக்கும் திறனில் உள்ளது என்பதை அவர் புரிந்து கொண்டார். தேசிய அரசியலில் அவரது பங்கேற்பு, கூட்டணி அரசாங்கங்களில் அவரது பங்கு, மற்றும் அரசியல் ஸ்பெக்ட்ரம் முழுவதும் இந்திய பன்முகத்தன்மை என்ற கருத்துக்கு அர்ப்பணிப்புள்ள தலைவர்களுடனான அவரது தொடர்பு ஆகியவை கொண்டாடப்படுகின்றன.

நண்பர்களே, நான் விவரித்த 'இந்தியா என்பது வேற்றுமையில் ஒற்றுமை காண்பது' என்ற புரிதலில்தான் திரு.மு.கருணாநிதி அவர்களின் கூட்டாட்சிக்கான ஆதரவு முழக்கம் வேரூன்றியிருந்தது. பல்வேறு குரல்களுக்கும், பண்பாடுகளுக்கும் அடையாளங்களுக்கும் இடமளிப்பதே இந்திய ஜனநாயகத்தின் பலம் என்பதை அவர் உணர்ந்திருந்தார். மாநில சுயாட்சியை அவர் வலியுறுத்தியபோதும், சமமான அதிகாரப் பரவலை அவர் ஒன்றியம் என்னும் குடைக்குக்கீழேயே கோரினார்.

கூட்டாட்சிக்கான அவரது கட்டுப்பாடு இந்தியத் தன்மையின் முதன்மைக்கூறாகும். இந்தியாவின் பன்முகத்தன்மை அதன் பலம், கூட்டாட்சி அமைப்பு இந்தப் பன்முகத்தன்மையை ஓர் ஒருங்கிணைந்த கட்டமைப்பிற்குள் மலர வைக்கிறது. கூட்டாட்சியைப் பொறுத்தவரை திரு.மு.கருணாநிதி அவர்களின் பணியானது, தமிழ்நாட்டின் குரலைத் தேசிய அளவில் ஒலிக்கச்செய்தது, அதே நேரத்தில் இந்தியாவின் கூட்டாட்சித் தத்துவத்தை வலுப்படுத்துவதற்கும் பங்களித்தது. மதியூகமிக்க அவரது செயல்பாடானது, பொது நலனுக்காக அனைவரும் ஒன்று சேர்ந்து பாடுபடும் அதே வேளையில் நமது வேறுபாடுகளை மதித்துக் கொண்டாடுவதே இந்தியத் தன்மை என்பதை நமக்கு நினைவூட்டுகிறது.

இந்திய அரசியலின் பேராளுமை

நண்பர்களே, திரு. மு.கருணாநிதி இந்திய அரசியலில் ஒரு பேராளுமை. நாடு விடுதலையடைந்த பிறகு பேரளவில் மாற்றங்களைச் சந்தித்துக் கொண்டிருந்த 1960 களில் அவர் ஒரு தலைவராக உருவெடுத்தார். பல மாநிலக் கட்சிகள் உருவான, ஆட்சி அமைத்த காலம் அது. பஞ்சாப் முதல் தமிழ்நாடு வரை இந்தப் போக்கு தெள்ளியநீராய்த் தெரிந்தது. பல வட இந்திய மாநிலங்களில் சம்யுக்த விதாயக் தள அரசாங்கங்கள் ஏற்படுத்தப்பட்டன. அந்தக்காலகட்டத்தில் உருவான பல மாநிலக் கட்சிகள் முகமிழந்து போய்விட்ட நிலையில், 1960 முதல் இன்றுவரை அரசியலில் ஆதிக்கம் செலுத்தும் ஒரு கட்சியாக தி.மு.கவை திரு. மு.கருணாநிதி அவர்கள் வளர்த்தெடுத்துள்ளார். இன்றும் அக்கட்சியின் ஆட்சி தொடர்கிறது.

நண்பர்களே, இந்தியா தனது 78ஆவது விடுதலை நாளை இந்த வாரம் கொண்டாடியது. 1973க்கு முன்புவரை ஒவ்வொரு மாநிலத்திலும் விடுதலை நாளிலும் ஆளுநரே தேசியக் கொடியை ஏற்றிவைத்தார் என்பது உங்களில் பலருக்குத் தெரிந்திருக்காது.

மாநிலத்தில் விடுதலை நாளில் முதலமைச்சரே கொடியேற்றி வைக்க வேண்டும் என்பதற்காக முழங்கிய திரு. மு.கருணாநிதி, சிறப்புமிகு தேசிய சிறப்புகளில் மூவர்ணக் கொடியை ஏற்றிவைக்கும் உரிமை முதலமைச்சர்களுக்கு வேண்டும் என்று கோரினார். அவரது குரலுக்குச் செவி சாய்க்கப்பட்டது; நாட்டின் விடுதலை நாளில் மாநிலத்தில் முதலமைச்சர் கொடி ஏற்றிவைக்க அனுமதிக்கப்பட்டது. அந்த வகையில், 1974 ஆகஸ்ட் 15 அன்று தேசியக்கொடியை ஏற்றி வைத்த, தமிழ்நாட்டின் முதல் முதலமைச்சராகவும் கருணாநிதி ஆனார்.

அரசியல் வரைபடத்தை வடிவமைத்தவர்

நண்பர்களே, ஜனநாயகச் செயல்பாட்டில் ஆழ்ந்த நம்பிக்கை கொண்டிருந்த தலைவர் அவர். தமிழ்நாடு, இந்தியாவின் அரசியல் வரைபடத்தை வடிவமைப்பதில் அவர் குறிப்பிடத்தக்க அளவில்

செயல்பட்டார் என்பதைப் பெருமிதத்துடன் நினைவு கூறுகிறேன். தேசிய முக்கியத்துவம் வாய்ந்த பிரச்சினைகளின் போதும் குறிப்பிடத்தக்க நிகழ்வுகளின் போது அவர் வழங்கிய ஆதரவு உறவுக்குக் கைகொடுக்கும் அவரது பண்பை வெளிப்படுத்தும் வகையிலானது.

உலக வாணிபக் கழக மாநாடு

1999ஆம் ஆண்டில் நடைபெற்ற ஒரு நிகழ்ச்சி என் நினைவுக்கு வருகிறது. அப்போது, உலக வாணிபக் கழகத்தின் மாநாடு சியாட்டிலில் நடைபெற்றது. இந்தியாவின் நலன்கள் எவ்வகையிலும் பாதிக்கப்பட்டு விடக்கூடாது என்று பிரதமர் வாஜ்பாய் விரும்பினார். இது குறித்து திரு.மு.கருணாநிதி அவர்களுடன் வாஜ்பாய் பேசினார். இந்தியாவின் நிலைப்பாடு வலுவாகப் பிரதிநிதித்துவப்படுத்தப்படும் என்று திரு.மு.கருணாநிதி அவர்கள் பிரதமரிடம் உறுதியளித்தார். அப்போது, தி.மு.கவின் திரு. முரசொலி மாறன் வர்த்தக அமைச்சராக இருந்தார். சியாட்டில் மாநாடு இந்தியாவுக்கு வெற்றிதந்த மாநாடாக அமைந்தது என்பதையும் இங்கே மகிழ்ச்சியுடன் பகிர்ந்துகொள்கிறேன்.

தனது வாழ்க்கை முழுவதும், பல்வேறு அரசியல் கட்சிகளைச் சேர்ந்த தேசியத் தலைவர்களுடனும் திரு. மு.கருணாநிதி அவர்கள் வலுவான அரசியல் உறவைப் பேணி வந்தார். தமது கொள்கைகளிலிருந்து சிறிதும் வழுவாமல் அதற்கு உண்மையாக இருந்தபடியே, அரசியல் ரீதியில் வேறுபட்ட கொள்கைகொண்ட தலைவர்களுடன் பணியாற்றிய அவரது திறன் அவரது அரசியல் ஆளுமைத் தன்மைக்குச் சான்றாக உள்ளது. இந்த உறவுகளை வெறுமனே அரசியல் கூட்டணிக்காக மட்டும் அவர் அமைத்துக் கொள்ளவில்லை; நாட்டுக்கான பங்களிப்பில் ஒருவருக்கொருவர் மரியாதைதரும் வகையில் உறவுகளைப் பேணினார்.

தொலைநோக்குப் பார்வை

நண்பர்களே, அனைத்தையும் உள்ளடக்கிய இந்திய அடையாளம் திரு.மு.கருணாநிதி அவர்களின் கொள்கைகளில் பிரதிபலிக்கிறது.

பங்களித்தார். ஒன்றிய அரசாங்கங்களில் அவரது பங்கும், ஜனநாயக கொள்கைகளுக்கான அவரது ஆதரவுக்குரலும் இந்திய ஜனநாயகத்தில் தனி முத்திரையைப் பதித்துள்ளன.

நண்பர்களே, பல்வேறு அரசியல் கொள்கைகளைக் கொண்ட அரசியல் அமைப்புகளுடன் இணைந்து பணியாற்றியுள்ளதில் வெளிப்பட்ட அவரது திறமை இந்திய ஜனநாயகத்திற்கு அவர் ஆற்றிய பங்களிப்பின் குறிப்பிடத்தக்கக்கூறு. பல்வேறு அரசியல் கட்சிகளையும் ஒருங்கிணைத்து நிலையான அரசாங்கங்களை ஏற்படுத்தியதில், இந்திய ஜனநாயகத்தின் பன்முகத் தன்மை பிரதிபலிக்குமாறு திறமையாகச் செயல்பட்டார்.

வாஜ்பாய் தலைமையிலான தேசிய ஜனநாயக கூட்டணி அரசு மத்தியில் ஆட்சியில் இருந்தபோது, பா.ஜ.க கூட்டணியில் தி.மு.க இருந்தது என்பதை இங்கே நான் நினைவு கூறுகிறேன். அந்த அமைச்சரவையில் சாலைப் போக்குவரத்துக்கான கேபினட் அமைச்சராக நான் இருந்தேன் என்பதையும் சொல்லிக்கொள்வதில் மகிழ்கிறேன்.

உறவுக்குக் கைகொடுக்கும் பண்பு

'கருத்தியல் ரீதியான வேறுபாடுகளைக் கொண்டிருந்த போதிலும், வாஜ்பாய் அரசை ஆதரிப்பதில் திரு.மு.கருணாநிதி அவர்கள் ஆக்கப்பூர்வமாகவும் நேர்மறையாகவும்

கல்வியை எடுத்துக்கொண்டால், விளிம்புநிலை மக்களுக்குத் தரமான கல்வியை வழங்குவதற்கு அவர் அயராது உழைத்தார், அதேபோல் மகளிர் குழந்தைகள் வாழ்வு மேம்படவும் அவர்பாடுபட்டார். எப்போதுமே எல்லோருக்கும் எல்லாம் என்பதே திரு.மு.கருணாநிதி அவர்களின் தொலைநோக்குப் பார்வையாக இருந்தது.

மகளிர் சுயஉதவிக் குழுக்கள்

பெண்கள், விளிம்பு நிலையிலுள்ள சமூகங்களின் உரிமைகளுக்காக அவர் கடுமையாக வாதாடினார். பாலின சமத்துவத்தை மேம்படுத்தும், பெண்களுக்கு அதிகாரம் அளிக்கும் முன்னோடிச் சீர்திருத்தங்களைக் கொண்டுவந்தார். இப்படியாக, தமிழ்நாட்டின் சமூகக் கட்டமைப்பில் ஒரு அழியாத முத்திரையைப் பதித்தார். அவரது ஆட்சிக் காலத்தில், உள்ளாட்சி அமைப்புகளில் பெண்களுக்கு 33 சதவிகித இடஒதுக்கீடு வழங்கும் சட்டத்தை இயற்றினார். மேலும், பெண்களுக்கு அதிகாரம் அளிக்கும் நோக்கத்துடன், 1989இல் அவருடைய ஆட்சியின்போது தருமபுரியில் முதன்முதலில் மகளிர் சுயஉதவிக் குழுக்களை உருவாக்குவதில் முக்கியப் பங்குவகித்தார். அமைப்புசாராத் துறையில் உள்ள விவசாயத் தொழிலாளர்கள், திருநங்கைகள் போன்றவர்களுக்காக நல வாரியங்களை உருவாக்குவதில் முக்கியப் பங்காற்றினார். மிகவும் பாதிக்கப்பட்ட குடிமக்களை ஒரு நாடு எப்படி நடத்துகிறது என்பதில்தான் அந்நாட்டுக்கான முன்னேற்றத்தின் உண்மையான அளவுகோல் உள்ளது என்பதை அவருடைய பணி நினைவூட்டுகிறது.

மனுநீதிநாள் திட்டம்

நண்பர்களே, அவர் திறமையான நிருவாகியாக இருந்தார். 'மனுநீதிநாள் திட்டம்' என்ற திட்டத்தைத் தொடங்கினார். இம்முயற்சியின் கீழ், மக்களின் பிரச்சினைகளைக் கேட்க மட்டும் வாரந்தோறும் ஒரு நாள் ஒதுக்குமாறு மாவட்ட அலுவலர்களுக்கு உத்தரவிட்டிருந்தார். மக்களுடன் நேரடியான, ஆழமான தொடர்பை ஏற்படுத்துவது என்பது ஒவ்வொரு அரசியல்வாதியும் அவரிடமிருந்து கற்றுக்கொள்ள வேண்டிய ஒன்று.

திரு.மு.கருணாநிதி அவர்கள் முதலமைச்சராக இருந்த காலத்தின் மிக முக்கியமான அம்சங்களுள் ஒன்று, கல்வி வளர்ச்சியிலும் உள்கட்டமைப்பு மேம்பாட்டிலும் அவர் கவனம் செலுத்தியது. தமிழ்நாட்டின் – உண்மையில், இந்தியாவின் - எதிர்காலத்தைக் கட்டியமைக்கும் தூண்கள் இவை என்று அவர் நம்பினார்.

ஆனால், திரு.மு.கருணாநிதி அவர்களின் தொலைநோக்குப் பார்வை தமிழ்நாட்டுடன் மட்டும் நின்றுவிடவில்லை. எந்த ஒரு மாநிலத்தின் வளர்ச்சியும் ஒட்டுமொத்த தேசத்தின் முன்னேற்றத்திற்கும் பங்களிக்கிறது என்பதை அவர் உணர்ந்திருந்தார். உள்கட்டமைப்பை மேம்படுத்துவதில் அவர் மேற்கொண்ட முயற்சிகள் – சாலைகள், பாலங்கள் அல்லது பொது வசதிகள் போன்ற வடிவங்களில் – இந்தியாவின் வளர்ச்சியை நோக்கியப் பயணத்தை உயர்த்தக்கூடிய ஒரு தமிழ்நாட்டை உருவாக்குவதை நோக்கமாகக் கொண்டிருந்தது.

கூட்டாட்சித் தத்துவம்

இந்தத் தளத்தில் திரு.மு.கருணாநிதி அவர்கள் ஆற்றியிருக்கும் பணியானது தற்சார்பு மற்றும் வளர்ச்சிக்கான இந்திய ஆன்மாவுக்கான சான்றாகும். கல்வியும் உள்கட்டமைப்பும் ஒருவருடைய வாழ்க்கையை மாற்றியமைக்கும் என்பதில் அவர் கொண்டிருந்த நம்பிக்கையானது வலுவான, தன்னிறைவு கொண்ட, தற்சார்புள்ள இந்தியாவைக் தட்டியெழுப்புவதற்கான தேசியப் பார்வையுடன் ஒத்துப்போகிறது. பிராந்திய வளர்ச்சியானது தேசிய வளர்ச்சியின் ஒருங்கிணைந்த பகுதி என்பதையும், ஒவ்வொரு மாநிலத்தின் செழுமையும் தேசத்தின் ஒட்டுமொத்த செழிப்புக்கும் பங்களிக்கிறது என்பதையும் அவருடைய மரபு நினைவூட்டுகிறது. இது கூட்டாட்சித் தத்துவத்தைச் சிறந்த முறையில் எடுத்துக்காட்டுகிறது.

இந்தியப் பண்பாட்டுத் தளத்தின் அழியாத முத்திரை

கலைஞரின் செல்வாக்கு அரசியலுக்கெல்லாம் அப்பாற்பட்டது. அவர் ஒரு சிறந்த எழுத்தாளர், கவிஞர், நாடக ஆசிரியர். அவருடைய படைப்புகள் தமிழ் இலக்கியத்தையும் திரைத்துறையையும் வளப்படுத்தின. தமிழ் இலக்கியம், திரைத் துறைக்கான அவருடைய பங்களிப்புகள், தமிழ்நாடு மற்றும் ஒட்டுமொத்த இந்தியாவின் பண்பாட்டுத் தளத்தில் அழியாத முத்திரையைப் பதித்துள்ளன.

தமிழ் மொழியையும் பண்பாட்டையும் மேம்படுத்துவதற்கான அவருடைய முயற்சிகள் எல்லாம், ஒருவரின் பண்பாட்டு அடையாளத்தைப் பாதுகாப்பதும் கொண்டாடுவதும் பரந்துபட்ட இந்திய அடையாளத்துக்கு இன்றியமையாதது என்ற அவருடைய நம்பிக்கையில் வேரூன்றி இருந்தன. இந்தியா ஒரு தேசமாக, பல்வேறு மொழிகள், பண்பாடுகள், மரபுகளால் ஆசீர்வதிக்கப்பட்டுள்ளது. இந்தப் பன்முகத்

தன்மையின் ஒவ்வொரு அம்சமும் இந்த மாபெரும் தேசத்தின் செழுமைக்குப் பங்களிக்கிறது என்பதை திரு. மு.கருணாநிதி அவர்கள் அங்கீகரித்தார்.

நண்பர்களே, திரு. மு.கருணாநிதி அவர்கள் ஜனநாயகத்துக்காக போராடினார். மேலும், நல்ல மாற்றங்களைக் கொண்டுவருவதற்காகத் தன்னுடைய வாழ்நாள் முழுவதையும் அர்ப்பணித்தார். பிரதமர் மோடி தலைமையிலான தேசிய ஜனநாயக கூட்டணி அரசும் ஜனநாயகம் மற்றும் கூட்டாட்சியின் சக்தியை நம்புகிறது. இந்தியா தன்னுடைய 140 கோடி மக்களின் விருப்பங்களையும் நிறைவேற்றுகிறது. அதோடு மட்டுமல்லாமல், ஜனநாயகமானது மக்களுக்கு வளர்ச்சியை வழங்குகிறது, மக்களுக்கு அதிகாரமளிக்கிறது என்ற நம்பிக்கையையும் அளித்து வருகிறது.

பாதுகாப்பு உற்பத்தி

இத்தருணத்தில், வளர்ச்சிக்கான நம்முடைய அர்ப்பணிப்பானது கட்சி அரசியலுக்கு அப்பாற்பட்டது என்பதையும் வலியுறுத்த விரும்புகிறேன். உத்தரப் பிரதேசம், தமிழ்நாடு ஆகிய இரு மாநிலங்களிலும் பாதுகாப்புத் தொழில்துறை வழித்தடங்களை நிறுவுவதற்கு இந்திய அரசு எடுத்திருக்கும் முடிவு இதற்கான எடுத்துக்காட்டாகும். இந்த வழித்தடங்கள் உள்நாட்டுப் பாதுகாப்பு உற்பத்தித் துறையை உயர்த்துவதையும், இறக்குமதியை நம்பியிருப்பதைக் குறைப்பதையும் நோக்கமாகக் கொண்டுள்ளன. இந்த வழித்தடங்கள் முதலீட்டை ஈர்க்கவும், புதுமைகளை ஊக்குவிக்கவும், இந்தியாவில் பாதுகாப்பு உற்பத்திக்கான வலுவான சூழலை உருவாக்கவும் வடிவமைக்கப்பட்டுள்ளன.

பண்பாட்டு ஒருங்கிணைப்பு

பழமையான நகரமான காசி, இன்றைய வாரணாசி அல்லது பனாரஸை சேர்ந்தவன் நான் என்பதால், காசி தமிழ்ச் சங்கமத்தின் முயற்சியையும் எடுத்துரைக்க விரும்புகிறேன். இந்தியாவின் பண்பாட்டு ஒருங்கிணைப்பை நோக்கி, தமிழ் மக்களுக்கும் காசிக்கும் இடையே பல நூற்றாண்டுகளாக நீடித்துவரும் தொடர்பை மீண்டும் கண்டறிந்து, மீண்டும் உறுதிப்படுத்திக் கொண்டாடுவதை நோக்கமாகக் கொண்ட ஒரு குறிப்பிடத்தக்க முயற்சியான காசி தமிழ்ச் சங்கமத்தைப் பிரதமர் மோடி தொடங்கிவைத்தார். காசி தமிழ்ச் சங்கமத்தின் வெற்றியைத் தொடர்ந்து, சௌராஷ்டிரா-தமிழ்ச் சங்கமம் என்ற அமைப்பைத் தொடங்குவதன் மூலம் பண்பாட்டு ஒருங்கிணைப்புக்கான தன்னுடைய உறுதிப்பாட்டை விரிவுபடுத்தியுள்ளது. இந்த முயற்சி மேற்கு இந்தியாவுக்கும் தென்னிந்தியாவுக்கும் இடையிலான பண்பாட்டு ஒருங்கிணைப்பைக் கொண்டாட முயல்கிறது.

அசைக்க முடியாத அர்ப்பணிப்பு

திரு. மு.கருணாநிதி அவர்களின் வாழ்க்கை குறித்தும் பாரம்பரியம் குறித்தும் நாம் நினைவு கூர்கிறோம்; இவ்வேளையில், வருங்காலச் சந்ததியினர் அவருடைய வாழ்க்கையிலிருந்து கற்றுக் கொள்ளக்கூடிய பாடங்களைக் கருத்தில் கொள்வது அவசியம். திரு.மு.கருணாநிதி அவர்களின் வாழ்க்கையிலிருந்து இளம் இந்தியர்கள் கற்றுக் கொள்ளக்கூடிய முக்கியமான பாடங்களுள் ஒன்று, சொந்த மதிப்பீடுகளுக்கு உண்மையாக இருப்பதாகும். அனைத்துக் குடிமக்களும், அவர்களின் பின்னணி என்னவாக இருந்தாலும், கௌரவமான வாழ்க்கை வாழ்வதற்குத் தகுதியானவர் என்ற நம்பிக்கையிலிருந்து அவர் ஒருபோதும் விலகவில்லை. இது இந்தியப் பண்பாட்டையும் மரபையும் சிறந்த முறையில் எடுத்துக்காட்டுவதாக நினைத்தார். அவருடைய மதிப்புகள் மீதான இந்த அசைக்க முடியாத அர்ப்பணிப்பு அவருடைய தலைமையின் தனிச்சிறப்பாகும். மேலும், இது அவருடைய காலத்தில் இருந்ததைப் போலவே இன்றும் பொருத்தமான பாடமாக உள்ளது.

நன்றியுணர்வின் அடையாளம்

கலைஞர் திரு. மு.கருணாநிதி அவர்களின் நாணயத்தை வெளியிடுவதானது வளர்ச்சிக்காகவும், நீதிக்காகவும் சமூகத்தின் முன்னேற்றத்துக்காகவும் அர்ப்பணிக்கப்பட்ட அவருடைய வாழ்க்கைக்கான அஞ்சலியாகும். இது நம்முடைய கூட்டு நன்றியுணர்வின் அடையாளமாகவும், அவர் முன்வைத்த மதிப்பீடுகளுக்கான நினைவூட்டலாகவும் இருக்கும்.

இந்த வார்த்தைகளுடன், எனது உரையை முடிக்க விரும்புகிறேன். இந்நிகழ்ச்சிக்கு என்னை அழைத்த தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்களுக்கும், தமிழ்நாடு அரசுக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். கலைஞர் திரு. மு.கருணாநிதி அவர்களுக்கு மீண்டும் ஒருமுறை என்னுடைய இதயப்பூர்வமான அஞ்சலியைத் தெரிவித்துக் கொள்கிறேன். அவரது வாழ்க்கையும், பொதுவாழ்வில் அவர் ஆற்றிய பங்களிப்பும் என்றென்றும் நினைவு கூறப்படும்.

நன்றி!

‘நா-நயம்’ மிக்க தலைவர் கலைஞருக்கு நாணயம் வெளியிடப்படுவது மிகமிகப் பொருத்தமானது

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. **மு.க. ஸ்டாலின்** அவர்கள்
18.08.2024 அன்று முத்தமிழறிஞர் கலைஞர்
அவர்களின் நூற்றாண்டு நினைவு நாணயம்
வெளியீட்டு விழாவில் ஆற்றிய உரை

உங்கள் அனைவருக்கும் எனது வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

என்னுடைய உணர்வுகளை எப்படி விவரிப்பது என்று சொல்ல முடியாத மகிழ்ச்சியில் நான் இப்போது இருக்கிறேன்.

நம்மை எல்லாம் ஆளாக்கியத் தலைவரைச் சிறப்புச் செய்யும் வகையில் நாணயம் வெளியிடப்படுகிறது.

‘நா-நயம்’ மிக்க தலைவரான கலைஞருக்கு, நாணயம் வெளியிடப்படுவது மிக மிகப் பொருத்தமானது.

நூற்றாண்டு விழா நாயகருக்கு 100 ரூபாய் நாணயம் வெளியிடப்படுகிறது. இதுவரை நாம் கொண்டாடினோம், இதோ இந்தியாவே கொண்டாடுகிறது என்பதன் அடையாளம் தான் இந்த விழா. இதுபோன்ற எத்தனையோ சிறப்புகளுக்குத் தகுதியானவர்தான் நம்முடைய தலைவர் கலைஞர் அவர்கள்! உலகம் இன்று ஒப்புக்கொண்ட உண்மை!

தமிழ்நாடு சட்டமன்றத்தில், தலைவர் கலைஞர் அவர்களது திருவுருவப் படத்தை, அன்றைய குடியரசுத் தலைவர் மாண்புமிகு ராம்நாத் கோவிந்த் அவர்கள் திறந்து வைத்தார்கள்.

ஓமந்தூரார் வளாகத்தில் உள்ள திருவுருவச் சிலையை, அன்றைய குடியரசுத் துணைத் தலைவர் திரு.வெங்கய்யா நாயுடு அவர்கள் திறந்து வைத்தார்கள்.

அண்ணா அறிவாலயத்தில் அமைக்கப்பட்டுள்ள திருவுருவச் சிலையை அன்னை சோனியா காந்தி அவர்கள் திறந்து வைத்தார்கள்.

முரசொலி அலுவலகத்தில் அமைக்கப்பட்டுள்ள திருவுருவச் சிலையை, மேற்கு வங்க முதலமைச்சர் மாண்புமிகு மம்தா பானர்ஜி அவர்கள் திறந்து வைத்தார்கள்.

இன்று தமிழினத் தலைவர் கலைஞர் அவர்களின் நாணயத்தை, நமது நாட்டின் பாதுகாப்புத் துறை அமைச்சர் ராஜ்நாத் சிங் அவர்கள் வெளியிட வருகை தந்துள்ளார்கள்.

இந்திய ஜனநாயகத்தின் பாதுகாவல் அரணாக இருந்த தலைவர் கலைஞர் அவர்களின் உருவம் தாங்கிய நாணயத்தை வெளியிட, இந்திய நாட்டின் பாதுகாப்புத் துறை அமைச்சர் வந்திருப்பது மிகமிகப் பொருத்தமானதுதான்.

எண்பது ஆண்டு காலம் பொதுவாழ்க்கையில் இயங்கி, அதில் அரைநூற்றாண்டுக் காலம், தமிழ்நாட்டின் திசையைத் தீர்மானித்த தலைவர் கலைஞருக்கு, இந்தியாவே வருகை தந்து சிறப்பித்திருக்கிறது என்றுதான் சொல்ல வேண்டும்.

தலைவர் கலைஞர் நிறைவடைந்த நாள்முதல், நாள்தோறும் அவர் புகழைத்தான் போற்றிக் கொண்டிருக்கிறோம். கடந்த ஓராண்டு காலமாக அவரது நூற்றாண்டை முன்னிட்டு, அவரது சாதனைகளைச் சொல்லும் பல்வேறு நிகழ்ச்சிகளை நடத்தினோம்.

தலைவர் கலைஞரைப் போற்றும் விதமாகப் பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்தினோம். அவற்றில் முத்தாய்ப்பான சிலவற்றை மட்டும் சொல்ல வேண்டுமென்றால்,

- கிண்டியில் கலைஞர் நூற்றாண்டு உயர்சிறப்பு மருத்துவமனை!
- மதுரையில் கலைஞர் நூற்றாண்டு நூலகம்!
- 1 கோடியே 15 இலட்சம் மகளிர், மாதம்தோறும் ஆயிரம் ரூபாய் உரிமைத்தொகை பெறும் 'கலைஞர் மகளிர் உரிமைத் திட்டம்'!
- கிளாம்பாக்கத்தில் கலைஞர் நூற்றாண்டுப் பேருந்து முனையம்!

இந்தப் பெருமைக்கெல்லாம் மகுடமாக, இன்று கலைஞர் உருவம் தாங்கிய நாணயம் வெளியிடப்படுகிறது.

I thank the Union Government for approving the release of the 100-rupee coin in honour of Thalaivar Kalaignar. I also thank Hon'ble Prime Minister Thiru. Narendra Modi for his support and Hon'ble Defence Minister Rajnath Singh for gracing this occasion.

Though he started his career as a professor of physics, due to his interest in politics and by his hardwork, he grew step by step, from MLA to State Minister to CM of Uttar Pradesh and now as the Defence Minister of India.

Hon'ble Rajnath Singh was my first choice to invite for this event.

Although we have different political views, Rajnath Singh has always been someone who maintains positive relationships with people from different political backgrounds.

இன்றைக்கு நாம் பார்க்கும் நவீனத் தமிழ்நாட்டை உருவாக்கிய சிற்பி, தலைவர் கலைஞர் அவர்கள்தான்! அவர் உருவாக்கிய கட்டமைப்புக்களைப் பட்டியலிட்டுச் சொல்ல வேண்டுமென்றால், ஒரு நாள் போதாது.

அவரது சாதனைகளைச் சொல்ல, இதோ நாம் இந்த விழாவை நடத்திக் கொண்டிருக்கிறோமே, இந்த கலைவாணர் அரங்கத்தில் இருந்தே தொடங்கலாம்.

- பாலர் அரங்கமாக இருந்த இதனை, மிகப்பெரியதாகக் கட்டி எழுப்பி, 'கலைவாணர் அரங்கம்' என்று மாற்றினார்.
- தாய்மொழியாம் தமிழ்மொழிக்குச் 'செம்மொழி' தகுதியைப் பெற்றுத் தந்தார்.
- மெட்ராசை 'சென்னை' ஆக்கினார்.
- தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம், தமிழ்நாடு குடிசை மாற்று வாரியம் – போன்ற எண்ணற்ற திட்டங்களை உருவாக்கினார்.

44 அணைக்கட்டுகள், ஏராளமான கல்லூரிகள் - பல்கலைக் கழகங்கள்,

சென்னையைச் சுற்றி மட்டும், அண்ணா சாலை, அண்ணா மேம்பாலம், வள்ளுவர் கோட்டம், கத்திப்பாரா பாலம், கோயம்பேடு பாலம், செம்மொழிப்பூங்கா, டைடல் பார்க், தலைமைச் செயலகமாகக் கட்டப்பட்டு, இன்று பெரிய அரசு மருத்துவமனையாக இருக்கும் ஓமந்தூரார் மருத்துவமனை, மெட்ரோ இரயில், அடையாறு ஐ.டி. காரிடார், நாமக்கல் கவிஞர் மாளிகை என அனைத்தும் கலைஞரால் உருவாக்கப்பட்டவை! இதனை யாராலும் மறைக்க முடியாது.

- கடந்த 15ஆம் நாளன்று இந்திய நாட்டின் 78ஆவது விடுதலை நாளை நாம் கொண்டாடினோம். அன்று நான் மட்டுமல்ல, நாட்டிலுள்ள அத்தனை மாநில முதலமைச்சர்களும் கொடியேற்றினார்களே, அதற்கான உரிமையைப் பெற்றுத்தந்தவரும் முதலமைச்சர் கலைஞர்தான்!
- ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்பு வள்ளுவர் சொன்னாரே.......

“முறைசெய்து காப்பாற்றும் மன்னவன் மக்கட்கு
இறை என்று வைக்கப்படும்” – என்று,

அப்படி ஆட்சி நடத்தியவர் கலைஞர் அவர்கள்! அதனால்தான் இன்று அகில இந்தியாவும் போற்றும் தலைவராகக் கலைஞர் அவர்கள் உயர்ந்து நிற்கிறார்.

“செயல்படுவதும், செயல்பட வைப்பதும்தான் அரசியல்” என்ற இலக்கணத்திற்கு இலக்கியமாக இருந்தவர் கலைஞர். ஒரு கட்சியின் தலைவராக; ஒரு மாநிலத்தின், நாட்டின் தலைவராக; எப்போதும் சிந்தித்தார்! செயல்பட்டார்!

- 1971ஆம் ஆண்டு இந்தியாவைப் பாகிஸ்தான் அச்சுறுத்தியபோது, தமிழ்நாடு சட்டமன்றத்தில் பாகிஸ்தான் படையெடுப்புக் கண்டனத் தீர்மானம்,
- 1972ஆம் ஆண்டு பாகிஸ்தான் போரின்போது அன்றைய பிரதமர் இந்திரா காந்தி அவர்களிடம் நாட்டுப் பாதுகாப்புக்காக ஆறு கோடி ரூபாய் நிதி, போரில் வீரமரணம் அடைந்த ராணுவ வீரர்களின் குடும்பங்களுக்கு நிதி மற்றும் நிலம்,

1999ஆம் ஆண்டு கார்கில் போரின் போது இந்தியாவிலேயே அதிகத் தொகையை, அன்றைய பிரதமர் வாஜ்பாய் அவர்களிடம் மூன்று தவணைகளாக மொத்தம் 50 கோடி ரூபாய் வழங்கியவர் தலைவர் கலைஞர்!

மாநில உரிமைகளுக்காகக் குரல் கொடுத்த அதேவேளையில் – நாட்டின் பாதுகாப்பு என்று வருகிறபோது கை கொடுத்தவர்தான் கலைஞர் அவர்கள். நாணயம் என்பதற்கு இன்னொரு பொருளும் இருக்கிறது. கொடுத்த வாக்கை காப்பாற்றுவதற்குப் பெயரும் நாணயம்தான்!

“சொன்னதைச் செய்வோம் – செய்வதைத்தான் சொல்வோம்” என்று சொல்லி, சொன்னதையெல்லாம் செய்து காட்டியது, தலைவர் கலைஞர் அவர்களது நாணயத்துக்கு அடையாளம்! அவரது வழியில் இன்றைய திராவிட மாடல் அரசு – கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்றிக் கலைஞர் அரசாகச் செயல்பட்டு வருகிறது.

“சட்டசபையை அதிகார அமைப்பாக இல்லாமல் சமூகத்திற்கு நன்மை செய்யும் அமைப்பாகக் கருதவேண்டும்” என்றார் பகுத்தறிவுப் பகலவன் தந்தைப் பெரியார் அவர்கள். அப்படித்தான் நாங்கள் செயல்பட்டு வருகிறோம்.

இது, எனது அரசல்ல; நமது அரசு! ஒரு கட்சியின் அரசல்ல; ஒரு இனத்தின் அரசு! திராவிடக் கருத்தியல் கொண்ட அரசு! இதனை என்னுள் ஏற்படுத்தியவர் தலைவர் கலைஞர். அந்த வகையில் கலைஞரே இயக்கிக் கொண்டிருக்கிறார்.

“ஒரு மனிதனின் வாழ்க்கை அவனது மரணத்திற்குப் பிறகு கணக்கிடப்பட வேண்டும்” என்று சொன்னவர் தலைவர் கலைஞர் அவர்கள். இன்றைக்கு அவரது முகம் தாங்கிய நாணயத்தில் ‘தமிழ் வெல்லும்’ என்ற சொல்லும் இடம் பெற்றுவிட்டது என்றால், இதுவும் கலைஞரின் சாதனைதான்!

தனது சாதனைப் பெருவாழ்வால் தமிழினத்தின் நெஞ்சத்தில் நிறைந்துவிட்ட தலைவர் கலைஞர் புகழ் வாழ்க!

தலைவர் கலைஞர் புகழ் வாழ்க! தலைவர் கலைஞர் புகழ் வாழ்க!

On behalf of the people of Tamil Nadu, Once again, I sincerely thank Hon'ble Rajnath Singh for being here today to honour Thalaivar Kalaignar.

நன்றி வணக்கம்!

அமெரிக்கா, சான்பிரான்சிஸ்கோ முதலீட்டாளர்கள் மாநாட்டில் ரூ.900 கோடி முதலீட்டில்

உலகின் 6 முன்னணி தொழில் நிறுவனங்களுடன் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் முன்னிலையில் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் மேற்கொள்ளப்பட்டு ஆற்றிய உரை – 30.08.2024

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் 27.08.2024 அன்று சென்னை விமான நிலையத்தில் அரசுமுறைப் பயணமாக அமெரிக்க நாட்டிற்குச் சுற்றுப் பயணம் செல்வதற்கு முன்பாகச் செய்தியாளர்களைச் சந்தித்து ஆற்றிய உரை.

ஊடகத்துறை நண்பர்களுக்கும், பத்திரிகையாளர்களுக்கும் முதலில் என்னுடைய வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அரசுமுறை பயணமாக நான் அமெரிக்கா செல்கிறேன். தமிழ்நாட்டிற்கான தொழில் முதலீடுகளை ஈர்த்துவிட்டு, வருகிற செப்டம்பர் 14 அன்று திரும்பி வருகிற மாதிரி என்னுடைய பயணம் திட்டமிடப்பட்டிருக்கிறது. முதலீடுகளை ஈர்க்க இது போன்ற பயணங்களை நான் தொடர்ந்து மேற்கொண்டு வருகிறேன் என்பதும் உங்கள் அனைவருக்கும் நன்றாகத் தெரியும். ஏற்கனவே, ஐக்கிய அரபு அமீரகம், சிங்கப்பூர், ஜப்பான் ஸ்பெயின் ஆகிய நாடுகளுக்கு நான் பயணங்கள் மேற்கொண்டதன் மூலமாகத் தமிழ்நாட்டிற்குப் பல்வேறு முதலீடுகள் வந்திருக்கின்றன. இந்தப் பயணங்கள் மூலமாக 18 ஆயிரத்து 521 நபர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் வகையில், 10 ஆயிரத்து 882 கோடி ரூபாய் மதிப்பிலான 17 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் போடப்பட்டன.

அதில், 990 கோடி ரூபாய் முதலீட்டுக்கான 5 திட்டங்கள் தற்போது உற்பத்தியை மேற்கொண்டு வருகின்றன. கடந்த ஆகஸ்ட் 21 அன்று நடந்த தமிழ்நாடு முதலீட்டாளர் மாநாட்டில் இந்த 5 திட்டங்களில், சிங்கப்பூரைச் சேர்ந்த ஹைஃபி நிறுவனத் திட்டத்தையும், ஜப்பானின் ஓம்ரான் நிறுவனத் திட்டத்தையும் நான் தொடங்கி வைத்தேன். இந்த இரண்டு நிறுவனங்களின் திட்டங்களால் மட்டும் 1,538 நபர்களுக்கு வேலைவாய்ப்பு உருவாக்கப்பட்டிருக்கிறது. 3 ஆயிரத்து 769 கோடி ரூபாய் மதிப்பிலான 3 திட்டங்களின் கட்டுமானப் பணிகள் பல்வேறு முன்னேற்ற நிலைகளில் இருக்கின்றன.

கடந்த ஆகஸ்ட் 21 அன்று நடந்த தமிழ்நாடு முதலீட்டாளர் மாநாட்டில், ஜப்பானின் மிட்சுபா மற்றும் சட்ராக் நிறுவனங்களின் திட்டங்கள் அமைப்பதற்காக அடிக்கல் நாட்டி இருக்கிறேன். 3 ஆயிரத்து 540 கோடி ரூபாய் மதிப்பிலான 3 திட்டங்கள் பல்வேறு முன்னேற்ற நிலைகளில் இருக்கிறது. 483 கோடி ரூபாய் மதிப்பிலான 2 விரிவாக்கத் திட்டங்கள் விரைவில் செயல்படுத்தப்படும் நிலையை அடைந்திருக்கிறது. 2 ஆயிரத்தி 100 கோடி ரூபாய் மதிப்பிலான 4 திட்டங்களைப் பொருத்தவரைக்கும் அந்தந்த நிறுவனங்களின் தொழில் முதலீட்டுச் சூழல் காரணமாகச் சிறிய தாமதம் ஏற்பட்டிருக்கிறது.

நாங்கள் கையெழுத்திட்ட ஒப்பந்தங்கள் அனைத்தும் துரிதமான நிலையில் செயல்படுத்தப்பட்டு வருகிறது என்று ஆதாரப்பூர்வமாகச் சுட்டிக்காட்டத்தான் இதை எல்லாம் நான் விரிவாக இங்கே குறிப்பிட்டேன். அதனால்தான், இதுபோன்ற பயணங்கள் மிக மிக முக்கியமானவை!

நமது திராவிட மாடல் அரசு ஆட்சிப் பொறுப்பேற்ற பிறகு, இந்த மூன்றாண்டுக் காலத்தில் இதுவரை 872 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையெழுத்தாகி இருக்கின்றன. இதன் மொத்த மதிப்பு 9 இலட்சத்து 99 ஆயிரத்து 93 கோடி ரூபாய். இதன் மூலமாக, 18 இலட்சத்து 89 ஆயிரத்து 234 நபர்களுக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும். இதில் 234 திட்டங்கள் உற்பத்தியைத் தொடங்கி விட்டார்கள். 4 இலட்சத்து 16 ஆயிரத்து 717 பேருக்கு வேலைவாய்ப்பு கிடைத்துவிட்டது. மற்ற ஒப்பந்தங்களும் படிப்படியாக அடுத்துச் செயல்பாட்டுக்கு வரும்.

முதலீடுகளை ஈர்ப்பதற்கான என்னுடைய கடந்த வெளிநாட்டுப் பயணங்கள் மூலமாகப் போடப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தங்களால் பல நிறுவனங்கள் தொடங்கப்பட்டுச் செயல்பாட்டிலும் இருக்கின்றன. இதையெல்லாம் நீங்கள் பார்த்துக்கொண்டுதான் இருக்கிறீர்கள். அதேபோல், தற்போதைய பயணம் மூலம் மேற்கொள்ளும் ஒப்பந்தங்களையும் நான் தொடர்ந்து கண்காணித்து அதை எல்லாம் செயல்பாட்டுக்குக் கொண்டு வருவேன்.

இந்த முதலீடுகள் எல்லாம் தமிழ்நாட்டை 2030-க்குள் ஒரு ட்ரில்லியன் டாலர் பொருளாதாரமாக மாற்றும் நம்முடைய இலக்கை விரைவாக அடைய உதவும். இதற்காக உலகின் கவனத்தைத் தமிழ்நாட்டை நோக்கி ஈர்க்க அமெரிக்காவின் சான் ஃபிரான்சிஸ்கோ - சிகாகோ மாநகரங்களுக்கு நான் செல்கிறேன். ஒப்பந்தங்கள் கையெழுத்தாகும் விவரங்களைத் திரும்பி வரும்போது உங்களுக்கு நான் நிச்சயம் தெரிவிப்பேன்.

அமெரிக்க வாழ் தமிழர்களைச் சந்திக்க இருக்கிறேன். உங்கள் எல்லோருடைய வாழ்த்துக்களோடும் இந்தப் பயணம் நிச்சயமாக வெற்றிகரமானதாக அமையும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அமெரிக்கா சான்பிரான்சிஸ்கோவில் நமது முதல்வர்

சென்னையிலிருந்து கடந்த 27.08.2024 அன்று இரவு 10 மணியளவில் விமானம் மூலம் புறப்பட்டு அமெரிக்காவிலுள்ள சான்பிரான்சிஸ்கோ மாகாணத்திற்குச் சென்றுள்ளார்கள். 29.08.2024

அன்று சான்பிரான்சிஸ்கோ விமான நிலையம் வந்து சேர்ந்த மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்களை அமெரிக்க வாழ் தமிழ் மக்கள் பெருந்திரளாகக் கூடி நின்று உற்சாகமான முறையில் வரவேற்பு அளித்தனர். அந்த நிகழ்ச்சியில் சான்பிரான்சிஸ்கோவிற்கான இந்தியத் துணைத் தூதர் திரு. ஸ்ரீகர் ரெட்டி, மாண்புமிகு தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி. ராஜா ஆகியோரும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை மகிழ்ச்சியுடன் வரவேற்றார்கள்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் இந்த அமெரிக்கப் பயணத்தின்போது அங்குள்ள பல்வேறு தொழில் நிறுவனங்களைச் சேர்ந்த முதலீட்டாளர்களைச் சந்திக்கத் திட்டமிட்டுள்ளார்கள்.

4,100 நபர்களுக்கு வேலைவாய்ப்பளிக்கும் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் முன்னிலையில் 29.08.2024 அன்று அமெரிக்கா நாட்டின், சான்பிரான்சிஸ்கோ நகரில் நடைபெற்ற முதலீட்டாளர்கள் மாநாட்டில், உலகின் முன்னணித் தொழில் நிறுவனங்களான நோக்கியா, பேபால், ஈல்ட்டு இன்ஜினியரிங் சிஸ்டம்ஸ், மைக்ரோசிப் டெக்னாலஜி, இன்பிங்ஸ் ஹெல்த்கேர், அப்ளைடு மெட்டீரியல்ஸ் ஆகிய 6 முன்னணி நிறுவனங்களுடன் 900 கோடி ரூபாய் முதலீட்டில் சென்னை, கோவை, மதுரையில் 4,100 நபர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் வகையில் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் மேற்கொள்ளப்பட்டன.

தமிழ்நாட்டின் இளைஞர்களுக்கு அதிக எண்ணிக்கையிலான வேலைவாய்ப்புகளை உருவாக்கிடும் நோக்கத்துடன் மாநிலத்தில் தொழில் வளர்ச்சியை மேம்படுத்துவதற்காக, தமிழ்நாடு அரசு பல்வேறு சிறப்பான முன்னெடுப்புகளை மேற்கொண்டு வருகிறது. இந்தியாவிலேயே இரண்டாவது பெரிய பொருளாதார மாநிலமாக விளங்கி வரும் தமிழ்நாட்டினை, 2030-ஆம் ஆண்டிற்குள் ஒரு டிரில்லியன் அமெரிக்க டாலர் என்கிற பொருளாதார இலக்கை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையிலான அரசு நிர்ணயித்து, அதற்கான முன்னெடுப்புகளைச் சிறப்பாக மேற்கொண்டு வருகிறது.

அதன் ஒரு பகுதியாக, தமிழ்நாட்டிற்கு தொழில் முதலீடுகளை ஈர்ப்பதற்காக மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அமெரிக்காவிற்கு அரசுமுறைப் பயணமாக 27.08.2024 அன்று இரவு சென்னையிலிருந்து புறப்பட்டு சான்பிரான்சிஸ்கோ நகருக்கு 28.08.2024 அன்று சென்றடைந்தார்.

சான்பிரான்சிஸ்கோ நகரில் நடைபெற்ற முதலீட்டாளர்கள் மாநாட்டில், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் முன்னிலையில் கீழ்க்கண்ட புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் மேற்கொள்ளப்பட்டன. அதன் விவரங்கள்:

நோக்கியா நிறுவனத்துடன் புரிந்துணர்வு ஒப்பந்தம்

நோக்கியா நிறுவனமானது ஃபின்னிஷ் பன்னாட்டு தொலைத்தொடர்பு, தகவல் தொழில்நுட்பம் மற்றும் நுகர்வோர் மின்னணு நிறுவனம் ஆகும். இது ஒரு பார்ச்சூன் 500 நிறுவனங்களில் ஒன்றாகும்.

சென்னையில் நோக்கியா நிறுவனம் பன்னாட்டு விநியோக மையம் மற்றும் உற்பத்தி நிலையத்தை நிறுவி செயல்பட்டு வருகிறது.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் முன்னிலையில் நோக்கியா நிறுவனத்திற்கும் தமிழ்நாடு அரசிற்கும் இடையே 450 கோடி ரூபாய் முதலீட்டில், 100 நபர்களுக்கு வேலைவாய்ப்பு

அளித்திடும் வகையில், சிறுசேரி சிப்காட்டில் உலகின் மிகப்பெரிய நிலையான நெட்வொர்க் சோதனை வசதி கொண்ட புதிய ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு மையம் அமைப்பதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்தானது.

இந்த ஒப்பந்த நிகழ்வில், நோக்கியா நிறுவனத்தின் சார்பில் தலைமை உத்தி மற்றும் தொழில்நுட்ப அலுவலர் (Chief Strategy and Technology Officer) திரு. நிஷாந்த் பத்ரா, நிலையான நெட்வொர்க் வணிகக் குழு தலைவர் (President – Fixed Network Business Group) திருமதி சாண்டி மோட்லி ஆகியோர் பங்கேற்றனர்.

பேபால் நிறுவனத்துடன் புரிந்துணர்வு ஒப்பந்தம்

பேபால் ஹோல்டிங்க்ஸ் நிறுவனம் (PayPal Holdings, Inc.) அமெரிக்க பன்னாட்டு நிதி தொழில்நுட்ப நிறுவனமாகும், இது ஆன்லைன் பணப் பரிமாற்றங்களை ஆதரிக்கும் பெரும்பாலான நாடுகளில் ஆன்லைன் பணப் பரிவர்த்தனைக்கு உதவுகிறது. காசோலைகள் மற்றும் பண ஆணைகள் போன்ற பாரம்பரிய காகித முறைகளுக்கு மின்னணு மாற்றாக இது செயல்படுகிறது.

பேபால் நிறுவனம் சென்னையில் சுமார் 2,500-க்கும் மேற்பட்ட பணியாளர்களைக் கொண்டு செயல்பட்டு வருகிறது.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் முன்னிலையில் பேபால் நிறுவனத்திற்கும் தமிழ்நாடு அரசிற்கும் இடையே சுமார் 1,000 நபர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் வகையில் செயற்கை நுண்ணறிவிற்கான மேம்பட்ட வளர்ச்சி மையம் (Advanced development center focussed on AI) அமைப்பதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்தானது.

இந்த ஒப்பந்த நிகழ்வில், பேபால் நிறுவனத்தின் செயல் துணைத் தலைவர் (EVP – Chief Technology Officer) திரு. ஸ்ரீனி வெங்கடேசன், சர்வதேச அரசாங்க உறவுகள் தலைவர் (Head of International Government Relations) திரு. ஜி-யாங் டேவிட் ஃபேன் ஆகியோர் பங்கேற்றனர்.

ஈல்ட் இன்ஜினியரிங் சிஸ்டம்ஸ் நிறுவனத்துடன் புரிந்துணர்வு ஒப்பந்தம்

ஈல்ட் இன்ஜினியரிங் சிஸ்டம்ஸ் நிறுவனம் (Yield Engineering Systems) செமிகண்டக்டர் சுற்றுச்சூழல் அமைப்பிற்கான தொழில்நுட்ப தீர்வுகள், செயல்முறை உபகரணங்களை வழங்கும் முன்னணி நிறுவனமாகும். மேம்பட்ட பேக்கேஜிங், ஐஓடி, லைஃப் சயின்ஸ், ஏஆர்.விஆர், எம்இஎம்எஸ், பவர் உள்ளிட்ட பலதரப்பட்ட சந்தைகளில் தொழில்நுட்பத் தலைவர்களுக்கு புதுமைகளை வழங்கும் மேற்பரப்பு, பொருட்களை மேம்படுத்தும் அமைப்புகள் (அதாவது வெப்ப செயலாக்கம், ஈரச் செயலாக்கம், பிளாஸ்மா சுத்தம் செய்தல், பூச்சு) போன்றவற்றை வழங்குகின்றன. (They provide surface and materials enhancement systems (i.e. thermal processing, wet processing, plasma cleaning, and coating) that enable innovation for technology leaders across a wide spectrum of markets, including advanced packaging, IoT, life sciences, AR/VR, MEMS, power, and sensors)

அமெரிக்க நாட்டின், கலிபோர்னியாவின் ஃப்ரீமாண்ட் நகரத்தைத் தலைமையிடமாக கொண்டு ஈல்ட் இன்ஜினியரிங் சிஸ்டம்ஸ் நிறுவனம் செயல்பட்டு வருகிறது. தமிழ்நாட்டில் இந்நிறுவனம் கோவையில் பொறியியல் மையத்தை நிறுவி செயல்பட்டு வருகிறது.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் முன்னிலையில் ஈல்ட் இன்ஜினியரிங் சிஸ்டம்ஸ்

நிறுவனத்திற்கும் தமிழ்நாடு அரசிற்கும் இடையே 150 கோடி ரூபாய் முதலீட்டில் 300 நபர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் வகையில் கோயம்புத்தூர் சூலூரில் குறைக்கடத்தி உபகரணங்களுக்கான தயாரிப்பு மேம்பாடு, உற்பத்தி வசதி (Product development and manufacturing facility for Semiconductor equipment) அமைப்பதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்தானது.

இந்த ஒப்பந்த நிகழ்வில், ஈல்ட் இன்ஜினியரிங் சிஸ்டம்ஸ் நிறுவனத்தின் தலைவர், தலைமை செயல் அலுவலர் திரு.ரமாகாந்த் அலபதி, முதன்மை நிதி அலுவலர் திரு. பிரபாத் மிஸ்ரா ஆகியோர் பங்கேற்றனர்.

மைக்ரோசிப் நிறுவனத்துடன் புரிந்துணர்வு ஒப்பந்தம்

மைக்ரோசிப் டெக்னாலஜி நிறுவனமானது (Microchip Technology Inc.) ஸ்மார்ட், இணைக்கப்பட்ட, பாதுகாப்பான உட்பொதிக்கப்பட்ட கட்டுப்பாட்டுத் தீர்வுகளின் முன்னணிக் குறைக்கடத்தி சப்ளையர் ஆகும். இது பல்வேறு வகையான பயன்பாடுகளுக்கு (5G, EVகள், IOT, தரவு மையங்கள் போன்றவை) ஸ்மார்ட், இணைக்கப்பட்ட, பாதுகாப்பான கட்டுப்பாட்டான தீர்வுகளின் முன்னணிக் குறைக்கடத்தி சப்ளையர் ஆகும். (Semiconductor supplier of smart, connected and secure embedded control solutions. It develops, manufactures and sells smart, connected and secure embedded control solutions for a wide variety of applications (5G, EVs, IOT, Data Centers, Edge Community etc). Their products are microcontroller, mixed-signal, analog, and Flash-IP integrated circuits).

அரிசோனாவின் சாண்ட்லர் நகரை தலைமையிடமாகக்கொண்டு செயல்பட்டு வரும் மைக்ரோசிப் நிறுவனம், உலகளவில் அமெரிக்கா, சீனா, தாய்லாந்து, தென் கொரியா போன்ற நாடுகளில் பல உற்பத்தி நிலையங்களைக் கொண்டுள்ளது. இந்நிறுவனம் பார்ச்சூன் 500 நிறுவனங்களில் ஒன்றாகும்.

மைக்ரோசிப் நிறுவனம் 2012 முதல் சென்னையில் இயங்கி வருகிறது. சென்னை மையம் IC வடிவமைப்பு, கணினி உதவி வடிவமைப்பு (CAD), பயன்பாடு மற்றும் மென்பொருள் மேம்பாட்டில் கவனம் செலுத்துகிறது. சென்னையிலுள்ள இந்நிறுவனத்தில் சுமார் 550 பணியாளர்கள் பணிபுரிந்து வருகின்றனர்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் முன்னிலையில் மைக்ரோசிப் நிறுவனத்திற்கும் தமிழ்நாடு அரசிற்கும் இடையே 250 கோடி ரூபாய் முதலீட்டில் 1,500 நபர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் வகையில் சென்னையில் குறைக்கடத்தி தொழில்நுட்பத்தில் ஆராய்ச்சி, மேம்பாட்டு மையம் (R&D Center in Semiconductor Technology)

அமைப்பதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்தானது.

இந்த ஒப்பந்த நிகழ்வில், மைக்ரோசிப் நிறுவனத்தின் மூத்த கார்ப்பரேட் துணைத் தலைவர் திரு. பேட்ரிக் ஜான்சன், கார்ப்பரேட் துணைத் தலைவர் திரு. புரூஸ் வேயர் ஆகியோர் பங்கேற்றனர்.

இன்பிங்ஸ் ஹெல்த்கேர் நிறுவனத்துடன் (Infinx Healthcare) புரிந்துணர்வு ஒப்பந்தம்

இன்பிங்ஸ் ஹெல்த்கேர் ஒரு முன்னோடி சுகாதாரத் தொழில்நுட்ப நிறுவனமாகும். இந்நிறுவனம் நோயாளிகளுக்கு விரைந்து உதவக்கூடியவை, உரிமைகோரலின் துல்லியம், ஒருமைப்பாட்டை மேம்படுத்துகின்றன, தடைகளை அகற்றுகின்றன. (Infinx Healthcare is a pioneering healthcare technology company. They accelerate patient access, improve claim accuracy and charge integrity, reduce denials, and maximize reimbursements with the latest revenue cycle technology leveraged by specialists with Revenue Cycle Management, clinical and compliance expertise. They work closely with healthcare providers to overcome their revenue cycle challenges by leveraging automation and intelligence to increase reimbursements for patient care delivered).

இன்பிங்ஸ் ஹெல்த்கேர் நிறுவனம் கலிபோர்னியாவின் சான் ஜோஸ் நகரைத் தலைமையகமாகக் கொண்டு செயல்பட்டு வருகிறது. தமிழ்நாட்டில் இந்நிறுவனம் தொழில் தொடங்கிட கடந்த ஜூலை மாதம் மதுரையில் உள்ள எல்காட்டில் அலுவலக இடத்தைத் தேர்வு செய்துள்ளது.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் முன்னிலையில் இன்பிங்ஸ் ஹெல்த்கேர் நிறுவனத்திற்கும் தமிழ்நாடு அரசிற்கும் இடையே 50 கோடி ரூபாய் முதலீட்டில் 700 நபர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் வகையில் மதுரை எல்காட்டில் தொழில்நுட்பம், உலகளாவிய விநியோக மையம் (Technology and Global Delivery Center) அமைப்பதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்தானது.

இந்த ஒப்பந்த நிகழ்வில், இன்பிங்ஸ் ஹெல்த்கேர் நிறுவனத்தின் தலைமை மார்க்கெட்டிங் அலுவலர் திருமதி ராதிகா டாண்டன் அவர்கள் பங்கேற்றார்.

அப்ளைடு மெட்டீரியல்ஸ் (Applied Materials) நிறுவனத்துடன் புரிந்துணர்வு ஒப்பந்தம்

அப்ளைடு மெட்டீரியல்ஸ் உலகின் நம்பர் 1 குறைக்கடத்தி மற்றும் காட்சி உபகரணங்கள் நிறுவனம். அவர்கள் சில்லுகள் மற்றும் மேம்பட்ட காட்சிகளை தயாரிக்கப் பயன்படும் பொருள் பொறியியல் தீர்வுகளில் முன்னணியில் உள்ளனர்.

(Applied Materials is World's no. 1 semiconductor and display equipment company. They are leaders in materials engineering solutions which are used to produce chips and advanced displays).

அப்ளைடு மெட்டீரியல்ஸ் நிறுவனமானது கலிபோர்னியாவின் சாண்டா கிளாரா நகரை கார்ப்பரேட் தலைமையகமாகக் கொண்டு செயல்பட்டு வருகிறது. உலகளவில் 24 நாடுகளில் 150 நகரங்களில் செயல்பட்டு வரும் பார்ச்சூன் 500 நிறுவனங்களில் ஒன்றாகும்.

தமிழ்நாட்டில் அப்ளைடு மெட்டீரியல்ஸ் நிறுவனம் விற்பனை, சேவை, கள ஆதரவு வசதிகளைச் சென்னையிலும், சேவை, கள ஆதரவு வசதிகளைக் கோயம்புத்தூரிலும் அமைத்துள்ளது.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் முன்னிலையில் அப்ளைடு மெட்டீரியல்ஸ் நிறுவனத்திற்கும் தமிழ்நாடு அரசிற்கும் இடையே 500 நபர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் வகையில் சென்னை, தரமணியில் செமிகண்டக்டர் உற்பத்தி, உபகரணங்களுக்கான மேம்பட்ட செயற்கை நுண்ணறிவுத் தொழில்நுட்ப மேம்பாட்டு மையம் (Advanced artificial intelligence enabled technology development center for semiconductor manufacturing and equipment) அமைப்பதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்தானது.

இந்நிகழ்ச்சியில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஆற்றிய உரை:

எனதருமை அமெரிக்க வாழ் தமிழ் உடன்பிறப்புக்களே,

அனைவருக்கும் என்னுடைய மாலை வணக்கம்.

சான்பிரான்ஸிஸ்கோ-வின் முதலீட்டாளர்கள் மாநாட்டில் பங்கேற்பதில் நான் பெருமைப்படுகிறேன், மகிழ்ச்சியடைகிறேன். உலகின் மிகப்பெரிய மதிப்புமிக்க பெருமை அமெரிக்காவிற்கு உண்டு என்பது அனைவராலும் ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கிற உண்மை. அப்படிப்பட்ட அமெரிக்காவிற்கு நான் வந்திருப்பதைப் பெருமையாகக் கருதுகிறேன்.

இந்தியாவில் உள்ள தமிழ்நாடு என்ற மாநிலத்தில் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட முதலமைச்சர் நான். திராவிட முன்னேற்றக் கழகம் என்ற 75 ஆண்டுகள் பழமையான அரசியல் இயக்கத்தின் தலைவராக நான் இருக்கிறேன். இப்போது தமிழ்நாட்டை ஆறாவது முறையாக ஆட்சி செய்து கொண்டிருக்கிறோம். இந்திய நாட்டில் பலமுறை எங்கள் கூட்டணிப் பிரதமர்களை உருவாக்கி ஆட்சியில் இருந்திருக்கிறது.

எனது தந்தையைப் பற்றி உங்களில் பலர் கேள்விப்பட்டிருப்பீர்கள். முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் தமிழ்நாட்டில் 5 முறை முதலமைச்சராக இருந்திருக்கிறார். இந்திய நாட்டில் பல பிரதமர்களை உருவாக்கியிருக்கிறார். அப்படிப்பட்ட புகழுக்குச் சொந்தக்காரர் அவர். 1971-ஆம் ஆண்டு முதலமைச்சராக இருந்தபோது, தலைவர் கலைஞர் அமெரிக்காவிற்கு வருகை தந்தார். இப்பொழுது நான் வருகை தந்திருக்கிறேன்.

சீரான மற்றும் பரவலான வளர்ச்சி

புகழ்பெற்ற அமெரிக்க நிறுவனங்கள் பல இந்தியாவில் குறிப்பாகத் தமிழ்நாட்டில் தொழில் நிறுவனங்களை நடத்தி வருகின்றன. சென்னை பற்றி நீங்கள் அனைவரும் நன்றாக அறிந்திருப்பீர்கள். இந்தியாவிலேயே இரண்டாவது பெரிய பொருளாதாரமாகத் தமிழ்நாடு இன்றைக்கு விளங்கிக் கொண்டிருக்கிறது. 48 விழுக்காடு நகரமயமாக்கப்பட்டுள்ளது. இந்தியாவில் உள்ள பெரிய மாநிலங்களில் அதிகளவில் நகரமயமாக்கப்பட்டுள்ள மாநிலம் தமிழ்நாடு தான்.

நிலையான வளர்ச்சி இலக்குகளை செயல்படுத்துவதில் முதல் மாநிலமாகவும் தமிழ்நாடு விளங்குகிறது. சீரான, பரவலான வளர்ச்சியை உறுதிப்படுத்தும் வகையில் பல்வேறு வளர்ச்சி மையங்கள் மாநிலம் முழுவதும் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. மனிதவளங்கள், திறன்களை முன்வைத்து வளர்ச்சியை மேற்கொண்டு வரும் மாநிலமாகவும் தமிழ்நாடு திகழ்கிறது.

இந்தியாவின் முன்னணி உயர்கல்வி நிறுவனங்களில் கிட்டத்தட்ட 20 விழுக்காடு தமிழ்நாட்டில் உள்ளது. இந்தியாவின் தேசிய சராசரியைவிட இருமடங்கு அதிகமாக உயர்கல்வியில் மாணவர்கள் சேரும் விகிதத்தை 48 சதவிகிதம் கொண்ட மாநிலம் தமிழ்நாடு.

இந்தியாவில் உள்ள தொழிற்சாலைகளில் பணிபுரியும் பெண்களில் சுமார் 45 சதவிகிதம் பேர் தமிழ்நாட்டைச் சார்ந்தவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

தெற்கு ஆசியாவில் சுகாதார சுற்றுலாவில் முன்னணி மாநிலமாகமாகவும் தமிழ்நாடு திகழ்ந்து கொண்டிருக்கிறது. இத்தகைய வளர்ச்சி மிகுந்த மாநிலமான தமிழ்நாட்டிற்குத் தொழில் துவங்க வருமாறு உங்களை எல்லாம் அழைப்பதற்காகதான் நான் இங்கே வருகை தந்திருக்கிறேன்.

உலகளாவிய திறந்த மையங்கள்

தமிழ்நாட்டிற்கும், அமெரிக்காவிற்கும் தொழில்ரீதியான உறவு எப்போதுமே பலமாக இருந்துவந்துள்ளது.300-க்கும் மேற்பட்ட அமெரிக்க நிறுவனங்கள் தமிழ்நாட்டில் தங்கள் திட்டத்தினை நிறுவியுள்ளனர். சேவைகள், சேவை மையங்கள், உலகளாவிய திறன் மையங்கள், உற்பத்தி, ஆராய்ச்சி, மேம்பாடு உட்பட பல்வேறு துறைகளில் தமிழ்நாட்டில் மேற்கொண்டிருக்கிறார்கள். இதைத் தமிழ்நாட்டின் தொழில் வளர்ச்சிக்கான ஒரு அங்கீகாரமாகவே நான் கருதுகிறேன்.

காக்னிசன்ட், ஃபோர்டு, கேட்டர்பில்லர், ஃப்ளெக்ஸ்ட்ரானிக்ஸ், சான்மினா, விஸ்டியான், எச்.பி, அப்ளைடு மெட்டீரியல்ஸ், ஜெனரல் எலெக்ட்ரிக், யுபிஎஸ், ஃபைசர், ஹனிவெல், பேபால், குவால்காம் போன்ற பெரும் நிறுவனங்கள் தங்களது உற்பத்தித் திட்டங்களைத் தமிழ்நாட்டில் நிறுவியுள்ளன. இந்த வரிசையில் இன்னும் பல நிறுவனங்கள் தமிழ்நாட்டிற்கு

வரவேண்டும். ஏற்கனவே, தொழில் துவங்கியுள்ள நிறுவனங்களும், தங்கள் தொழிலை இன்னும் விரிவுபடுத்தவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

உங்களது ஒவ்வொரு நிறுவனமும், ஒவ்வொரு விதத்தில் சிறந்தது. எனவே உங்கள் ஒவ்வொருவரையும் மிக முக்கியமாக நான் கருதுகிறேன். சான்பிரான்ஸிஸ்கோ பே (Bay), கலிஃபோர்னியாவிலிருந்து எங்களது அழைப்பை ஏற்று மதித்து இங்குத் திரளாக குழுமியிருக்கக்கூடிய முதலீட்டாளர்களை நான் அன்புடன் வரவேற்கவும் கடமைப்பட்டிருக்கிறேன்.

ஆசிய நாடுகளின் நுழைவு வாயில்

சான்பிரான்ஸிஸ்கோ பே பகுதி குறிப்பாக சிலிக்கான் வேலி தொழில்நுட்பத்துறையின் வளர்ச்சிக்கு பெயர் பெற்ற பகுதி என்பது உலகம் அறிந்த உண்மை. தமிழ்நாட்டின் முன்னேற்றப் பயணத்தில் பதிலளிக்கக்கூடிய துறைகளை பற்றி விவாதிக்க அமெரிக்காவில் உள்ள பெருந்திட்டங்களின் தலைவர்களை ஒரு பொதுமேடையில் கொண்டு வருவதே இந்த மாநாட்டினுடைய முக்கிய குறிக்கோள்.

தமிழ்நாட்டின் பொருளாதார வளர்ச்சி விரைபடுத்துவதற்கான வழிகளைக் கண்டறியும் பயனுள்ள விவாதங்களுக்கு இந்த மாநாடு பெரும் உதவிகரமாக அமையும்.

ஆசியா நாடுகளின் நுழைவு வாயிலான சென்னையில் இருந்துதான் நான் வருகை தந்துள்ளேன். தமிழ்நாடு இன்று உலகில் வேகமாக வளர்ந்துவரும் பொருளாதாரங்களில் ஒன்று. 39,000-க்கும் மேலான தொழிற்சாலைகள், 2.6 மில்லியன் அளவிற்குத் தொழிற்சாலைகளில் பணிபுரியும் பணியாளர்கள் என்ற அளவில், அகில இந்திய அளவில் முதலிடம் வகிக்கும் மாநிலமாகத் தமிழ்நாடு விளங்குகிறது.

இந்தியாவின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் தமிழ்நாட்டின் பங்கு அதிக அளவில் உள்ளது. மின்னணுவியல், மோட்டார் வாகனம், மோட்டார் வாகன உதிரி பாகங்கள், ஜவுளி, ஆடைகள் ஆகிய பொருட்களின் ஏற்றுமதியில் இந்தியாவிலேயே முதல் மாநிலமாக விளங்குகிறது. ஏற்றுமதி தயார்நிலைக் குறியீட்டிலும் தமிழ்நாடு முதலிடம் வகிக்கிறது. சேவைகள் ஏற்றுமதியில் இரண்டாமிடம் வகிக்கிறது. தமிழ்நாட்டில் ஏற்கனவே சிறந்து விளங்கும் அறிவுசார் வளர்ச்சியை மேலும் மேம்படுத்தும் வகையில், சமீபத்தில் இந்தியாவிலேயே முதன்முறையாக செயற்கை நுண்ணறிவு மையம் சமீபத்திலே சென்னையில் துவக்கி வைக்கப்பட்டது. இதன்மூலம் இத்துறையின் எதிர்கால வளர்ச்சி மேலும் மேம்படும் என்று நான் உறுதியாக நம்புகிறேன்.

நவீன உள்கட்டமைப்பு, ஏராளமான வளங்கள், திறன்மிகு பணியாளர்களால் உலக முதலீட்டாளர்கள் வெகுவாக ஈர்க்கப்படுகிறார்கள். மக்களின் ஆற்றலைத் தமிழ்நாடு நன்கு பயன்படுத்துகிறது. தமிழ்நாட்டின் மக்கள் தொகையில் இளைஞர்கள், பணிபுரியும் வயதினர் ஆகியோரின் மக்கள் தொகை சற்றே அதிகம். இது எதிர்கால வளர்ச்சிக்கு ஒரு தனித்துவமான நன்மையை வழங்குகிறது. எனினும் அதற்கேற்றவாறு வேலைவாய்ப்புக்களை உருவாக்குவது எங்களுடைய இலக்கு. இதன்பொருட்டு, பல்வேறு முன் முயற்சிகளை நாங்கள் மேற்கொண்டு வருகிறோம்.

இலட்சிய இலக்கு

2030-ஆம் ஆண்டுக்குள் தமிழ்நாட்டை 1 ட்ரில்லியன் அமெரிக்க டாலர் பொருளாதாரமாக மாற்றவேண்டும் என்பது எங்களுடைய இலட்சிய இலக்கு. இதை அடைவதற்காக மூலதனம் அதிகம் உள்ள தொழில்களையும், வேலைவாய்ப்பினை அதிகப்படுத்தும் தொழில்களை ஈர்ப்பதில் நாங்கள் கவனம் செலுத்தி வருகிறோம். இவ்வாறான இருமுனை முயற்சி தற்போது சாதகமான பலன்களை அளித்து வருகிறது.

இவ்வாறான முன் முயற்சியின் ஒரு அங்கமாகதான் 2024-ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 7, 8-ஆம் தேதிகளில் சென்னையில் உலக முதலீட்டாளர்கள் மாநாடு 2024-யை மிக வெற்றிகரமாக நடத்திக் காட்டினோம். 35-க்கும் மேற்பட்ட வெளிநாடுகளிலிருந்துமுதலீட்டாளர்கள், பன்னாட்டு பிரதிநிதிகள், புகழ்மிக்க தொழில் நிறுவனங்கள் இந்த நிகழ்ச்சியில் பங்கேற்றார்கள்.

அதிக அளவில் வேலைவாய்ப்பு

அமெரிக்க பிரதிநிதித்துவம் இந்த மாநாட்டில் குறிப்பிடத்தக்க வகையில் அமைந்தது. அந்த மாநாடுகள் மூலமாக நாங்கள் மேற்கொண்ட புரிந்துணர்வு ஒப்பந்தங்களின் எண்ணிக்கை எவ்வளவு தெரியுமா? 631. ஈர்க்கப்பட்ட முதலீடுகளின் மதிப்பு 80 பில்லியன் அமெரிக்க டாலர்கள். இதன் மூலமாக, 1.4 மில்லியன் நபர்களுக்கு நேரடியாகவும்,

1.2 மில்லியன் நபர்களுக்கு மறைமுகமாக வேலைவாய்ப்பும் கிடைக்கும்.

இந்த பிரம்மாண்டமான நிகழ்வின் மூலம், உலக முதலீட்டாளர்களுக்குத் தமிழ்நாட்டின் மேல் உள்ள நம்பிக்கையை உலகத்திற்கு நாங்கள் எடுத்துக்காட்டினோம். மொத்தமாக சொல்ல வேண்டுமென்றால், கடந்த 3 ஆண்டுகளில் 3.1 மில்லியன் நபர்களுக்கு நேரடி, மறைமுக வேலைவாய்ப்பை உருவாக்கும் வகையில் கிட்டத்தட்ட 120.48 பில்லியன் அமெரிக்க டாலர் முதலீடுகளை ஈர்த்து இருக்கிறோம்.

ஆயிரக்கணக்கான இளைஞர்கள், பெண்களுக்கு அவர்கள் வசிக்கும் பகுதிக்கு அருகிலேயே வேலைவாய்ப்புக்கள் பெருமளவில் உருவாக்கப்பட்டிருக்கின்றன. இதன்மூலம், மாநிலத்தின் அனைத்துப் பகுதிகளும் சமமான அளவில், உறுதியாகச் சமூக பொருளாதார வளர்ச்சிப் பெற்று வருகிறது. இவ்வாறு ஈர்க்கப்பட்ட முதலீடுகளில், அமெரிக்க நிறுவனங்களின் முதலீடுகளும் பெருமளவில் உள்ளது என்பதையும் நான் உங்களுடன் மிகவும் மகிழ்ச்சியுடன் பகிர்ந்து கொள்கிறேன்.

முதலீடுகளை ஈர்க்க உகந்த மாநிலம்

இந்தியா, அமெரிக்கா ஆகிய நாடுகளுக்கு இடையேயான பொருளாதார உறவுகள் சமீபகாலங்களில் மிகப்பெரும் எழுச்சி கண்டுள்ளது. இந்தியச் சந்தைக்குள் நுழையும் அமெரிக்க நிறுவனங்களின் எண்ணிக்கை தொடர்ந்து அதிகரித்து வருகிறது. தெற்காசியாவிலேயே முதலீடுகளை ஈர்த்திட உகந்த மாநிலமாக விளங்கும் தமிழ்நாட்டில் எண்ணற்ற அமெரிக்க நிறுவனங்கள் தங்கள் திட்டங்களை இங்கே நிறுவியுள்ளார்கள். இன்னும் பல நிறுவனங்களுடன் பேச்சுவார்த்தைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதற்கு தேவையான பல்வேறு தொழில் கொள்கைகளையும், சிறப்பு ஊக்குவிப்புத் திட்டங்களையும் நாங்கள் வெளியிட்டிருக்கிறோம்.

மின்னணுவியல் கொள்கை, நிதிநுட்ப கொள்கை, ஏற்றுமதி மேம்பாட்டுக் கொள்கை ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டுக் கொள்கை ஒவ்வொரு திட்டத்திற்கும் தேவைப்படும் அனுமதிகளை விரைவாகவும், எளிதாகவும் பெற்றிடும் வகையில், ஒற்றைச்சாளர இணையத்தளத்தை ஏற்படுத்தியிருக்கிறோம். இதன்மூலம், முதலீட்டாளர்கள் தங்கள் திட்டத்திற்குத் தேவையான அனுமதிகளை ஆன்லைனிலேயே பெற்றுக்கொள்ள முடியும்.

வணிகம் புரிதலை எளிதாக்குவதற்காக நாங்கள் மேற்கொண்ட சிறப்பு முயற்சிகளின் காரணமாக, வணிகம் புரிதலை எளிதாக்கும் தரவரிசையில் சிறந்த செயல்திறன் கொண்ட மாநிலம் என்று தமிழ்நாடு வரையறுக்கப்பட்டுள்ளது.

நட்பின் அடிப்டையிலான நல்லுறவு

மின்னணுவியல் (செமிகண்டக்டர்கள்) ஆராய்ச்சி மற்றும் மேம்பாடு, அறைகலன்கள், மேம்பட்ட உற்பத்தி போன்ற துறைகளில் உங்களின் மேலான முதலீடுகளை நாங்கள் வரவேற்கிறோம். ஒருவொருக்கொருவர் பரிமாறும் நட்பின் அடிப்படையிலான நல்லுறவின் மூலமாகதான் நாம் வளரமுடியும். இந்தியாவில் உள்ள அந்த நல்லுறவை குறிப்பாகத் தமிழ்நாட்டின் முன்னேற்றத்திற்கு அமெரிக்க நிறுவனங்கள் பயன்படுத்திட வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

உயர்ந்த மனித வாழ்வியல் நெறியைக் கொண்ட நாடு அமெரிக்கா. அந்த அடிப்படையோடு, தமிழ்நாட்டின் தொழில் மற்றும் பொருளாதார மேம்பாட்டிற்கு நீங்கள் பங்களிக்க முதலீட்டாளர்களை சிவப்பு கம்பளம் விரித்து தமிழ்நாடும் உங்களை வரவேற்க காத்திருக்கிறது.

எங்களின் அரசுப் பயணம் பெரும் வெற்றி பெற உறுதுணையாக நின்ற சான்பிரான்ஸிஸ்கோ துணைத் தூதர் டாக்டர் ஸ்ரீகர் ரெட்டி அவர்களுக்கும், அவரது குழுவினைச் சார்ந்த அனைத்து தூதரக அதிகாரிகளுக்கும், இதையெல்லாம் ஒருங்கிணைத்த திரு.கௌரவ் வர்மா அவர்களுக்கும், திரு.லேலா கண்ணப்பன் அவர்களுக்கும், திரு. என்.ரங்கசாமி அவர்களுக்கும் என்னுடைய நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

இம்மாநாடு சிறப்புற நடைபெறுவதற்குப் பெருமளவில் வருகை புரிந்துள்ள தொழிலதிபர்களுக்கும், பல்வேறு நிறுவனங்களின் தலைமை அதிகாரிகளுக்கும் எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொண்டு, உங்களை எல்லாம் இந்த மாலை நேரத்தில் மகிழ்ச்சியோடு காண்பதற்கு ஒரு நல்வாய்ப்பை ஏற்படுத்தித் தந்திருக்கக்கூடிய அனைவருக்கும் என்னுடைய இதயபூர்வமான நன்றியைத் தெரிவித்து என் உரையை நிறைவு செய்கிறேன்.

நம்மைக் காக்கும்... நாட்டைக் காப்போம்...

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் 15.08.2024 அன்று சென்னை, தலைமைச் செயலகக் கோட்டை கொத்தளத்தில் தேசியக் கொடியினை ஏற்றி வைத்து சுதந்திரத் திருநாள் விழாப் பேருரை.

*"தாயின் மணிக்கொடி பாரீர்! - அதைத்
தாழ்ந்து பணிந்து புகழ்ந்திட வாரீர்!*

– என்ற தேசியக்கவி பாரதியின் பாடல் வரிகளைப் பாடும் தகுதியை நமக்குத் தந்த இந்திய நாட்டு விடுதலை வீரர்கள் அத்தனை பேரையும் வணங்கி என் உரையைத் தொடங்குகிறேன்.

மாண்புமிகு தமிழ்நாடு சட்டப்பேரவைத் தலைவர் அவர்களே!

மூத்த அமைச்சர் திரு. துரைமுருகன் உள்ளிட்ட மாண்புமிகு அமைச்சர் பெருமக்களே!

மாண்பமை நீதி அரசர்களே!

தலைமைச் செயலாளர் உள்ளிட்ட அரசு உயர் அலுவலர்களே!

காவல்துறைத் தலைவர் உள்ளிட்ட காவல்துறை அதிகாரிகளே!

சட்டமன்ற, நாடாளுமன்ற, உள்ளாட்சி அமைப்புகளின் மக்கள் பிரதிநிதிகளே!

விடுதலைப் பெருவிழாவில் பங்கேற்க வந்திருக்கும் பொதுமக்களே!

உங்கள் அனைவருக்கும் வணக்கம்.

நாட்டு மக்கள் அனைவருக்கும் எனது மனமார்ந்த விடுதலை நாள் நல்வாழ்த்துக்களை முதலில் தெரிவித்துக் கொள்கிறேன்.

விடுதலையைப் பாடுபட்டுப் பெற்றுக் கொடுத்த தியாகிகளைப் போற்றுவோம். அவர்களின் குடும்பத்தினருக்கு நன்றியைத் தெரிவிப்போம். எந்த நோக்கத்துக்காக அவர்கள் போராடினார்களோ, அந்த நோக்கம் நிறைவேற எந்நாளும் உழைப்போம் என்று இந்நாளில் உறுதி ஏற்போம்.

கரம் கோர்த்த தமிழ்நாட்டு வீரர்கள்

இந்த விடுதலை எளிதாகக் கிடைத்த விடுதலை அல்ல. முந்நூறு ஆண்டு காலப் போராட்டத்துக்குப் பின்பு கிடைத்த சுதந்திரம் இது. இரத்தத்தையே வியர்வையாகத் தந்து, தங்கள் உடலையே விடுதலை உலைக்களத்துக்கு உணவாகத் தந்த எண்ணற்ற தியாகிகள் நம் இந்திய மண்ணில் உண்டு. அதிலும், குறிப்பாகத் தமிழ்நாட்டில் அதிகம் உண்டு. இந்தியத் தேசிய இராணுவத்தை உருவாக்கி, வெளிநாடுகளின் உதவியையும் பெற்று நேதாஜி சுபாஷ் சந்திர போஸ் படை நடத்தியபோது, கரம் கோர்த்தவர்கள் தமிழ்நாட்டு வீரர்கள். விடுதலையை அடைய கால நிர்ணயம் இல்லை என்று தெரிந்தும், உயிரையே ஈந்த மாவீரர்கள் வாழ்ந்த மண், இந்தத் தமிழ் மண். அறவழியில், எதிரியைப் பணிய வைத்த அண்ணல் காந்தியடிகளின் பின்னால் முழு மனதோடு இந்தியா அணிவகுத்தது. அதிலும் தமிழ்நாடு முழுமையாகக் கை கோர்த்து நின்றது.

*"கத்தியின்றி இரத்தமின்றி யுத்தமொன்று வருகுது
சத்தியத்தின் நித்தியத்தை நம்பும் யாரும் சேருவீர்"*

– என்று நாமக்கல் கவிஞர் பாடிய பாடல் வரிகளுக்கு ஏற்பச் சத்தியப் பாதையில் எத்தனை சோதனைகள் வந்தாலும், அணிவகுத்தவர்கள் தமிழ்நாட்டுத் தியாகிகள். இவர்களின் தியாகத்தால்தான், 1947 ஆகஸ்ட் 15-ஆம் நாள் விடுதலைக் காற்றைச் சுவாசித்தோம். 'நமக்கான நாடு நமதே' என்பதை உணர்ந்தோம். நினைத்துப் பாருங்கள், 77 ஆண்டுகளைக் கடந்துவிட்டது விடுதலை இந்தியா. தியாகிகளின் கனவான அனைவருக்குமான இந்தியாவை நாம் உருவாக்கி வளர்த்து வருகிறோம். வேற்றுமையில் ஒற்றுமை, ஒருமைப்பாடு, ஒருங்கிணைந்த வளர்ச்சி இவற்றின் ஒன்றுபட்ட வலிமையே நாட்டின் வல்லமையாக உலகுக்குக் காட்டி வருகிறோம். ஒரு வண்ணமல்ல நமது கொடி, அது மூவண்ணக் கொடி! நமது பன்முகத் தன்மையின் அடையாளம்



இந்தக் கொடி!

இதுவும் ஒரு விடுதலைப் போராட்டம்தான்

விடுதலை நாள் என்பது, அரசியல் விடுதலை நாளாக மட்டுமல்லாமல், பண்பாட்டு விழாவாக ஒட்டுமொத்த இந்திய மக்களால் கொண்டாடப்படுகிறது. ஆகஸ்ட் 15 என்பது ஆனந்த சுதந்திரம் அடைந்த நாள் மட்டுமல்ல, ஆனந்தமான இந்தியாவை அடுத்தடுத்த ஆண்டுகளில் உருவாக்கத் திட்டமிடும் நாளாகவும் கொண்டாடிக் கொண்டிருக்கிறோம்.

இந்தத் திருநாளின் வெற்றிச் சின்னமாக விளங்கும் நம் தேசியக் கொடியைத் தமிழ்நாடு அரசின் தலைமைச் செயலக முகப்பில், ஓங்கி உயர்ந்து நிற்கும் கம்பத்தில் ஏற்றி வைத்துப் பட்டொளி வீசிப் பறக்க விட்டுள்ளோம். விடுதலை நாளில் மாநில முதலமைச்சர்கள் கொடியேற்றும் உரிமையை 50 ஆண்டுகளுக்கு முன்னால், முதன்முதலில் 1974-ஆம் ஆண்டு பெற்றுத் தந்தவர், நம் நெஞ்சங்களில் என்றென்றும் நீக்கமற வீற்றிருக்கும் நூற்றாண்டு நாயகர் முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்கள்!

இதுவும் ஒரு விடுதலைப் போராட்டம்தான்! மாநிலங்களுக்கு அதிக உரிமைகள் வேண்டும் என்பதற்கான போராட்டம்! முத்தமிழறிஞர் கலைஞர் அன்று பெற்றுத்தந்த உரிமையின்படி, அவரது நூற்றாண்டு நிறைவு விழா ஆண்டில்,இன்றுநானும்,நான்காவது ஆண்டாகச் சென்னை கோட்டைக் கொத்தளத்தில் தேசியக் கொடியை ஏற்றும் வாய்ப்பைப் பெற்றமைக்காகப் பெருமை அடைகிறேன். இந்த அருமையான வாய்ப்பை தமிழ்நாட்டின் முதலமைச்சராகக் கொடியேற்றும் வாய்ப்பை எனக்குத் தந்த எனதருமைத் தமிழ்நாட்டு

மக்களுக்கு என்றென்றும் நன்றிக்குரியவன் ஆவேன்.

வீரத் தியாகிகளுக்கு நினைவு சின்னங்கள்

நம் நாட்டில் விடுதலைக்காக 300 ஆண்டுகளாய் நிகழ்ந்த நெடிய போராட்டங்களில் இன்னுயிர்களை ஈந்தும், உடல் உறுப்புகளை இழந்தும், சொத்து சுகங்கள், மனைவி மக்கள் அனைத்தையும் பறிகொடுத்தும், நம் நாட்டின் விடுதலையை நமக்குப் பெற்றுத்தந்த வீரதீரத் தியாக வேங்கைகள் அனைவருக்கும் நம்முடைய நன்றிகளைத் தெரிவிக்கும் அடையாளமாக வீர வணக்கம் செலுத்திடுவோம்! இன்று மட்டுமல்ல; என்றைக்கும் அந்த வீரத் தியாகிகளை நினைவுகூரும் வகையில் அவர்கள் வாழ்ந்த பகுதிகளில் அவர்களுக்கெல்லாம் சிலைகள், மணிமண்டபங்கள் என நினைவுச் சின்னங்கள் அமைத்துப் போற்றி வருகிறோம்.

2021-இல் எனது தலைமையில் அமைந்திருக்கிற உங்கள் திராவிட மாடல் ஆட்சியில்;

- ❖ கப்பலோட்டிய தமிழன் வ.உ.சிதம்பரனாருக்குக் கோயம்புத்தூரில் திருவுருவச்சிலை;
- ❖ விடுதலைப் போராட்ட வீராங்கனை அஞ்சலை அம்மாளுக்குக் கடலூரில் திருவுருவச் சிலை;
- ❖ நாமக்கல் கவிஞர் இராமலிங்கம் பிள்ளை அவர்களுக்கு நாமக்கல் நகரில் சிலை;
- ❖ திவான் பகதூர் திராவிடமணி இரட்டைமலை சீனிவாசன் அவர்களுக்கு மணிமண்டபம்;
- ❖ குடியாத்தத்தில் விடுதலைப் போராட்ட தியாகி அண்ணல் தங்கோ அவர்களுக்குத் திருவுருவச் சிலை;
- ❖ தூத்துக்குடி மாவட்டம், கவர்னகிரியில் வீரன் சுந்தரலிங்கம் அவர்கள் மணிமண்டபத்தில் புதிய சிலைகள்

– ஆகியவற்றை அமைத்துத் திறந்து வைத்துள்ளேன்.

- ❖ பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் திருமகனாரின் நினைவிடத்தில் இரண்டு மண்டபங்கள் அமைக்கும் பணிகள்;
- ❖ பரமக்குடியில் தியாகி இம்மானுவேல் சேகரனார் அவர்களுக்குத் திருவுருவச் சிலை, அரங்கம் அமைக்கும் பணிகள்;
- ❖ வீராங்கனை குயிலி அவர்களுக்குச் சிவகங்கையில் திருவுருவச் சிலை நிறுவும் பணிகள்;
- ❖ விடுதலைப் போராட்ட வீரர் "வாளுக்குவேலி அம்பலம்" அவர்களுக்குச் சிவகங்கை மாவட்டத்தில் திருவுருவச் சிலை நிறுவும் பணிகள்;
- ❖ தியாகி கொடிகாத்த திருப்பூர் குமரன் அவர்களுக்கு ஈரோடு மாவட்டத்தில் திருவுருவச் சிலையுடன் கூடிய அரங்கம் அமைத்திடும் பணிகள்

– ஆகியவை நடைபெற்று வருகின்றன. இப்படி, எந்த மாநிலமும் செய்யாத முறையில் அனைத்துத் தியாகிகளையும் போற்றி வருகிறது தமிழ்நாடு. அந்தத் தியாகிகளின் கனவையும் நிறைவேற்றி வருகிறது நமது திராவிட மாடல் அரசு.

திராவிட மாடல் வளர்ச்சி

"திராவிட மாடல் என்றால் என்ன?" என்று கேட்பவர்களுக்கு நான் பலமுறை விளக்கமளித்திருந்தாலும், அதனை மீண்டும் ஒருமுறை இங்கே குறிப்பிட்டுச் சொல்வது பொருத்தமாக இருக்கும் என்று நினைக்கிறேன்.

சமூகநீதி, சமத்துவம், சுயமரியாதை, மொழிப்பற்று, இன உரிமை, மாநிலச் சுயாட்சி ஆகிய கருத்தியல்களின் அடித்தளத்தில் நிற்கும் இயக்கம்தான் திராவிட முன்னேற்றக் கழகம். தொழில் வளர்ச்சி, சமூக மாற்றம், கல்வி மேம்பாடு ஆகிய அனைத்தும் ஒரே நேரத்தில் நடக்க வேண்டும். வளர்ச்சி என்பது பொருளாதார வளர்ச்சியாக மட்டுமல்ல, சமூக வளர்ச்சியாக இருக்க வேண்டும். பொருளாதாரம் - கல்வி - சமூகம் - சிந்தனை - செயல்பாடு ஆகிய ஐந்தும் ஒருசேர வளரவேண்டும். அதுதான் தந்தை பெரியாரும், பேரறிஞர் அண்ணாவும், முத்தமிழறிஞர் கலைஞரும் காண விரும்பிய வளர்ச்சி. அதுதான் திராவிட மாடல் வளர்ச்சி!

கடந்த மூன்றாண்டுக் காலத்தில் தமிழ்நாடு அடைந்த வளர்ச்சியை நீங்கள் பார்த்தால், அது ஒரே ஒரு துறை வளர்ச்சியாக இல்லாமல் பல்துறை வளர்ச்சியாக அமைந்திருக்கும்.

அதிலும், மகளிர் முன்னேற்றத்துக்கான திட்டங்களைச் சொல்ல வேண்டுமென்றால்,

- ❖ பெண்களின் சமூகப் பங்களிப்பையும், பொருளாதார விடுதலையையும் தமிழ்நாட்டில்

அதிகரித்திருக்கும் திட்டம்தான் பெண்கள் அனைவருக்கும் கட்டணமில்லாப் பேருந்து வசதி அளிக்கும் விடியல் பயணம் திட்டம்.

❖ அரசுப் பள்ளிகளில் பயின்று கல்லூரிக்குச் செல்லும் மாணவிகளுக்கு மாதம் 1,000 ரூபாய் வழங்கி பெண்கல்வியைப் போற்றும் திட்டம்தான் புதுமைப்பெண் திட்டம்.

❖ சமூகத்திற்காகவும், குடும்பத்திற்காகவும் வாழ்நாள் முழுவதும் ஓயாமல் உழைத்துக் கொண்டிருக்கும் பெண்களுக்கு ஆண்டிற்கு 12 ஆயிரம் ரூபாய் உரிமைத்தொகை வழங்கி அவர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் திட்டம், கலைஞர் மகளிர் உரிமைத் திட்டம்.

மக்களின் நல்வாழ்வுக்கான திட்டம்

அடுத்து, கல்வி வளர்ச்சிக்கானத் திட்டங்களை எடுத்துக் கொண்டால், நமது திராவிட மாடல் அரசு இந்தியாவிலேயே முன்னோடித் திட்டமாக உருவாக்கிய, வரலாற்றுச் சிறப்புமிக்க 'முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம்'. இந்தத் திட்டத்தால் 20 இலட்சத்து 73 ஆயிரம் மாணவர்கள் தினமும் சூடான – சுவையான உணவை உண்டு வருகிறார்கள். அதுமட்டுமல்ல, மாணவர்களின் வருகை அதிகரித்து, அவர்கள் தடையின்றிக் கல்வி பெறுதலும் உறுதிசெய்யப்பட்டுள்ளது.

இதுமாதிரியான திட்டங்களால் இன்று நம் தமிழ்நாடு உயர்கல்வியில் சிறந்து விளங்குகிறது என்பதை ஒன்றிய அரசின் புள்ளிவிவரங்கள் சொல்கின்றன.

மக்களின் நல்வாழ்வை உறுதிசெய்ய செயல்படுத்தப்பட்டு வரும் திட்டங்களைச் சொல்ல வேண்டுமென்றால்,

கல்பனா சாவ்லா விருதாளர்
செவிலியர் திருமதி ஆ.சபினா அவர்கள்

டாக்டர் ஆ.ப.ஜெ.அப்துல் கலாம் விருதாளர்
முனைவர் ப.வீரமுத்துவேல் அவர்கள்

❖ ஏழை எளிய கிராமப்புற மக்களுக்கு அவர்களது வீட்டைத் தேடிச் சென்று உயர்தர மருத்துவத்தை வழங்கிவரும், "மக்களைத் தேடி மருத்துவம்" திட்டம்!

❖ எண்ணற்ற உயிர்களையும் – குடும்பங்களையும் காப்பாற்றும் மகத்தான திட்டமான 'இன்னுயிர்க் காப்போம் – நம்மைக் காக்கும் 48' திட்டம்!

இளைஞர்களது எதிர்காலத்துக்கு உதவும் திட்டங்களைச் சொல்ல வேண்டுமென்றால்,

❖ தமிழ்நாட்டு இளைஞர்கள் அனைவரையும் கல்வியால், அறிவால், ஆற்றலால், தனித்திறமையால் 'நான் முதல்வன்' என்று தலைநிமிர்ந்து சொல்ல வைக்கும், எனது கனவுத் திட்டங்களில் ஒன்றான "நான் முதல்வன்" திட்டம்!

❖ உயர்கல்விக்கான வழிகாட்டுதல்களை வழங்கும், கல்லூரிக் கனவு திட்டம்!

அதேபோல், இந்த நிதியாண்டு "புதுமைப் பெண்" திட்டத்தைப் போன்று, உயர்கல்வி பயிலும் மாணவர்களுக்கும்

மாதந்தோறும் ஆயிரம் ரூபாய் உதவித் தொகை வழங்கும் "தமிழ்ப் புதல்வன்" திட்டத்தைத் தொடங்கி வைத்திருக்கிறேன்.

புதிய வேலைவாய்ப்புகள்

நமது தமிழ்நாட்டு மாணவர்கள் உயர்கல்வி பல பயின்று வாழ்வில் சிறக்க வேண்டும் என்பதே என் கனவு. அதற்காகத்தான் உங்கள் குடும்பங்களில் ஒருவனாக இந்தத் திட்டங்களைச் செயல்படுத்துகிறேன்.

நமது மாணவர்கள் அனைவரும் தங்கள் கல்வித் தகுதிக்கேற்ப நல்ல வேலைவாய்ப்புகளைப் பெற்று, வறுமை இல்லாத, சமத்துவம் வாய்ந்த, ஓர் அறிவார்ந்த தமிழ்ச் சமுதாயத்தை உருவாக்க வேண்டும். உலக அளவில் முன்னணி மாநிலமாகத் தமிழ்நாடு விளங்க வேண்டும். அதில்தான் எனது மகிழ்ச்சி அடங்கியிருக்கிறது.

அதற்கு எடுத்துக்காட்டுதான், ஒன்றிய அரசின் தரவுகளின்படி வெளியான ஒரு புள்ளிவிவரம். அதில். அமைப்புச் சார்ந்த தனியார் துறைகளில், கடந்த மூன்று ஆண்டுகளில் 77 இலட்சத்து 79 ஆயிரம் புதிய வேலைவாய்ப்புகள் உங்கள் திராவிட மாடல் அரசால் உருவாகியுள்ளன.

அதுமட்டுமல்ல, இந்த அரசு பொறுப்பேற்ற கடந்த மூன்று ஆண்டுகளில், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், சீருடைப் பணியாளர் தேர்வு வாரியம், மருத்துவப் பணியாளர் தேர்வு வாரியம், ஆசிரியர் தேர்வு வாரியம் ஆகிய தேர்வு வாரியங்கள் மூலமாக 32 ஆயிரத்து 774 நபர்களுக்குப் பல்வேறு அரசுத் துறைகளில் நேரடிப் பணி நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளன. உள்ளாட்சி அமைப்புகள், அரசுத் துறை நிறுவனங்கள் போன்ற பல்வேறு அரசு அமைப்புகளில் 32 ஆயிரத்து 709 இளைஞர்கள் பணி நியமனம் பெற்று, கடந்த மூன்று ஆண்டுகளில் மொத்தம் 65 ஆயிரத்து 483 இளைஞர்களுக்கு அரசுப் பணி நியமனம் வழங்கப்பட்டுள்ளது என்பதை இந்த நேரத்தில் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

அது மட்டுமல்லாமல், வரும் ஜனவரி 2026-க்குள், அதாவது இன்னும் 16 மாதங்களுக்குள் பல்வேறு பணி நியமனங்கள் நடைபெற இருக்கிறது என்பதையும் ஏற்கெனவே நான் அறிவித்திருக்கிறேன்.

அதன்படி, வரும் 2026-ஆம் ஆண்டு ஜனவரி மாதத்திற்குள் 75 ஆயிரத்துக்கும் மேற்பட்ட அரசுப் பணியிடங்கள் நிரப்பப்படும் என்பதையும் உவகையுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

நமது திராவிட மாடல் அரசில் தமிழ்நாடு தொழிற்துறையில் புதிய பாய்ச்சலைக் கண்டு வருகிறது. அதற்கு அடையாளமாகத்தான், கடந்த ஜனவரி மாதம் 7 மற்றும் 8 ஆகிய நாட்களில் நடைபெற்ற "உலக முதலீட்டாளர்கள் மாநாட்டில்" முன்னெப்போதும் இல்லாத அளவிற்கு, 6 இலட்சத்து 64 ஆயிரத்து 180 கோடி ரூபாய் அளவிலான முதலீடுகளை ஈர்ப்பதற்காக, 631 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையெழுத்தாகியிருக்கிறது. இதன் மூலம், 14 இலட்சத்து 54 ஆயிரத்து 712 நபர்களுக்கு நேரடி வேலைவாய்ப்பும், 12 இலட்சத்து 35 ஆயிரத்து 945 நபர்களுக்கு மறைமுக வேலைவாய்ப்பும் கிடைக்க உள்ளதன.

தொழில்வளம் நிறைந்த தமிழ்நாடு

தமிழ்நாட்டைத் தொழில்வளம் நிறைந்த, வளமான மாநிலமாக வளர்த்தெடுக்க, தொழிற்துறைக்கான உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தி வருகிறோம். அவற்றில் முக்கியமானவற்றை உங்களோடு பகிர்ந்துகொள்ள வேண்டுமென்றால்,

- எறையூரில் தொழில் பூங்கா,
- சென்னை நந்தம்பாக்கத்தில் 56 ஏக்கர் நிலப்பரப்பில் "நிதிநுட்ப நகரம்,"
- திருச்சி, மதுரையில் புதிய தொழில்நுட்பப் (டைடல்) பூங்காக்கள்,
- விழுப்புரம், திருப்பூர், வேலூர், தஞ்சாவூர், தூத்துக்குடி, சேலம், சிவகங்கை மாவட்டங்களில் "மினி டைடல் பூங்காக்கள்,"
- ஆண்டுக்கு 100 மில்லியன் பயணிகளைக் கையாளக் கூடிய வசதிகளுடன் காஞ்சிபுரம் மாவட்டம் பரந்தூரில் ஒரு புதிய பன்னாட்டு விமான நிலையம்,
- திருவள்ளூர் மாவட்டத்தில், 182 ஏக்கர் நிலப்பரப்பில் 1,428 கோடி ரூபாய் மதிப்பீட்டில் பல்முனையச் சரக்குப் போக்குவரத்துப் பூங்கா,
- கோயம்புத்தூர் மாவட்டத்தில், சுமார் 300 கோடி ரூபாய் திட்ட மதிப்பீட்டில் பல்முனைய சரக்குப் போக்குவரத்துப் பூங்கா,
- தூத்துக்குடி மாவட்டம், குலசேகரப்பட்டினத்தில் இயங்கும் இஸ்ரோ விண்வெளி நிலையத்திற்கு அருகில் ஒரு விண்வெளி தொழிற்பூங்கா, திட எரிபொருள் பூங்கா

ஆகியவற்றை அமைப்பதற்கான பணிகள் நடைபெற்று வருகின்றன.

சமூகநீதிக்கான வளர்ச்சித் திட்டங்கள்

நமது திராவிட மாடல் அரசு செயல்படுத்தும் அனைத்து வளர்ச்சித் திட்டங்களும், எட்டுக் கோடி மக்களையும் சென்றடைகிற, எல்லோர்க்கும் எல்லாம்' என்ற சமூகநீதி அடிப்படையிலான, வளர்ச்சித் திட்டங்களாகத் திகழ்கின்றன.

ஏழை, எளிய, நடுத்தர மக்களின் தேவைகளை உணர்ந்து, அவர்கள் கேட்பதற்கு முன்னதாகவே அவற்றை நிறைவேற்றித் தரும் அரசாக விளங்கி வருகிறது.

முதல்வர் மருந்தகம்

நான் தொடர்ந்து மேற்கொண்டு வரும் கள ஆய்வுகள், மக்களிடம் இருந்து பெறப்பட்ட கருத்துகள் ஆகியவற்றின் அடிப்படையில், உங்களது திராவிட மாடல் அரசின் சார்பாக, இந்த வீர விடுதலைத் திருநாளில் சில அறிவிப்புகளை வெளியிடுவதில் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன்.

❖ அரசு மருத்துவமனைகளை நாடி வரும் ஏழை எளியோருக்கு, சிறப்பான சிகிச்சைகளும், தரமான மருந்துகளும் வழங்கப்பட்டு வருகின்றன. இந்நிலையில், தனியார் மருத்துவமனைகளில் சிகிச்சை பெறும் நடுத்தரக் குடும்பங்கள் தங்களுக்குத் தேவையான மருந்துகளை அதிக விலை கொடுத்து வாங்க வேண்டியுள்ளது. நீரிழிவு, இரத்த அழுத்தம் போன்ற நோய்களுக்குத் தொடர்ந்து மருந்துகளை வாங்க வேண்டியுள்ளதால், இவர்களுக்கு அதிக செலவுகள் ஏற்படுகின்றன. இதற்குத் தீர்வாக, பொதுப்பெயர் வகை (ஜெனரிக்) மருந்துகளையும், பிற மருந்துகளையும் குறைந்த விலையில் இவர்களுக்குக் கிடைக்கச் செய்யும் வகையில், 'முதல்வர் மருந்தகம்' என்ற புதியத் திட்டத்தை இந்த அரசு செயல்படுத்தும். வரும் பொங்கல் திருநாள் முதல் செயல்படுத்தப்படவுள்ள இந்தத் திட்டத்தின்கீழ், முதற்கட்டமாக 1,000 முதல்வர் மருந்தகங்கள் திறக்கப்படும். இந்தத் திட்டத்தைச் சிறப்பாகச் செயல்படுத்திட, மருந்தாளுநர்களுக்கும், கூட்டுறவு அமைப்புகளுக்கும் தேவையான கடனுதவியோடு மூன்று இலட்சம் ரூபாய் மானிய உதவியாக அரசால் வழங்கப்படும்.

முதல்வரின் காக்கும் கரங்கள்

❖ தாய்நாட்டிற்காகத் தங்களது இளம் வயதை இராணுவப் பணியில் கழித்து, பணிக்காலம் நிறைவு பெற்ற, ஓய்வுபெற்ற முன்னாள் படைவீரர்களது பாதுகாப்பான வாழ்க்கையை உறுதி செய்திடவும், வாழ்வாதாரத்தை மேம்படுத்திடவும், "முதல்வரின் காக்கும் கரங்கள்" என்ற புதிய திட்டம் அறிமுகப்படுத்தப்படும். இந்தத் திட்டத்தின்கீழ், முன்னாள் படைவீரர்கள் தொழில் தொடங்க ஒரு கோடி ரூபாய் வரை வங்கிகள் மூலம் கடன் பெறுவதற்கு வழிவகை செய்யப்படும். இத்திட்டத்தின் மூலம் தொடங்கப்படும் தொழில்களுக்கு வழங்கப்படும் கடன் தொகையில், 30 விழுக்காடு மூலதன மானியமும், 3 விழுக்காடு வட்டி மானியமும் வழங்கப்படும். இவர்களுக்குத் திறன், தொழில் முனைவோர் மேம்பாட்டுப் பயிற்சி போன்ற தேவையான பயிற்சிகளும் அரசால் வழங்கப்படும். இராணுவப் பணியின்போது உயிரிழந்த படைவீரர்களின் குடும்பத்தினரும் இத்திட்டத்தின் மூலம் பயன்பெறலாம்.

❖ அடுத்த இரண்டு ஆண்டுகளில் 400 முன்னாள் இராணுவத்தினர் பயன்பெறும் வகையில், 400

கோடி ரூபாய் மதிப்பிலான திட்டங்களுக்கு ஏறத்தாழ 120 கோடி ரூபாய் முதலீட்டு மானியம் மற்றும் 3 விழுக்காடு வட்டி மானியம் சேர்த்து வழங்கப்படும்.

விடுதலைப் போராட்ட தியாகிகளின் ஓய்வூதியம்

அடுத்ததாக, தியாகிகள் குடும்பங்களுக்குப் பயனளிக்கும் வகையில் சில அறிவிப்புகளை இப்போதுமகிழ்ச்சியோடுவெளியிடவிரும்புகிறேன்.

- மாநில அரசு, விடுதலைப் போராட்ட வீரர்களுக்குத் தற்போது வழங்கிவரும் மாதாந்திர ஓய்வூதியம் 20 ஆயிரம் ரூபாய் என்பது, 21 ஆயிரம் ரூபாயாக உயர்த்தி வழங்கப்படும்.
- விடுதலைப் போராட்டத் தியாகிகளின் குடும்பங்களுக்குத் தமிழ்நாடு அரசு தற்போது வழங்கிவரும் மாதாந்திரக் குடும்ப ஓய்வூதியமான 11 ஆயிரம் ரூபாய், 11 ஆயிரத்து 500 ரூபாயாக உயர்த்தி வழங்கப்படும்.
- வீரபாண்டிய கட்டபொம்மன், சிவகங்கை மருது சகோதரர்கள், இராமநாதபுரம் மன்னர் முத்துராமலிங்க விஜய ரகுநாத சேதுபதி, வ.உ.சிதம்பரனார் ஆகியோரின் வழித்தோன்றல்கள் பெற்றுவரும் மாதாந்திரச் சிறப்பு ஓய்வூதியமான 10 ஆயிரம் ரூபாய் என்பது இனி 10 ஆயிரத்து 500 ரூபாயாக உயர்த்தி வழங்கப்படும்.

சமீப காலமாக, நாம் பெரிதும் எதிர்கொள்ளும் பிரச்சினையாகக் காலநிலை மாற்றம் உருவாகியுள்ளது. இதனால் ஏற்படும் இயற்கைச் சீற்றங்களால் பெரும் பாதிப்புகள் உண்டாகின்றன. அண்மையில் கூட, நமது சகோதர மாநிலமான கேரளத்தில் பெய்த பெருமழை காரணமாக வயநாட்டில் மிகப்பெரிய நிலச்சரிவு ஏற்பட்டது. இந்தப் பாதிப்புகளில் இருந்து கேரளம் மீள்வதற்கான அனைத்து உதவிகளையும் நாம் வழங்கியுள்ளோம். தமிழ்நாட்டிலும், நீலகிரி, வால்பாறை மலைப்பகுதி, கொடைக்கானல் போன்ற மேற்குத் தொடர்ச்சி மலைப்பகுதிகள், ஏற்காடு மற்றும் ஏலகிரியை உள்ளடக்கிய மலைப்பகுதிகள் என மலைநிலப் பகுதிகள் அதிகம் உள்ளன. அங்குப் பெருமழைக் காலங்களில் ஏற்படக்கூடிய இயற்கை இடர்பாடுகள் குறித்து முறையாக ஆய்வு செய்ய தமிழ்நாடு அரசு முடிவு செய்துள்ளது. வனத்துறை, புவிசார் அறிவியல் துறை, வீட்டுவசதி, நகர்ப்புற வளர்ச்சித் துறை, சுற்றுச்சூழல் துறை உள்ளிட்ட பல்துறை வல்லுநர்களைக் கொண்ட ஒரு குழுவினால், அறிவியல் அடிப்படையிலான ஒரு விரிவான ஆய்வு, மாநிலப் பேரிடர் மேலாண்மைத் துறையின் மூலமாக இந்தப் பகுதிகளில் மேற்கொள்ளப்படும். மேலும், எதிர்காலத்தில் ஏற்படக்கூடிய பாதிப்புகள், இடர்பாடுகளை முன்னதாக அறிவதற்கும், தவிர்ப்பதற்கும், தணிப்பதற்கும், நீண்டகால அடிப்படையில் ஆபத்துகளைக் குறைப்பதற்கும் அரசு மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் குறித்து இந்தக் குழு ஆய்வு செய்து, தனது பரிந்துரைகளை வழங்கும். அந்தப் பரிந்துரைகளின் மீது, தமிழ்நாடு அரசு உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மக்கள் தொண்டு

தமிழ்நாட்டில் வாழும் ஒவ்வொரு தனிமனிதரின் கோரிக்கையையும் செயல்படுத்தித் தரும் மனிதனாக நான் இருக்க வேண்டும் என்று ஆசைப்படுகிறேன். அதற்கான முயற்சியில்தான் என்னை நான் தினமும் ஈடுபடுத்தி வருகிறேன். இந்தியாவுக்கு வழிகாட்டியாக, இந்தியாவின் முன்மாதிரி மாநிலமாகத் தமிழ்நாட்டை உருவாக்குவதற்காக என்னை நான் ஒப்படைத்துக் கொண்டுள்ளேன். தந்தை பெரியார் – பேரறிஞர் அண்ணா – தமிழினத் தலைவர் கலைஞர் ஆகியோரின் வழித்தோன்றல் மட்டுமல்ல: அவர்கள் நினைத்த செயலைச் செய்து காட்டும் வழிவழித் தொடர்ச்சியாக நான் செயல்பட்டு வருகிறேன். மக்களுக்கு உண்மையாக இருப்பதே மக்கள் தொண்டு என்று செயல்பட்டு வரும் எனக்குத் தமிழ்நாட்டு மக்கள் தொடர்ச்சியாக அளித்து வரும் வெற்றிக்கு நான் தலைவணங்குகிறேன். நீங்கள் எனக்கு அளித்து வரும் வெற்றியின் மூலமாக தமிழ்நாட்டைத் தலைநிமிர வைப்பேன். தமிழ்நாட்டின் உன்னதமான கோட்பாடுகளை இந்தியா முழுமைக்கும் செயல்படுத்திக் காட்டும் கடமையும், பொறுப்பும் நமக்கு உண்டு. இந்திய நாடு இன்னல்களை வென்றநாடு மட்டுமல்ல, உலகுக்கு வழிகாட்டியாக அமைய வேண்டிய நாடு. அத்தகைய இந்திய நாட்டின் பொறுப்புமிக்க குடிமக்களாகிய நாம் எடுத்துக்கொள்ள வேண்டிய உறுதிமொழி: "நம்மைக் காக்கும், நாட்டைக் காப்போம்!"; "நம்மைக் காக்கும், நாட்டைக் காப்போம்!".

தமிழ்நாட்டு மக்களுக்கு உங்களில் ஒருவனாக – இந்திய நாட்டு மக்களுக்குத் தமிழ்நாட்டின் முதலமைச்சராக–எனது மனமார்ந்த விடுதலை நாள் நல்வாழ்த்துகளை மீண்டும் ஒருமுறை தெரிவித்து என்னுடைய உரையை நிறைவு செய்கிறேன். ■

இலக்கியச் செல்வர் முனைவர் குமரி அனந்தன் அவர்களுக்கு 2024ஆம் ஆண்டுக்கான 'தகைசால் தமிழர் விருது'

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள் 15.08.2024 அன்று சுதந்திரத் திருநாளையொட்டி, சென்னை தலைமைச் செயலகக் கோட்டை முகப்பில் நடைபெற்ற தேசியக் கொடியேற்று விழாவில், தமிழ்நாட்டிற்கும், தமிழினத்தின் வளர்ச்சிக்கும் மாபெரும் பங்காற்றியதற்காக 2024ஆம் ஆண்டுக்கான தகைசால் தமிழர் விருதினை இலக்கியச் செல்வர் முனைவர் குமரி அனந்தன் அவர்களுக்கு வழங்கிச் சிறப்பித்தார்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால், 2021ஆம் ஆண்டில் அறிவிக்கப்பட்டவாறு தமிழ்நாட்டிற்கும் தமிழினத்தின் வளர்ச்சிக்கும் மாபெரும் பங்காற்றியவர்களைப் பெருமைப்படுத்திடும் வகையில் ஆண்டுதோறும் 'தகைசால் தமிழர் விருது' வழங்கப்பட்டு வருகிறது. இதுகாறும் இவ்விருது திரு.சங்கரய்யா அவர்களுக்கும், திரு.ஆர்.நல்லகண்ணு அவர்களுக்கும், ஆசிரியர் திரு.கி.வீரமணி அவர்களுக்கும் வழங்கப்பட்டுள்ளது.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. **மு.க. ஸ்டாலின்** அவர்கள்
வழங்கினார் – 15.08.2024

இவ்வரிசையில், 2024ஆம் ஆண்டுக்கான 'தகைசால் தமிழர் விருது'க்கு இலக்கியச் செல்வர் முனைவர் குமரி அனந்தன் அவர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளார். இவர், கன்னியாகுமரி மாவட்டம், குமரிமங்கலம் என்ற அகத்தீஸ்வரத்தில், சுதந்திரப் போராட்டத் தியாகி திரு.அரிகிருஷ்ணன்–திருமதி தங்கம்மாள் தம்பதிக்கு முதல் மகனாக 1933 மார்ச் 19ஆம் தேதியன்று பிறந்தவர்.

பெருந்தலைவர் காமராசரின் அருமந்த சீடராக விளங்கியவர், காங்கிரசுப் பேரியக்கத்தின் மேனாள் மாநிலத் தலைவராகப் பொறுப்பு வகித்தவர். மக்கள் நலனுக்காகப் பதினேழு முறை தமிழ்நாடு முழுவதும் நடைபயணம் மேற்கொண்டவர். ஏழை விவசாயிகளுக்கு இலவச மின்சாரம் வேண்டுமென்று களக்காட்டிலிருந்து இராதாபுரம் வரை நடைபயணம் மேற்கொண்டதன் விளைவாக 15.08.1984 அன்று 1.5 ஏக்கர் நஞ்சை நிலம், 2.5 ஏக்கர் புஞ்சை நிலம் வைத்திருக்கும் விவசாயிகளுக்கு இலவச மின்சாரத் திட்டம் பெற்றுத் தந்தவர். இலக்கியச் செல்வராகவும், மேடைப் பேச்சாளராகவும் எவரோடும் பகை கொள்ளாத பண்பாட்டுச் செம்மலாகத் திகழ்பவர்.

1977ஆம் ஆண்டு நாகர்கோயில் தொகுதியில் நாடாளுமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட முதல்நாளிலிருந்து தமிழில் பேசுவதற்குப் பலமுறை அவையில் போராடி, பத்து முறைக்கு மேல் தொடர்ந்து காவலர்களால் வெளியேற்றப்பட்டு, சோர்ந்துவிடாமல் அவரின் தொடர் முயற்சியால் 20.11.1978இல் தமிழில் பேசுவதற்கு அனுமதி கிடைத்து, நாடாளுமன்றத்தில் தொடர்ந்து தமிழிலேயே பேசியவர். இதுகுறித்து முத்தமிழறிஞர் கலைஞர், "தனிமரம் தோப்பாகாது" என்ற பழமொழியை மாற்றி அமைத்து விட்டார் என்ற பாராட்டினைப் பெற்றவர்.

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் உறுப்பினராக 1980, 1984, 1989 மற்றும் 1991 ஆகிய ஆண்டுகளில் நான்கு முறை தேர்ந்தெடுக்கப்பட்டவர். தமிழகத்தில் பனைவளம் பெருக முழங்கியவர். தமிழ்நாட்டில் ஒன்றிய அரசு அலுவலகப் படிவங்கள் அனைத்திலும் தமிழுக்கு முதலிடம் தரப்படவேண்டும் என்ற கோரிக்கையை வலியுறுத்தி, ஒன்றிய அரசின் அலுவலகங்கள் முன் ஆர்ப்பாட்டம் நடத்தியவர். தமிழ்நாட்டில் தாய்மொழித் தமிழுக்கு எங்கும் முதலிடம் தரப்படவேண்டும் என்று வலியுறுத்தியவர். தமிழ்நாடு அரசின் மகாகவி பாரதியார் விருது, பெருந்தலைவர் காமராசர் விருது பெற்றவர்.

செங்கோட்டையில் வீரவாஞ்சிநாதனுக்கு மணிமண்டபம் அமைக்க கோரிக்கை வைத்தவர். எட்டயபுரம் கூட்டுறவு நூற்பாலைக்குப் பாரதியார் பெயரிட உண்ணா நோன்பிருந்து கோரிக்கையில் வெற்றி பெற்றவர்.

பைகிராப்ட்ஸ் ரோடு என்று பெயர் கொண்டிருந்த சாலைக்குப் பாரதி சாலை எனப் பெயர்வர முனைந்து வென்றவர். வானொலி என்பதை ஆகாஷ்வாணி என்றாக்க முனைந்தபோது எதிர்த்துச் சென்னையில் பேரணியும் சாத்தூர் வைப்பாற்று மணல் வெளியில் முத்தமிழ்க் காவலர் கி.ஆ.பெ.விசுவநாதம், தவத்திரு குன்றக்குடி அடிகளார் ஆகியோரை அழைத்து பெரிய மாநாடு நடத்தி வானொலி தொடர்ந்து நிலைக்க வழி வகுத்தவர்.

நாடாளுமன்ற உறுப்பினராகச் செயல்பட்ட போது POST-CARD; MONEY ORDER FORM என்பனவற்றைத் தமிழில் அஞ்சலட்டை, பணவிடைத்தாள் என்று தமிழில் கொண்டுவர வேண்டும் என்று கோரிக்கை வைத்து நிறைவேற்றி CHEQUE என்பது காசோலை என அழைக்கவும், தந்தியை விரைவு வரைவு என அழைத்துச் செயல்பாட்டிற்குக் கொண்டு வந்தவர்.

நல்லாட்சி தந்த நாயகன் காமராஜ், குமரி அனந்தனின் தமிழ் அமுது, சிந்தனைப் பண்ணையில் பாரதியார், சிந்தனைப் பண்ணையில் பாரதிதாசன், பார் அதிரப் பாடிய பாரதி உட்பட 29 நூல்களை எழுதியுள்ளார்.

சென்னையில் உள்ள பெரும்பான்மை கல்லூரிகளிலும், மேல்நிலைப் பள்ளிகளிலும் சென்று சொற்பொழிவாற்றியதோடு, மாணவ, மாணவிகளுக்கும் இக்கலையில் பயிற்சி அளித்ததோடு, மாணவர்களை மேடைகளில் பேச ஆக்கமும், ஊக்கமும் அளித்த சிறப்பிற்குரியவர்.

சொல்லில் உயர்வு தமிழ்ச்சொல்லே - அதைத்
தொழுது படித்திடடி பாப்பா

என்ற பாரதியின் வாக்கைச் செயல்படுத்திக் கொண்டிருப்பவர்.

இத்தகைய சிறப்புகளைத் தன்னகத்தே கொண்டு தமிழ் மக்கள் மனதில் தனக்கெனத் தனியிடம் பெற்ற, இலக்கியச் செல்வர் முனைவர் குமரி அனந்தன் அவர்களுக்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் சுதந்திர தின விழாவில் 'தகைசால் தமிழர் விருது'-க்குரிய பத்து இலட்சம் ரூபாய்க்கான காசோலையும், பாராட்டுச் சான்றிதழும் வழங்கிச் சிறப்பித்தார்.

6 முதல் 12ஆம் வகுப்பு வரை தமிழ் வழியில் பயின்று உயர்கல்வி பயிலும் மாணவர்களுக்கு ரூ.1,000 உதவித்தொகை வழங்கும் "தமிழ்ப் புதல்வன்" திட்டம்

> மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் தொடங்கி வைத்தார் - 09.08.2024

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் 09.08.2024 அன்று கோயம்புத்தூரில் நடைபெற்ற அரசு விழாவில், 6-ஆம் வகுப்பு முதல் 12-ஆம் வகுப்பு வரை அரசுப் பள்ளிகளிலும், 6-ஆம் வகுப்பு முதல் 12-ஆம் வகுப்புவரை அரசு உதவி பெறும் பள்ளிகளில் தமிழ் வழியிலும் பயின்று உயர்கல்வி பயிலும் மாணவர்களுக்கு மாதந்தோறும் ரூ.1,000 உதவித் தொகை வழங்கும் தமிழ்ப் புதல்வன் திட்டத்தைத் தொடங்கி வைக்கும் விதமாக மாணவர்களுக்குப் பற்று அட்டைகளை (Debit Card) வழங்கினார்கள்.

கல்வியறிவும் பொருளாதாரச் சுதந்திரமும் பெண்களின் முன்னேற்றத்திற்கு மிக முக்கியம் என்பதை உணர்ந்த தமிழ்நாடு அரசு, அரசுப்பள்ளிகளில் பயிலும் மாணவிகளின் உயர்கல்வி சேர்க்கை மிகக்குறைவாக இருப்பதைக் கருத்தில் கொண்டு அரசுப் பள்ளிகளில் 6-ஆம் வகுப்பு முதல்

12-ஆம் வகுப்பு வரை பயின்று மேற்படிப்பில் சேரும் அனைத்து மாணவிகளுக்கும், பட்டப்படிப்பு/ பட்டயப்படிப்பு / தொழிற்கல்வி ஆகியவற்றில் இடைநிற்றல் இன்றிப் படிக்கும் வரை மாதம் ரூ.1,000/- அவர்களின் வங்கிக் கணக்கிற்கு நேரடியாக வழங்கும் "புதுமைப் பெண்" திட்டத்தை 05.09.2022 முதல் செயல்படுத்தி வருகிறது. இத்திட்டமானது 2024-2025-ஆம் ஆண்டு முதல் அரசு உதவி பெறும் பள்ளிகளில் தமிழ் வழியில் பயின்று உயர்கல்வி பயிலும் மாணவிகளுக்கும் விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின்கீழ், கலை, அறிவியல், பொறியியல், தொழிற்படிப்பு, மருத்துவக் கல்லூரிகளில் பயிலும் மாணவிகள் உட்பட சுமார் 3.28 இலட்சம் மாணவிகள் பயனடைந்துள்ளனர். புதுமைப் பெண் திட்டத்தினால் மாணவிகள் உயர்கல்வியில் சேரும் எண்ணிக்கை 34 சதவிகிதம் உயர்ந்துள்ளது.

2024–2025–ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையில் "தமிழ்ப் புதல்வன் திட்டம்" அறிவிப்பு

தமிழ்நாட்டில் பெண்களின் உயர்கல்வியை உறுதி செய்வதற்கெனத் தொடங்கப்பட்ட புதுமைப் பெண் திட்டமானது மாபெரும் வெற்றியைப் பெற்றுள்ளதையடுத்து, 2024-2025ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையில், பெண்களின் சேர்க்கையை அதிகரிக்கும் நோக்கத்துடன் அறிமுகப்படுத்தப்பட்ட "மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் புதுமைப் பெண் திட்டம்" பெண்களின் உயர்கல்வியில் பெரும் முன்னேற்றத்தை ஏற்படுத்தியுள்ளது. அதேபோல், அரசுப் பள்ளிகளில் பயின்ற, ஏழை, எளிய மாணவர்களைச் சாதனையாளர்களாக உருவாக்கிடவும், அரசுப் பள்ளி மாணவர்களின் உயர்கல்வி சேர்க்கையை உயர்த்திடவும், 'தமிழ்ப் புதல்வன்' எனும் ஒரு மாபெரும் திட்டம் வரும் நிதியாண்டில் இருந்து அறிமுகப்படுத்தப்படும். இத்திட்டத்தின் கீழ் 6 முதல் 12-ஆம் வகுப்பு வரை அரசுப் பள்ளிகளில் பயின்று உயர்கல்வி சேரும் மாணவர்கள், பாடப் புத்தகங்கள், பொது அறிவு நூல்கள் மற்றும் இதழ்களை வாங்கி அவர்களது கல்வியை மெருகேற்றிட உதவும் வகையில், மாதந்தோறும் ஆயிரம் ரூபாய் அவர்களின் வங்கிக் கணக்கில் நேரடியாகச் செலுத்தப்படும். இத்தகைய முன்னோடித் திட்டங்களின் மூலம் நமது இளைஞர்களின் ஆற்றலை ஆக்கப்பூர்வமாக பயன்படுத்தி அவர்கள் நமது மாநிலம், நாட்டின் எதிர்காலத் தூண்களாகத் திகழ்வார்கள். இப்புதிய திட்டத்தின் மூலம் சுமார் மூன்று இலட்சம் கல்லூரி மாணவர்கள் பயனடைவர் என்று அறிவிக்கப்பட்டது.

உயர்கல்வி, மாணவர்களின் கனவுகளை நனவாக்க உதவும் என்பதை உணர்ந்த தமிழ்நாடு அரசு, புதுமைப் பெண்களுக்கு மட்டும் அல்லாமல் தமிழ்ப் புதல்வர்களாகிய மாணவர்களுக்கும் தாயுமானவனாக என்றும் உடனிருப்பேன் என்னும் விதமாக அரசுப் பள்ளி மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் தமிழ் வழியில் 6-ஆம் வகுப்பு முதல் 12ஆம் வகுப்பு வரை பயின்ற அனைத்து மாணவர்களும் கலை மற்றும் அறிவியல், பண்பாடு, தொழில்நுட்பம், விவசாயம், செவிலியர், மருத்துவம் சார்ந்த படிப்புகள், சட்டம், பொறியியல், தொழிற்கல்வி சார்ந்த பட்டம், பட்டயப் படிப்புகளில் இந்திய அரசு, தமிழ்நாடு அரசு, பல்கலைக்கழக மானியக்குழுவால் அங்கீகரிக்கப்பட்ட உயர்கல்வி நிறுவனங்களில் சேர்ந்து உயர்கல்வி பயிலும் மாணவர்களுக்கும் மாதந்தோறும் ரூபாய் ஆயிரம் (ரூ.1,000/-) ஊக்கத் தொகையை அவர்கள் முழுமையாக அப்படிப்பினைப் படிக்கும் பாடநெறி காலத்திற்கு வழங்கப்படும். இத்திட்டத்தின் மூலம் மாணவர்கள் உயர்கல்வி இலக்கினை அடையவும், எதிர்காலத்தில் மேலும் பல வெற்றிகளைப் பெற்றிடவும் இயலும்.

"தமிழ்ப் புதல்வன் திட்டம்" செயல்படுத்தப்படும் முறை

அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் அதிக அளவில் மாணவர்கள் சேர்ந்து பயன்பெறும் வகையிலும், மாணவர்களின் உயர்கல்வியை ஊக்கப்படுத்தும் வகையிலும், 'தமிழ்ப் புதல்வன்' திட்டத்தினைச் செயல்படுத்திட மாணவியர்களுக்காக ஏற்கெனவே தமிழ்நாடு அரசால் சீரிய முறையில் செயல்படுத்தப்பட்டுவரும் "புதுமைப் பெண்" திட்டத்தின் அடிப்படையில் துவக்கி வைக்கப்படும் "தமிழ்ப் புதல்வன்" திட்டத்தில் மாணவர்களுக்கும் மாதந்தோறும் ரூ.1,000/- உதவித் தொகை வழங்கப்படும். தற்போது வரை புதுமைப் பெண் திட்டத்தின்கீழ் 3,28,280 மாணவிகள் மாதந்தோறும் ரூ.1,000/- உதவித் தொகை பெற்றுப் பயன்பெற்று வருகின்றனர்.

தமிழ்ப் புதல்வன் திட்டத்தில் 6-ஆம் வகுப்பு முதல் 12-ஆம் வகுப்பு வரை அரசுப் பள்ளிகள், அரசு உதவி பெறும் பள்ளிகளில் தமிழ் வழியில் பயின்று இந்திய அரசு / தமிழ்நாடு அரசு / பல்கலைக்கழக

மானிய குழுவால் அங்கீகரிக்கப்பட்ட உயர்கல்வி நிறுவனங்களில் சேர்ந்து உயர்கல்வி பயிலும் மாணவர்களுக்கு உதவித் தொகை வழங்கப்படும். இத்திட்டத்தில் சுமார் 3.28 இலட்சம் மாணவர்கள் பயன்பெறும் வகையில் தமிழ்நாடு அரசால் 2024-2025-ஆம் நிதியாண்டிற்கு ரூ.360 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இத்திட்டத்தில் சேர்ந்து மாணவர்கள் பயன்பெற்றிட இணையதள வாயிலாக விண்ணப்பிக்க பிரத்தியேகமான தகவல் முகமை (Portal - https://umis.tn.gov.in) வடிவமைக்கப்பட்டுள்ளது. விண்ணப்பிக்கும் மாணவருக்குத் தனிப்பட்ட எண் (Unique ID) உருவாக்கப்பட்டு, மாணவரால் பதிவு செய்யப்பட்ட அலைபேசிக்குக் குறுஞ்செய்தி அனுப்பப்படும். அந்த எண்ணைக் கொண்டு விண்ணப்பங்களின் நிலையினை அறிந்து கொள்ள இயலும்.

மாணவர்களின் ஆதார் எண், பள்ளிக் கல்வித் துறையின் கல்வி மேலாண்மை தகவல் அமைப்பு (EMIS) தரவுகள், உயர்கல்வி பயிலும் நிறுவனத்தில் பெற்ற சேர்க்கை, பல்கலைக்கழக மேலாண்மை தகவல் அமைப்பு (UMIS) ஆகிய தரவுகளுடன் மாணவர்களின் விண்ணப்பம் ஒற்றைச் சாளர முறையில் சரிபார்க்கப்படும்.

அங்கீகரிக்கப்பட்ட அனைத்து விண்ணப்பங்களுக்கும் சமூக நலத்துறையால் National Automated Clearing House வாயிலாக ரூ.1,000/- உதவித் தொகை மாணவர்களின் வங்கிக் கணக்குகளில் நேரடியாக வரவு வைக்கப்படும். மாணவர்கள் விண்ணப்பம் பதிவு செய்யும் போதும், ஊக்கத் தொகை மாணவர்களின் வங்கிக் கணக்கிற்குப் பரிமாற்றம் செய்த பின்னரும் அவர்களின் பதிவு செய்யப்பட்ட அலைபேசி எண்ணிற்கு குறுஞ்செய்தி அனுப்பப்படும்.

இத்திட்டத்தில் கலை மற்றும் அறிவியல், தொழிற்சார் படிப்புகள், இணை மருத்துவம் சார்ந்த படிப்புகள், பட்டயப் படிப்பு, தொழிற்கல்வி, ஒருங்கிணைந்த பட்ட மேற்படிப்பு (முதல் 3 ஆண்டுகளுக்கு மட்டும்) போன்ற உயர்கல்வி படிப்புகள் படிக்கும் மாணவர்கள் பயன்பெறலாம். மேலும், எட்டாம் வகுப்பு, பத்தாம் வகுப்பு முடித்து, தொழிற்பயிற்சி பயில்வோரும் இத்திட்டத்தின் மூலம் பயன்பெறலாம்.

அதேபோன்று பிற மாநிலங்களில் ஒன்றிய அரசின்கீழ் செயல்படும் IIT, NIT, IISER போன்ற தகைசால் கல்வி நிறுவனங்களில் பயிலும் அரசுப் பள்ளிகளில் பயின்ற, அரசு உதவி பெறும் பள்ளிகளில் தமிழ்வழிக் கல்வியில் பயின்ற மாணவர்களும் இத்திட்டத்தில் பயன்பெறலாம்.

மகத்தானத் திட்டமான "தமிழ்ப் புதல்வன் திட்டம்" மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் கோயம்புத்தூர், அரசுக் கலை கல்லூரியில் தொடங்கி வைக்கப்பட்டது. அந்தந்த மாவட்டங்களில் மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள், தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் பிரதிநிதிகளால் இந்நிகழ்ச்சி தொடரப்பட்டது.

இந்நிகழ்ச்சியில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஆற்றிய உரை

உங்கள் அனைவருக்கும் என்னுடைய வணக்கத்தை நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

இந்தக் கல்லூரியில் நுழைந்தவுடன் நீங்கள் கொடுத்த எனர்ஜிக்கும், அந்த வரவேற்புக்கும் முதலில் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

இன்றைக்கு நான் வருவதற்கு முன்பே நேற்று இரவே, உங்கள் வங்கிக் கணக்கில் இந்த மாதத்திற்கான 1,000 ரூபாயை அனுப்ப உத்தரவிட்டிருந்தேன். உங்களுக்கு கிடைத்ததா? மெஸ்சேஜ் வந்துவிட்டதா! மகிழ்ச்சியா! நன்றி... நன்றி....

நாள்தோறும் ஏராளமான திட்டங்களைத் தீட்டி, நாங்கள் செயல்படுத்திக் கொண்டு இருந்தாலும், ஒரு சில திட்டங்கள்தான் நம்முடைய மனதுக்கு நெருக்கமான திட்டங்களாக இருக்கும்!

தொழில் துறையில் சிறந்த மண்டலம்

வரலாற்றில் என்றைக்கும் நம்முடைய பெயரை சொல்லப் போகும் திட்டமாக இருக்கும்! அப்படிப்பட்ட திட்டமாக உருவாகி இருக்கும், தமிழ்ப் புதல்வன் திட்டத்தைத் தொடங்கி வைக்க பெருமகிழ்ச்சியுடன் கோவைக்கு வந்திருக்கிறேன்.

இந்தத் திட்டத்தால் தமிழ்நாடு முழுவதும் பயன்பெறப்போகும் மாணவர்கள், காணொலிக் காட்சி வாயிலாக இந்தக் கூட்டத்தில் இணைந்திருக்கிறீர்கள்.

இந்தத் திட்டத்தைத் தொடங்கி வைக்க நான் தேர்ந்தெடுத்திருக்கும் இடம், இந்தக் கோவை மண்டலம்! ஏனென்றால், இந்த அன்பான மக்கள், பாசமான மக்கள், சேவை மனப்பான்மையுள்ள மக்கள் வாழும் பகுதி இது! தொழில்துறையில் சிறந்த மண்டலம் இது! இந்தியாவின் தலைசிறந்த கல்வி நிறுவனங்கள் இருக்கும் மண்டலம் இது! பழமையும், புதுமையும் கலந்த பகுதி இது! இங்கு இருக்கின்ற மக்கள் பெரியவர்களை மதிப்பது, விருந்தோம்பல் உள்ளிட்ட நற்பண்புகளில் சிறந்து விளங்குகிறார்கள்.

நம்முடைய திராவிட மாடல் அரசைப் பொறுத்தவரைக்கும், கடந்த மூன்று ஆண்டுகளில், மக்களுக்கு நேரடியாகப் பயனளிக்கக் கூடிய ஏராளமான திட்டங்களைச் செயல்படுத்திக் கொண்டு வருகிறது. தமிழ்நாடு தான் இந்தியாவுக்கே முன்னோடியான மாநிலம் என்று சொல்வது போன்ற பல்வேறு திட்டங்களைத் தொடர்ந்து செயல்படுத்திக் கொண்டு வருகிறோம்.

இளைஞர்களின் கல்வி உரிமை

திராவிட மாடல் அரசு என்று சொன்னாலே, அது சமூகநீதிக்கான அரசு! பெண்கள் பொருளாதார விடுதலை பெறுவதும், இளைஞர்கள் கல்வி உரிமை பெறுவதும் தான் சமூகநீதியை நோக்கிய நம்முடைய பயணத்திற்கான அடித்தளம்! அதனால்தான், இந்த இரண்டுக்கும் அரசால் என்னென்ன உதவிகள் எல்லாம் செய்ய முடியும் என்று பார்த்துப் பார்த்து செய்கிறோம்!

பொருளாதார விடுதலை என்று எடுத்துக்கொண்டால், பெண்களுக்குப் பேருந்தில் கட்டணமில்லாமல் பயணம் செய்யக்கூடிய வசதியை உருவாக்கிக் கொடுப்போம் என்று வாக்குறுதி கொடுத்தோம்! சொன்னபடியே, முதலமைச்சரானதும் நான் போட்ட முதல் கையெழுத்தே விடியல் பயணம் திட்டத்திற்குத் தான்! விடியல் பயணத்தை இதுவரை 518 கோடி முறை பெண்கள் பயன்படுத்தி இருக்கின்றார்கள்.

அதேபோல், மகளிர் வாழ்வுக்கு விடியல் தரும், கலைஞர் மகளிர் உரிமைத் திட்டம்! இந்தத் திட்டம் மூலம் ஒரு கோடியே 15 இலட்சம் பெண்களுக்கு மாதம் ஆயிரம் ரூபாய் வழங்கிக் கொண்டு வருகிறோம்.

கல்வி உரிமை என்று எடுத்துக்கொண்டால், குழந்தைகளின் பசியைப் போக்கும் காலை உணவுத் திட்டம்! இந்தத் திட்டத்தால், 20 இலட்சத்து 73 ஆயிரம் மாணவர்கள் தினமும் வயிறார காலை உணவு சாப்பிடுகிறார்கள்.

புதுமைப் பெண் திட்டம்

அடுத்து, நம்முடைய பயணத்தையும், இலட்சியத்தையும் எதிர்காலத்திற்கு எடுத்துக்கொண்டு போகும் இளைஞர்களுக்காக தொடங்கப்பட்ட திட்டம், நான் முதல்வன் திட்டம்! இதுவரை 28 இலட்சம் மாணவர்களுக்குப் பயிற்சியும் கொடுத்து வேலைவாய்ப்பு பெறுவதையும் உறுதி செய்திருக்கிறோம்!

மாணவிகள் என்று எடுத்துக்கொண்டால், புதுமையான, புரட்சிகரமான திட்டமாக செயல்படுத்திக் கொண்டு வருகின்ற புதுமைப் பெண் திட்டம்! 3 இலட்சத்து 28 ஆயிரம் மாணவிகளுக்கு இந்தத் திட்டத்தின்கீழ் மாதந்தோறும் ஆயிரம் ரூபாய் வழங்கிக் கொண்டிருக்கிறோம். "புதுமைப் பெண்" திட்டத்தில் மாணவிகள் பயன்பெறுகிறார்களே, எங்களுக்கு அப்படி கிடையாதா?" என்று ஆண் மாணவர்கள் கேட்டீர்கள். கேட்டீர்களா, இல்லையா? அந்தக் கோரிக்கையை ஏற்று உருவாக்கப்பட்ட திட்டம் தான், "தமிழ்ப் புதல்வன்" திட்டம்!

அரசுப் பள்ளியில் படித்துக் கல்லூரிக்கு வர இருக்கும் மாணவர்களுக்கு, இனி மாதம், மாதம் ஆயிரம் ரூபாய் வழங்கப் போகிறோம். உயர்கல்வியில் மாணவர்கள் சேர்க்கையை மேலும் மேலும் அதிகரிக்க, அரசுப் பள்ளிகளிலும், அரசு உதவிபெறும் பள்ளிகளிலும் படிக்கும் ஏழை எளிய மாணவர்கள் சாதனையாளர்களாக

உருவாக்கும் உன்னத நோக்கத்துடன் இந்தத் திட்டம் கொண்டு வரப்பட்டிருக்கிறது.

மாணவர்களின் வங்கிக் கணக்கில் நேரடி வரவு

இந்தத் திட்டம் 6-ஆம் வகுப்பு முதல் 12-ஆம் வகுப்பு வரை அரசுப் பள்ளிகளில் படித்துத் தேர்ச்சிப் பெற்றவர்களுக்கும், அரசு உதவிபெறும் பள்ளிகளில், 6-ஆம் வகுப்பு முதல் 12-ஆம் வகுப்பு வரை தமிழ் வழியில் படித்துத் தேர்ச்சி பெற்றவர்களுக்கும் பொருந்தும்! கலை, அறிவியல், கல்லூரிகளில் மூன்றாண்டு படிக்கும் பட்டப் படிப்புகள், நான்கு ஆண்டுகள் படிக்கும் பொறியியல் கல்வி பட்டப்படிப்புகள், 5 ஆண்டுகள் படிக்கும் மருத்துவப் படிப்புகள், 3 அல்லது 4 ஆண்டுகள் படிக்கும் சட்டம், மருத்துவம் சார்ந்த படிப்புகள், அதற்கு இணையான படிப்புகள் படிக்கும் மாணவர்களும் இந்தத் திட்டத்தில் மூலமாகப் பயன்பெறலாம். எட்டாம் வகுப்பு, பத்தாம் வகுப்பு முடித்து, தொழிற்பயிற்சி படிக்கின்றவர்களும் இந்தத் திட்டத்தில் பயன்பெறலாம்.

இந்தத் தமிழ்ப் புதல்வன் திட்டத்தின் மூலமாக, 3 இலட்சத்து 28 ஆயிரம் மாணவர்கள் பயன்பெறக்கூடிய வகையில் இந்த ஆண்டுக்கு 360 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது. மாதந்தோறும் ஆயிரம் ரூபாய் மாணவர்களின் வங்கிக் கணக்கில் நேரடியாக வரவு வைக்கப்படும்.

திராவிட மாடல் அரசை வழிநடத்தும் முதலமைச்சரான நான், ஒரு தந்தை நிலையிலும், உங்கள் குடும்பத்தில் ஒருவனாகவும் இருந்து, மாணவக் கண்மணிகளாகிய உங்களுக்காக உருவாக்கியத் திட்டம் தான் இந்தத் திட்டம்! இதன் மூலமாக, நீங்கள் அடைகின்ற வளர்ச்சியை, அடுத்தடுத்த ஆண்டுகளிலும் நான் கவனமாக கண்காணிப்பேன்!

ஒரு டிரில்லியன் அமெரிக்க டாலர்

இந்த விழா நடந்து கொண்டிருக்கும் கோவை அரசுக் கலைக் கல்லூரி 173 ஆண்டுகள் பழமை வாய்ந்தது! இந்தக் கல்லூரியில், 6,500 மாணவ, மாணவிகள் படிக்கின்றார்கள். இந்தக் கல்லூரி முதல்வர் என்னிடம் ஒரு கோரிக்கை வைத்தார். அதாவது, இந்தக் கல்லூரிக்கு மாணவர்கள் தங்கிப் படிப்பதற்கான விடுதிக் கட்டடம், பல்வேறு கருத்தரங்குகள், ஆய்வரங்குகள் நடத்த ஏதுவாக ஒரு கருத்தரங்கக் கூடம் கட்டித் தரவேண்டும் என்று கோரிக்கை வைத்திருக்கிறார். அவரின் கோரிக்கையை ஏற்று, கோவை அரசுக் கலைக்கல்லூரியில் மாணவிகளுக்கான விடுதிக் கட்டடமும், கருத்தரங்கக் கூடமும் கட்டித் தரப்படும் என்று மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

முதலாவது, நான் உங்களிடத்தில் கேட்டுக் கொள்ள விரும்புவது, 2030-ஆம் ஆண்டுக்குள் தமிழ்நாட்டை ஒரு டிரில்லியன் அமெரிக்க டாலர் பொருளாதாரமாக உயர்த்த வேண்டும். இதன்மூலம், வளர்ச்சியடைந்த மேலை நாடுகளுக்கு இணையான கட்டமைப்பு வசதிகள் கொண்ட மாநிலமாகத் தமிழ்நாடு உயரும்.

எனது கனவு

இரண்டாவது, எல்லாக் குழந்தைகளும் உயர்கல்விபடிக்கவேண்டும்! எந்தக்காரணத்தைக் கொண்டும், பள்ளிப்படிப்பு முடிந்ததும், ஒரு மாணவர் கூட உயர்கல்வி கற்காமல், திசைமாறி சென்றுவிடக்கூடாது. கல்லூரிகளில் படிக்கும் மாணவர்கள் எல்லோரும் தங்களின் கல்வித் தகுதிக்கேற்ப, நல்ல வேலைவாய்ப்புகளைப் பெறவேண்டும். நம்முடைய மாணவர்கள் உயர்கல்வி பல பயின்று, வாழ்க்கையில் சிறக்க வேண்டும் என்பதுதான் என்னுடைய கனவு!

இந்த இலக்குகளை அடைவதற்காகத் தான், நான் கடுமையாக உழைத்துப் புதிய பல திட்டங்களை உருவாக்கியிருக்கிறேன். மாணவக் கண்மணிகளான நீங்கள் எல்லோரும் இதுபோன்ற திட்டங்களைப் பயன்படுத்திக் கொள்ளவேண்டும். படித்து, நல்ல உயரங்களை அடைந்து, உங்களுக்காகவும், உங்கள் குடும்பத்தின் முன்னேற்றத்திற்காகவும் பாடுபடவேண்டும்.

வெற்றி ஒன்றே உங்கள் இலக்கு

வறுமை இல்லாத, சமத்துவம் வாய்ந்த, ஒரு அறிவார்ந்த தமிழ்ச் சமுதாயத்தை நாம் வருங்காலத்தில் உருவாக்க வேண்டும். உலக அளவில் முன்னணி மாநிலமாகத் தமிழ்நாடு விளங்க வேண்டும். மாணவர்கள் கல்வி கற்க எதுவும் தடையாக இருக்கக் கூடாது. தடங்கல் ஏற்பட்டால், அதை உடைத்தெறிந்து மாணவ சமுதாயம் வெற்றி பெறவேண்டும். அதற்கு வேண்டிய உதவிகளைச் செய்ய, நான் இருக்கிறேன்! நம்முடைய திராவிட மாடல் அரசு இருக்கிறது!

ஒலிம்பிக்கில் பங்கேற்ற சகோதரி வினேஷ் போகத் அவர்கள், தன்னுடைய வாழ்க்கையில் எப்படிப்பட்ட தடங்கல்களை எதிர்கொண்டார் என்று உங்கள் எல்லோருக்கும் நன்றாகத் தெரியும். ஆனால், அவர் பலவீனமானவராக வீட்டுக்குள் முடங்கிவிடாமல், தைரியமும், தன்னம்பிக்கையும், அசாத்திய துணிச்சலும் உள்ள பெண்ணாக போராடி, இன்றைக்கு நாம் எல்லோரும் பாராட்டக் கூடிய அளவிற்கு அவர் கொடிகட்டிப் பறந்து கொண்டிருக்கிறார்.

ஒன்றை மட்டும் ஞாபகத்தில் வைத்துக்கொள்ளுங்கள். "தடைகள் என்பது உடைத்தெறியத்தான்!" தடைகளைப் பார்த்து நீங்கள் ஒருபோதும் சோர்ந்துவிடக் கூடாது! முடங்கிவிடக் கூடாது! வெற்றி ஒன்றே உங்கள் இலக்காக இருக்கவேண்டும்! அதைக் குறி வையுங்கள்! நிச்சயம் ஒருநாள் வெற்றி வசப்படும்! உங்கள் மேல் நீங்கள் வைத்திருக்கும் நம்பிக்கையைவிட, அதிக நம்பிக்கையை நான் உங்கள் மேல் வைத்திருக்கிறேன்!

உங்களுக்குப் பின்னால், உங்கள் பெற்றோர், உங்கள் குடும்பம் மட்டுமல்ல; என்னுடைய திராவிட மாடல் அரசும் இருக்கும் என்பதை மறந்துவிடாதீர்கள்! மறந்துவிடாதீர்கள்!

வாழ்க்கையில் பல வெற்றிகளைப் பெற போகும் புதுமைப் பெண்களுக்கும், தமிழ்ப் புதல்வர்களுக்கும் என்னுடைய வாழ்த்துகள்! வாழ்த்துகள்! வாழ்த்துகள்! வாழ்த்துகள்! வாழ்த்துகள்!

செப்டம்பர் 16: திரு. எஸ். எஸ். இராமசாமி படையாச்சியார் அவர்கள் பிறந்த நாள்

"மறைந்தும் மறையாதவர்"

"இன்று ஓர் உணர்ச்சிகரமான விழா, நம்முடைய பேரன்பிற்குரிய மறைந்தும் மறையாமலும் நம்முடைய நெஞ்சங்களில் நிறைந்திருக்கின்ற எஸ்.எஸ்.இராமசாமி படையாச்சியார் அவர்களுடைய திருவுருவத்தை இங்கே சிலையாக நிறுத்தியிருக்கின்றோம். அதனைத் திறந்துவைத்து அந்த வைபவத்தை நாம் நிகழ்த்திக் கொண்டிருக்கிறோம்.

இந்தச் சிலை வடிக்க என்னுடைய உணர்வும் ஒரு காரணமாக இருந்தது என்றாலுங்கூட, அந்த உணர்வைத் தூண்டிவிட்டவர்கள் வாழப்பாடி ராமமூர்த்தி அவர்களும், அருமை நண்பர் தீரன் அவர்களும், வன்னிய அடிகளார் அவர்களும் என்பதை நான் இங்கே குறிப்பிட்டாக வேண்டும். ஒருநாள் காலையிலே என்னைச் சந்தித்து நேற்றைய தினம் ஒரு தீர்மானத்தை எங்கள் அமைப்பின் சார்பில் நிறைவேற்றியிருக்கிறோம். அதை நாங்கள் செய்து முடித்தாக வேண்டும். சென்னை மாநகரிலே ஒரு இடம் படையாச்சியாருடைய சிலையை அமைப்பதற்குக் கொடுங்கள் என்று கேட்டார்கள். வாழப்பாடியார் இங்கே குறிப்பிட்டதைப்போல் இடம் மாத்திரமல்ல, அந்த இடத்திலே நிச்சயமாகச் சிலையும் அமைத்துத் தருகிறோம், அதுவும் இந்த ஆட்சியின் சார்பாகவே அந்த நற்பணி நடைபெறும் என்று வாக்களித்தேன்.

சொன்னதைச் செய்வோம், செய்வதைச் சொல்வோம் என்பதுதான் இந்த அரசினுடைய தாரக மந்திரம் என்பதை நீங்கள் அறிவீர்கள். அதற்கேற்ப இந்தச் சிலை செய்து முடிக்கப்பட்டுச் சென்னை மாநகரிலே ஒரு முக்கியமானப் பகுதியிலே இன்றைக்குத் திறந்து வைக்கப்பட்டுள்ளது எனக்கு இரட்டிப்பு மகிழ்ச்சியாகும்.

— முத்தமிழறிஞர் டாக்டர் **கலைஞர்** அவர்கள்
21.02.2001 அன்று சென்னையில்
திரு. எஸ். எஸ். இராமசாமி படையாச்சியார்
அவர்களின் திருவுருவச் சிலையினைத்
திறந்து வைத்து ஆற்றிய உரையிலிருந்து...

ரூ.1,916.41 கோடிச் செலவில் 24,468 ஏக்கர் பாசன நிலங்கள் பயன்பெறும் அத்திக்கடவு - அவிநாசித் திட்டம்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் 17.08.2024 அன்று தலைமைச் செயலகத்தில், நீர்வளத் துறை சார்பில் ஈரோடு, திருப்பூர், கோவை மாவட்டங்களில் 24,468 ஏக்கர் பாசன நிலங்கள் பயன்பெறும் வகையில் 1,916.41 கோடி ரூபாய் செலவில் நிறைவேற்றப்பட்டுள்ள அத்திக்கடவு – அவிநாசித் திட்டத்தினைக் காணொலிக் காட்சி வாயிலாகத் தொடங்கி வைத்தார்.

நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு வித்திடும் விவசாயத்தை மேம்படுத்தும் வகையிலும், மக்களின் குடிநீர்த் தேவைகளைப் பூர்த்தி செய்யவும், கிடைக்கப் பெறும் நீரை வீணாக்காமல் நீர்நிலைகளில் தேக்கி வைக்கும் பொருட்டும், புதிய நீராதாரங்களை உருவாக்குதல், ஏற்கெனவே உள்ள நீர்நிலைகள், அதன் உட்கட்டமைப்புகளை நல்ல முறையில் பராமரித்தல், பாசனக் கட்டமைப்புகளான அணைகள், அணைக்கட்டுகள், நிலத்தடி தடுப்புச் சுவர்கள், கால்வாய்கள், வாய்க்கால்கள், ஏரிகள் போன்றவற்றை உருவாக்குதல், புனரமைத்தல், பராமரித்தல் போன்ற பல்வேறு முக்கியப் பணிகளை நீர்வளத்துறை மேற்கொண்டு வருகிறது.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க. ஸ்டாலின்** அவர்கள் மக்கள் பயன்பாட்டிற்காகக் காணொலிக் காட்சி வாயிலாகத் தொடங்கி வைத்தார் – 17.08.2024

அந்த வகையில், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்களின் தீவிர முயற்சிகளின் பயனாகத் தற்போது அத்திக்கடவு – அவிநாசித் திட்டம் வெற்றிகரமாக நிறைவேற்றப்பட்டுள்ளது.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் கோவை மாவட்ட விவசாயிகளின் நீண்ட காலக் கோரிக்கைகளை ஏற்று 1972ஆம் ஆண்டில் அத்திக்கடவு – அவிநாசித் திட்டத்தைச் செயல்படுத்திட முனைந்து நடவடிக்கைகளை மேற்கொண்டார். அந்நிலையில் ஏற்பட்ட ஆட்சி மாற்றத்தால் 1976-க்குப் பின் இத்திட்டத்தில் தொய்வு ஏற்பட்டது. மீண்டும் 1996-இல் முதலமைச்சராகப் பொறுப்பேற்ற முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் இத்திட்டம் குறித்து மறுபடியும் ஆய்வு

செய்து, திட்டத்தினை நிறைவேற்றிட ஒப்புதல் வழங்கினார். ஆனால் ஆட்சி மாற்றம் ஏற்பட்டதால் இத்திட்டத்தில் சுணக்கம் ஏற்பட்டது.

பின்னர், 2019-இல் இத்திட்டத்தைத் தொடங்கி நிறைவேற்றும் பணிகள் தொடர்ந்தன என்றாலும், 2021-இல் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் ஆட்சி அமைந்தபின்தான், இத்திட்டத்தினை நிறைவேற்றிட உறுதிபூண்டு, ரூ.1,916.41 கோடி மதிப்பீட்டில் திருத்திய நிருவாக ஒப்புதல் வழங்கப்பட்டுப் பணிகள் விரைவுபடுத்தப்பட்டன.

அதன் தொடர்ச்சியாகத் திட்டப் பணிகள் விரைந்து மேற்கொள்ளப்பட்டுத் தற்பொழுது அனைத்துப் பணிகளும் முடிவடைந்துள்ளன. சோதனை ஓட்டப் பணிகள் வெற்றிகரமாக நிறைவடைந்துள்ள நிலையில், அத்திக்கடவு – அவிநாசித் திட்டத்தினை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் காணொலிக் காட்சி வாயிலாகத் தொடங்கி வைத்தார்.

இத்திட்டத்தினைச் செயல்படுத்துவதன் மூலம் பவானி ஆற்றில் காளிங்கராயன் அணைக்கட்டின் கீழ்ப்புறத்திலிருந்து ஆண்டொன்றிற்கு 1.50 டி.எம்.சி உபரி நீரை வினாடிக்கு 250 கன அடி வீதம் 70 நாட்களுக்கு நீரேற்று முறையில், 1,065 கி.மீ. நீளத்திற்கு நிலத்தடியில் குழாய்ப் பதிப்பின் மூலம் ஈரோடு, திருப்பூர், கோயம்புத்தூர் ஆகிய மாவட்டங்களில் வறட்சியால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் 24,468 ஏக்கர் நிலங்கள் பாசனம் பெறும் வகையில் நீர்வளத்துறையின் 32 ஏரிகள், ஊராட்சி ஒன்றியத்தின் 42 ஏரிகள் மற்றும் 971 குளம் குட்டைகள் என மொத்தம் 1,045 எண்ணிக்கையிலான ஏரிகள், குளம், குட்டைகளில் நீர் நிரப்பப்படும்.

செப்டம்பர் 5: கப்பலோட்டியத் தமிழன் வ.உ.சிதம்பரனார் அவர்களின் பிறந்த நாள்

“தமிழறிஞர்”

“ஆங்கிலேயர்களுக்குச் சவால் விடும் வகையில் கப்பல் விட்டதும், விடுதலைப் போரில் ஈடுபட்டுச் சிறையில் செக்கிழுத்ததும் வ.உ.சிதம்பரனார் அவர்களின் உணர்ச்சிமிகு வரலாறு!

இந்த இணையற்ற தியாகங்களோடு வழக்கறிஞர், எழுத்தாளர், மொழிபெயர்ப்பாளர், உரையாசிரியராகவும் இருந்தவர் அவர். தொழிற்சங்க முன்னோடியாக விளங்கியவர். தொல்காப்பியம், திருக்குறள் போன்ற பழந்தமிழ் நூல்களைப் பதிப்பித்த தமிழறிஞர்.

அத்தகைய பேராளுமையின் அனைத்துப் பரிமாணங்களையும் அனைவருக்கும் கொண்டு சேர்க்கும் வகையில்தான் நமது திராவிட மாடல் ஆட்சியில் ‘வ.உ.சி. பன்னூல் திரட்டு’, வ.உ.சி. திருக்குறள் உரை’ உள்ளிட்ட நூல்களை அவரது 150ஆவது பிறந்த நாள் விழாவையொட்டி வெளியிட்டோம்!

தொடர்ந்து மேலும் பல முயற்சிகளின் வழியே இந்தியா மொத்தமும் அவர் தியாகத்தையும், பெரும்புலமையையும் அறியச் செய்வோம்!

— மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள்

மக்கள் போற்றிய மகத்தான திட்டங்கள்

அன்று...

"கண்ணொளி வழங்கும் திட்டம்"

"கிராமப் புறங்களில் உள்ள ஏழை, எளியோர், கண் நோய்க்குச் சிகிச்சைப் பெற நகர்ப் புறங்களுக்குச் செல்ல வசதியற்ற நிலையில் வாழ்கின்றனர். ஏற்கெனவே வேலைச் சுமைமிகுந்த கிராமப்புறத்துக் குடும்பங்களில் விழியற்ற குடும்ப உறுப்பினர்களுக்குத் துணையாயிருக்க வேண்டிய தவிர்க்க முடியாத நிலையும் உருவாகிறது. தன்னால் பிறர்படும் அவதி குறித்துக் கண் பார்வை இழந்தோர் கவலையுறுகின்றனர். தனியொருவர், ஒரு மருத்துவரை நாடி கண் சிகிச்சை பெறுவது என்பது இன்றைய ஏழை மக்களின் பொருளாதார வசதியில் சிறிதும் நினைத்துக்கூடப் பார்க்க முடியாத ஒன்று. இதனைக் கருத்தில் கொண்டு, எண்ணற்ற ஏழை எளியவர்களுக்குக் **"கண்ணொளி வழங்கும் சீரிய திட்டம்"** முத்தமிழறிஞர் **கலைஞர்** அவர்களால் 03.06.1972 அன்று சென்னையில் தொடங்கி வைக்கப்பட்டது."

இன்று...

"தமிழ்ப் புதல்வன் திட்டம்"

"அரசுக் கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் அதிக அளவில் மாணவர்கள் சேர்ந்து பயன்பெறும் வகையில், 6ஆம் வகுப்பு முதல் 12ஆம் வகுப்பு வரை அரசுப் பள்ளிகள் மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் தமிழ் வழியில் பயின்று இந்திய அரசு/தமிழ்நாடு அரசு/பல்கலைக்கழக மானியக் குழுவில் அங்கீகரிக்கப்பட்ட உயர்கல்வி நிறுவனங்களில் சேர்ந்து உயர்கல்வி பயிலும் சுமார் 3.38 இலட்சம் மாணவர்களுக்கு மாதந்தோறும் ரூ.1,000 உதவித்தொகை வழங்கும் **"தமிழ்ப் புதல்வன் திட்டத்தை"** மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **திரு. மு.க.ஸ்டாலின்** அவர்களால் 09.08.2024 அன்று கோயம்புத்தூரில் தொடங்கிவைக்கப்பட்டது."

மக்களைப் பாதுகாக்கும் காவலர்களைப் பாதுகாக்க வேண்டியது அரசின் கடமை...

மாண்புமிகு
தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள்
23.08.2024 அன்று சென்னை,
எழும்பூர் ராஜரத்தினம் விளையாட்டு
அரங்கில், காவல் துறை சார்பில்
நடைபெற்ற இந்தியக் குடியரசுத்
தலைவர் பதக்கங்கள், ஒன்றிய
உள்துறை அமைச்சர் பதக்கங்கள்,
தமிழ்நாடு முதலமைச்சர் பதக்கங்கள்
வழங்கும் விழாவில்
ஆற்றிய உரை.

உங்கள் அனைவருக்கும் என்னுடைய அன்பான வணக்கம்.

முதலமைச்சர் என்ற முறையில் தினமும் பல்வேறு துறைகள் சார்பில் நடக்கும் நிகழ்ச்சிகளில் நான் கலந்து கொள்கிறேன். இன்று காவல்துறை சார்பாக நடக்கும் விழாவில் பங்கெடுக்கிறேன் என்று சொன்னால் என்னுடைய துறையின் சார்பில் நடைபெறும் நிகழ்ச்சி என்பதால், கூடுதல் மகிழ்ச்சியை நான் அடைகிறேன்.

எல்லாத் துறைகளும் என்னுடைய துறைகள்தான். இருந்தாலும், காவல்துறையினர் என்னை அதிகம் உரிமை கொண்டாடிக் கொள்ள முடியும் என்பதுதான் உண்மை. என் துறையைச் சேர்ந்த காவலர்கள் பல்வேறு பதக்கங்களைப் பெற்றிருப்பதைப் பார்க்கும்போது நான் பதக்கம் வாங்கியதுபோல எனக்கு ஒரு மகிழ்ச்சி ஏற்படுகிறது.

இந்தியக் குடியரசுத் தலைவர் பதக்கங்கள் –

ஒன்றிய உள்துறை அமைச்சர் பதக்கங்கள் –

தமிழ்நாடு முதலமைச்சர் பதக்கங்கள் –

ஆகியவற்றை பெற்றுள்ள காவலர்கள் அனைவருக்கும் எனது வாழ்த்துகளையும், பாராட்டுக்களையும் நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

காவல்துறை – ஊழல் தடுப்பு, கண்காணிப்புத் துறை – தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறை – சிறைகள், சீர்திருத்தப் பணிகள் துறை – ஊர்க்காவல், குடிமைப் பாதுகாப்புப் படை தடய அறிவியல் – ஆகிய துறைகளில் பணியாற்றும் காவலர்களுக்கு இந்தப் பதக்கங்கள் வழங்கப்பட்டிருக்கின்றன.

இந்தப் பதக்கங்களுக்குப் பின்னால் இருக்கும் உங்கள் உழைப்பும், திறமையும் தலைவணங்கத்தக்க அம்சமாகும்! தமிழ்நாடு பெருமைமிகு மாநிலமாகத் திகழ்கிறது என்றால், அந்தப் பெருமையில் தமிழ்நாடு காவல்துறைக்குப் பெரும் பங்கு இருக்கிறது. அமைதியான மாநிலத்தில்தான் வளமும், வளர்ச்சியும் இருக்கும். தமிழ்நாட்டில் சட்டம் – ஒழுங்கு நிலை மிகவும் சிறப்பாக இருப்பதால்தான், தொழில் வளர்ச்சி, கல்வி வளர்ச்சி, உள்கட்டமைப்பு மேம்பாடு, மனித வளர்ச்சிக் குறியீடுகள் என்று எதை எடுத்துக் கொண்டாலும் தமிழ்நாடு இந்தியாவில் முன்னணி மாநிலமாகத் திகழ்கிறது. இத்தகைய பெருமையை அரசுக்கு உருவாக்கித் தரும் காவலர்கள் எல்லோருமே பதக்கங்களுக்குத் தகுதி படைத்தவர்கள்தான்!

சிறப்பாகப் பணியாற்றும் காவலர்களுக்கு ஆண்டுதோறும் பதக்கமும், விருதும் வழங்கிப் பாராட்டுவதை 1969ஆம் ஆண்டு தொடங்கி வைத்தவரே அன்றைய முதலமைச்சராக இருந்த முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்கள். 21.08.1969 அன்று அண்ணா பதக்கங்களை வழங்கினார் முதலமைச்சர் கலைஞர் அவர்கள். பதக்கம் கொடுக்கத் தொடங்கி 55 ஆண்டுகள் ஆகிவிட்டது. ஆண்டுதோறும் அண்ணா பதக்கம் வழங்கப்படுகிறது. காவல்துறை அதிகாரிகள் எல்லோருக்கும் மிகப்பெரிய ஊக்கம் அளிப்பதாக அது அமைந்திருக்கிறது.

சட்டம் ஒழுங்கை நிலைநிறுத்தும் பணியில் அர்ப்பணிப்போடு செயல்படும் காவல் அதிகாரிகளையும், காவல் ஆளிநர்களையும் நான் மனதாரப் பாராட்டுகிறேன். இதுபோன்ற பதக்கங்கள் வழங்கப்படுவதும், அதற்காக விழா நடத்துவதும், இதுபோன்ற பதக்கங்களை மற்றவர்களும் பெற வேண்டும் என்ற ஊக்கத்தை அளிக்கத்தான்.

கடமை – கண்ணியம் – கட்டுப்பாடு என்ற நெறிகளைப் பின்பற்றி அல்லும் பகலும் உழைத்தால், அவர்கள் போற்றப்படுவார்கள் என்பதற்கு எடுத்துக்காட்டாக இந்த நிகழ்ச்சி நடைபெற்று வருகிறது. உங்கள் கடமையை நீங்கள் செய்தால், அதற்கான பாராட்டும் பலனும் உங்களைத் தேடி வந்து சேரும். அதற்கு எடுத்துக்காட்டுதான் இந்த விழா.

பிரிட்டிஷ் ஆட்சிக் காலத்தில் இருந்தே நம்முடைய சென்னை காவல்துறை மிகச் சிறப்பான காவல்துறையாக இருந்து வந்தாலும், 1970ஆம் ஆண்டு காவல்துறையை நவீனமயம் ஆக்கியவர், அந்தப் பணியை மிகச் சிறப்பாகச் செய்தவர் அன்றைய முதலமைச்சராக இருந்த முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்கள்தான். இதை தமிழ்நாடு காவல்துறை ஐ.ஜி.-ஆக அந்தக் காலத்தில் இருந்த மரியாதைக்குரிய எப்.வி. அருள் அவர்களே குறிப்பிட்டுச் சொல்லியிருக்கிறார்.

காவல்துறையை நவீனப்படுத்துவதற்காக இந்தியாவிலேயே முதல் காவல் ஆணையத்தை அமைத்தவர் முதலமைச்சர் கலைஞர் அவர்கள்.

அதன் பிறகுதான், ஒன்றிய அளவில் காவல்துறையை நவீனமயமாக்கும் பணிகள் தொடங்கியது. இரண்டாவது – மூன்றாவது காவல் ஆணையத்தையும் கலைஞர் அவர்கள்தான் அமைத்தார். ஐந்தாவது காவல் ஆணையத்தை சென்னை உயர்நீதிமன்ற ஓய்வுபெற்ற நீதியரசர் சி.டி. செல்வம் தலைமையில் திராவிட மாடல் அரசு அமைத்திருக்கிறது. மக்களைப் பாதுகாக்கும் காவலர்களைப் பாதுகாக்க வேண்டியது அரசின் கடமை!

அந்த அடிப்படையில்தான், இந்த ஆணையத்தை அமைத்து காவலர்கள் கோரிக்கைகளை நிறைவேற்றிக் கொடுத்து வருகிறோம். காவல்துறையை மேலும் நவீனமயமாக்கி வருகிறோம். கடந்த மூன்றாண்டு காலத்தில் காவல் துறையின் உட்கட்டமைப்பை வலுப்படுத்தவும், காவல் துறையை நவீனமயமாக்கவும், காவலர் நலனைப் பாதுகாக்கவும் பல்வேறு சாதனைகள் செய்யப்பட்டுக் கொண்டிருக்கின்றன.

காவல்துறையில் முதன்முதலாக மகளிரை இடம்பெறச் செய்தது தலைவர் கலைஞர் அவர்கள்தான். இன்று எனக்கு அளிக்கப்பட்ட அணிவகுப்பு மரியாதை கமாண்டராக ஒரு பெண் அதிகாரி இருந்து அந்த காட்சியை நீங்கள் பார்த்தீர்கள். அது எனக்கு மிகவும் இரட்டிப்பு மகிழ்ச்சியாக இருக்கிறது. மகளிர் பொன்விழா ஆண்டான இப்போது, மகளிர் காவலர்களிடையே நீண்ட நாட்களாக இருக்கும் ஒரு கோரிக்கையை மிகுந்த மகிழ்ச்சியோடும், மனநிறைவோடும், இந்த நிகழ்ச்சியில் அறிவிப்பாக நான் வெளியிட விரும்புகிறேன்.

தமிழ்நாடு காவல்துறையில் பணிபுரியும் பெண் காவலர்களுக்கு

ஒரு ஆண்டு மகப்பேறு விடுமுறை அளிக்கப்படுகிறது. இந்த விடுமுறை முடிந்து, அவர்கள் பணிக்கு திரும்பும்போது அவர்கள் குழந்தைகளைப் பராமரிப்பதில் பல சிரமங்கள் ஏற்படுவது தொடர்பாகத் தொடர்ந்து அவர்கள் கோரிக்கை வைத்து வருகிறார்கள்.

அவர்கள் கோரிக்கையை ஏற்று, மகப்பேறு விடுமுறையில் இருந்து பணிக்குத் திரும்பும் பெண் காவலர்களுக்கு, அவர்கள் பணிமூப்புக்கு விலக்களித்து, அவர்களுடைய பெற்றோர்களோ

அல்லது கணவர் வீட்டைச் சார்ந்தவர்களோ வசிக்கும் மாவட்டங்களுக்கு அடுத்த மூன்று ஆண்டுகளுக்குப் பணிமாறுதல் வழங்க அரசு முடிவு செய்திருக்கிறது என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும், பெண்கள், குழந்தைகளை பாதிக்கும் குற்றச்செயல் பிரச்சினைகளை தீர்ப்பதில் நம்முடைய பெண் காவலர்கள் மிக முக்கியப் பங்காற்றுகிறார்கள். எனவே, இப்படிப்பட்ட குற்றங்களைக் கையாளுவதில் பெண் காவலர்களின் தொழில்முறைத் திறன்களை மேலும் மேம்படுத்தும் வகையில், பெண் கடத்தல் குற்றங்கள், பெண்கள், குழந்தைகளுக்கு எதிரான சைபர் குற்றங்களை விசாரித்துத் தீர்ப்பதற்கு அவர்களுக்கு சிறப்புத் திறன் பயிற்சி அளிக்கப்படும்.

உங்களுக்கு இருக்கும் கடமையும், பொறுப்பும் மிகமிகப் பெரியது. மக்களைக் காப்பாற்றுவது உங்கள் கடமை! மக்களைப் பாதுகாப்பது உங்கள் பொறுப்பு! அதை எந்தக் குறையும் இல்லாமல் நீங்கள் நிறைவேற்றித் தாருங்கள் என்பதுதான் என்னுடைய வேண்டுகோள்.

குற்றங்களைக் குறைக்கும் துறையாக மட்டும் இல்லாமல், குற்றங்கள் நடப்பதற்கு முன்பே தடுக்கும் துறையாகச் செயல்பட வேண்டும் என்று நான் தொடர்ந்து சொல்லிக் கொண்டு வருகிறேன். குற்றங்கள் நடக்காத மாநிலமாக – போதைப் பொருள் நடமாட்டம் இல்லாத மாநிலமாக – பாலியல் குற்றம் இல்லாத மாநிலமாக – நம்முடைய மாநிலம் உருவாக வேண்டும்.

குற்றங்கள் எங்கேயும், யாராலும் நடக்கக் கூடாது. மீறி நடந்தால், உடனடியாகக் குற்றவாளி கைது செய்யப்பட்டாக வேண்டும். சட்டத்தின் முன் நிறுத்தப்பட்டு விரைவாகத் தண்டனையைப் பெற்றுத் தந்தாக வேண்டும். இந்த உறுதிமொழியை நான் மட்டும் எடுத்தால் போதாது – காவல்துறையின் உயரதிகாரிகள் மட்டும் எடுத்தால் போதாது – ஒவ்வொரு காவலரும் எடுத்தாக வேண்டும். "என்னுடைய காவல் எல்லைக்கு உட்பட்ட பகுதியில் எந்த வகைப்பட்ட குற்றமும் நடக்கவில்லை – நடக்க விடமாட்டேன்" என்று ஒரு காவலர் முடிவெடுத்துவிட்டால் குற்றங்கள் பூஜ்ஜியத்திற்கு வந்துவிடும்.

மனித வளர்ச்சியின் அனைத்துக் குறியீடுகளிலும் முன்னணி மாநிலமாக இருக்கும் தமிழ்நாடு – குற்றச் சம்பவங்களில் பூஜ்ஜியமாக இருந்தால்தான், நமக்கெல்லாம் பெருமை. இதில் பூஜ்ஜியம் வாங்க – 100 விழுக்காடு அர்ப்பணிப்புடன், அனைத்துக் காவலர்களும் பணியாற்ற வேண்டும் என்று கேட்டு, விருது பெற்ற அனைவரையும் பாராட்டி, மகிழ்ந்து வணக்கம் சொல்லி, விடைபெறுகிறேன்.

"வேர்களைத் தேடி" திட்டத்தின்கீழ் 15 நாடுகளைச் சேர்ந்த 100 அயலகத் தமிழ் இளைஞர்களுக்குச் சுற்றுப்பயணத்திற்கான பொருட்கள்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் தொடங்கி வைத்தார் - 01.08.2024

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் 01.08.2024 அன்று தலைமைச் செயலகத்தில், தமிழ்நாட்டின் கலாச்சார உறவுகளை மேம்படுத்தும் "வேர்களைத் தேடி" திட்டத்தின்கீழ், தென் ஆப்ரிக்கா, உகாண்டா, குவாடலூப், மார்டினிக், பிஜி, இந்தோனேஷியா, மொரிஷியஸ், ஆஸ்திரேலியா, மாலத்தீவு, கனடா, மியான்மர், மலேசியா, இலங்கை, பிரான்சு, ஜெர்மனி ஆகிய நாடுகளைச் சேர்ந்த 100 அயலகத் தமிழ் இளைஞர்கள் 01.08.2024 அன்று முதல் 15.08.2024 வரையிலான தமிழகச் சுற்றுப் பயணத்திற்கு துணிமணிகள், பயணக் குறிப்புகள், புத்தகங்கள், அடையாள அட்டை போன்ற பயணத்திற்கான பொருட்களை வழங்கித் தொடங்கி வைத்தார்.

புலம்பெயர்ந்து வாழும் இளைஞர்களை தாய்த் தமிழ்நாட்டின் மரபின் வேர்களோடு உள்ள தொடர்பைப் புதுப்பிக்கும் வண்ணமும், தமிழ் கலைப் பண்பாடு, கலாச்சாரத்தினை அயலகத் தமிழர்களிடையே பரிமாற்றம் செய்யும் வகையிலும், ஆண்டுதோறும் இளைஞர்களைத் தேர்ந்தெடுத்து அவர்களைத் தமிழ்நாட்டிற்கு அழைத்து வந்து பண்டைய தமிழர்களின் கட்டடம் / சிற்பக்கலை, நீர் மேலாண்மை, ஆடைகள், ஆபரணங்கள், கலை இலக்கியப் பண்பாடு, தொல்லியல் ஆய்வுகள், அறிஞர்கள், சான்றோர்களுடன் கலந்துரையாடல் என்ற கலாச்சாரப் பரிமாற்ற சுற்றுலாத் திட்டமான "வேர்களைத் தேடி" என்ற அயலகத் தமிழ் இளைஞர்களுக்கானத் திட்டத்தை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 24.05.2023 அன்று சிங்கப்பூரில் நடைபெற்ற தமிழ் கலைப் பண்பாட்டு நிகழ்ச்சியில் தொடங்கி வைத்தார்.

இத்திட்டத்தின்படி, அயலகத்தில் வாழும் 18 முதல் 30 வயதுக்கு உட்பட்ட தமிழ் இளைஞர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு, தமிழ்நாட்டுக்கு வரவழைத்து, தமிழ் மற்றும் தமிழர்களின் பெருமிதங்களை உணரும் வகையில் தமிழ்நாட்டின் வரலாற்றுச் சிறப்புமிக்க இடங்களுக்கு, தமிழ்நாடு அரசு சார்பில் அழைத்துச் செல்லப்படுவர்.

அதன் அடிப்படையில், சென்ற ஆண்டு இந்தப் பண்பாட்டுப் பயணத்திட்டத்தில், அயலகத் தமிழர் நலன் மற்றும் மறுவாழ்வுத்துறை ஆணையரகம் மூலம் நான்கு நாடுகளைச் சேர்ந்த தமிழ் இளைஞர்களைக் கொண்ட முதற்கட்டப் பயணம் மேற்கொள்ளப்பட்டது.

அதன் தொடர்ச்சியாக, நடப்பு ஆண்டில் இரண்டாம் கட்டப் பயணமாக, தென் ஆப்ரிக்கா, உகாண்டா, குவாடலூப், மார்டினிக், பிஜி, இந்தோனேஷியா, மொரிஷியஸ், ஆஸ்திரேலியா, மாலத்தீவு, கனடா, மியான்மர், மலேசியா, இலங்கை, பிரான்சு, ஜெர்மனி ஆகிய 15 நாடுகளைச் சேர்ந்த 100 அயலகத் தமிழ் இளைஞர்கள் 01.08.2024 அன்று முதல் 15.08.2024 வரையிலான பதினைந்து நாட்களுக்கு அழைத்துச் செல்லப்பட உள்ளனர்.

பழனியில் அனைத்துலக முத்தமிழ் முருகன் மாநாடு

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள்
காணொலிக் காட்சி வாயிலாகத் தொடங்கி வைத்து ஆற்றிய உரை - 24.08.2024

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் 24.08.2024 அன்று முகாம் அலுவலகத்திலிருந்து காணொலிக் காட்சி வாயிலாக இந்து சமய அறநிலையத் துறை சார்பாகப் பழனியில் அனைத்துலக முத்தமிழ் முருகன் மாநாட்டினைத் தொடங்கி வைத்தார்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தலைமையில் 27.02.2024 அன்று நடைபெற்ற இந்து சமய அறநிலையத்துறை ஆலோசனைக் கூட்டத்தில், தமிழ்க் கடவுளான முருகப்பெருமானின் பெருமையை உலகெங்கிலும் உள்ள முருகபக்தர்கள் அறிந்து கொள்ளும் வகையில் அறுபடை வீடுகளில் ஒன்றான பழனியில் அனைத்துலக முத்தமிழ் முருகன் மாநாடு நடத்திட முடிவு செய்யப்பட்டது. அதன்படி, 2024 ஆகஸ்ட் 24, 25 ஆகிய தேதிகளில் பழனியில் நடைபெறும் இம்மாநாட்டில் இந்தியா, வெளிநாடுகளிலிருந்து முக்கியப் பிரமுகர்கள், முருக பக்தர்கள் கலந்து கொள்கின்றனர்.

இம்மாநாட்டு வளாகத்தில் வேல் அரங்கம், அருள்தரும் அறுபடை முருகனின் மூலவர் காட்சிகள், பார்ப்பவர்கள் பரவசமடையும் மெய்நிகர் காட்சிகள், முப்பரிமாணப் பாடலரங்கம், சிறப்புப் புகைப்படக் கண்காட்சி, ஆய்வரங்கங்கள் போன்றவை அமைக்கப்பட்டுள்ளன.

அனைத்துலக முத்தமிழ் முருகன் மாநாட்டில் மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள், மாண்பமை சென்னை உயர்நீதிமன்ற நீதியரசர்கள், தவத்திரு ஆதீனப் பெருமக்கள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், வெளிநாடுகளிலிருந்து வருகை தந்துள்ள முக்கியப் பிரமுகர்கள், முருகப் பக்தர்கள், ஆராய்ச்சியாளர்கள் பங்கேற்றுச் சிறப்பிக்கின்றனர். அதனைத் தொடர்ந்து மாநாட்டு விழா மலர், ஆய்வு மலர்கள் வெளியிடப்படுகின்றன.

மாநாட்டின் நிறைவு விழாவில் தமிழ்க்கடவுள் முருகனின் பெருமைகளை உலகறியும் வகையில் பறைசாற்றிய அடியார்கள், சமயப்பணி புரிந்தோர், சமயச் சொற்பொழிவாளர்கள், அதிகளவில் திருப்பணி மேற்கொண்டோர், ஆன்மிக, இலக்கிய படைப்பாளர்களை சிறப்பிக்கும் வகையில் நக்கீரர், போகர், அருணகிரிநாதர், குமரகுருபரர், பாம்பன் சுவாமிகள். அண்ணாமலை ரெட்டியார், முருகம்மையார், பாலதேவராயர், திருமுருக கிருபானந்த வாரியார், தேனூர் வரகவி சொக்கலிங்கனார், கந்தபுராணக் கச்சியப்பர், பகழிக்கூத்தர், சிதம்பரச் சுவாமிகள், வண்ணச்சரபம் தண்டபாணி சுவாமிகள், மாம்பழக் கவிச்சிங்க நாவலர் என 15 முருகனடியார்களின் பெயரில் விருதுகள் வழங்கிச் சிறப்புச் செய்யப்பட உள்ளது. மாநாட்டின் இரண்டு நாட்களும் ஆன்மிக சொற்பொழிவுகள், கருத்தரங்கம், இசை, நாட்டிய நிகழ்ச்சிகள்,கலைநிகழ்ச்சிகள் நடத்தப்படுகின்றன.

இந்து சமய அறநிலையத்துறையின் வரலாற்றில் இம்மாநாடு முத்தாய்ப்பாக அமைவதோடு, தமிழ்க் கடவுளாம் முருக பெருமானின் பெருமைகளை மென்மேலும் பறைசாற்றி, உலகெங்கும் உள்ள முருக பக்தர்கள்

பெருமையும், பேருவகையும் கொள்ளச் செய்யும் வகையில் சிறப்பாக நடைபெறும்.

இந்நிகழ்ச்சியில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஆற்றிய உரை:

உங்கள் அனைவருக்கும் எனது வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

இந்து சமய அறநிலையத் துறை சார்பில் 'அனைத்துலக முத்தமிழ் முருகன் மாநாடு' மிகச் சிறப்பாக ஏற்பாடு செய்யப்பட்டிருப்பதற்கு என்னுடைய வாழ்த்துகள்!

'செயல்பாபு' என்று என்னால் அழைக்கப்படும் சேகர்பாபு அவர்கள், அறநிலையத் துறை அமைச்சராக வந்த பிறகு, இந்தத் துறை மிகச் சிறப்பாகச் செயல்பட்டு வருகிறது என்று எல்லோருடைய பாராட்டுக்களையும் பெற்றிருக்கிறது!

"கோயிலைக் கவனித்துக் கொள்ளுங்கள்" என்று நான் அறநிலையத் துறையை அவரிடம் கொடுத்தேன். ஆனால், கோயிலிலேயே குடியிருக்கின்ற ஒருவர் உங்களுக்கு அமைச்சராக கிடைத்திருக்கிறார். நாள்தோறும் ஆன்மீகப் பெரியவர்கள் அறநிலையத் துறையையும், அமைச்சர் சேகர்பாபு அவர்களையும் பாராட்டிக் கொண்டிருக்கிறார்கள்.

இந்து சமய அறநிலையத் துறை சார்பில் ஏராளமான நிகழ்ச்சிகள் நடத்தப்படுகின்றன; திட்டங்கள் செயல்படுத்தப்படுகின்றன. நானும் பல நிகழ்ச்சிகளில் பங்கெடுத்திருக்கிறேன். அந்த வரிசையில், பழனியில் அனைத்துலக முத்தமிழ் முருகன் மாநாடு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

திருக்கோயில் பெருந்திட்டப் பணிகள்

தலைவர் கலைஞர் ஆட்சிக் காலத்தில் நடந்த மக்கள் பணிகளைப் பார்த்துத் தவத்திரு. குன்றக்குடி அடிகளாரும், திருமுருக கிருபானந்த வாரியாரும் பாராட்டினார்கள். இன்றைய ஆட்சியை நீங்கள் எல்லோரும் பாராட்டிக் கொண்டிருக்கிறீர்கள். அதன் அடையாளம்தான், பழனியில் நீங்கள் எல்லோரும் கூடி இருப்பது. அந்த வகையில், பக்தர்கள் உட்பட அனைவரும் விரும்பும் ஆட்சியாகக் கழக ஆட்சி நடைபெற்று வருகிறது.

இந்த மாநாடு ஏற்பாடு செய்யப்பட்டவுடனே, அறநிலையத்துறை சார்பாகச் செய்யப்பட்டு வருகின்ற பணிகளின் பட்டியலை தரச் சொல்லி, அமைச்சர் சேகர்பாபுவிடம் கேட்டேன். அதில் அவர் குறிப்பிட்டிருந்த பணிகளில் சிலவற்றை இங்கே குறிப்பிட்டால் பொருத்தமாக இருக்கும் என்று நினைக்கிறேன்.

✶ பழனி, திருத்தணி, திருச்செந்தூர், மருதமலை, குமாரவயலூர், சிறுவாபுரி, காந்தல் ஆகிய ஏழு முருகன் திருக்கோயில்களில் பெருந்திட்டப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

✶ பழனி அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயிலுக்கு வருகிற பக்தர்கள் எண்ணிக்கை, நாளுக்குநாள் அதிகரித்துக் கொண்டே இருப்பதால், பக்தர்கள் நலனை மனதில் வைத்து, கோயில் வளர்ச்சிப் பணிகளைத் தொடங்கி இருக்கிறோம். வளர்ச்சித் திட்டப் பணிகளுக்காக 58.77 ஏக்கர்

நிலங்களை 58 கோடியே 54 இலட்ச ரூபாய் இழப்பீட்டுத் தொகை வழங்கி கையகப்படுத்துகின்ற பணிகள் நடைபெற்று வருகின்றன.

✶ அறுபடை வீடு முருகன் திருக்கோயில்களில் 789 கோடியே 85 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 251 பணிகள் நடைபெற்று வருகின்றன.

✶ அறுபடை வீடு அல்லாத முருகன் திருக்கோயில்களில் 277 கோடியே 27 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 588 பணிகள் நடைபெற்று வருகின்றன.

✶ 69 முருகன் திருக்கோயில்களின் திருப்பணிகளை முடித்துக் குடமுழுக்கு விழா நடத்தப்பட்டிருக்கிறது.

பக்தர்களுக்கு அன்னதானம்

✶ பழனி அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில் சார்பில் நடத்துகின்ற கல்வி நிறுவனங்களில் படிக்கின்ற 4,000 மாணவ, மாணவிகளுக்குக் கட்டணமில்லாத காலைச் சிற்றுண்டி வழங்கப்படுகிறது. இந்த ஆண்டு இந்தத் திட்டம் விரிவுபடுத்தப்பட்டு மதிய உணவும் வழங்கப்பட இருக்கிறது.

✶ பழனி திருக்கோயிலுக்கு தைப்பூசம், பங்குனி உத்திரம் திருவிழாக்களுக்கு பாதயாத்திரை வருகின்ற பக்தர்களுக்கு அன்னதானம் வழங்கப்பட்டு வருகிறது.

✶ பழனி அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயிலில் பணிபுரிந்து ஓய்வு பெற்று, துறை நிலையிலான ஓய்வூதியம் வாங்குகிற 258 ஓய்வூதியதாரர்களுக்கு நபர் ஒருவருக்கு ஓய்வூதியம் 3,000 ரூபாய் என்று வழங்கப்பட்டு வந்ததை 4,000 ரூபாயாக உயர்த்தியும், 54 குடும்ப ஓய்வூதியதாரர்களுக்கு நபர் ஒருவருக்கு 1,500 ரூபாய் வழங்கப்பட்டதை 2,000 ரூபாயாக உயர்த்தியும் வழங்கிக் கொண்டிருக்கிறோம்.

✶ 2024-ஆம் ஆண்டு அறுபடை வீடு ஆன்மீக சுற்றுப்பயணத்துக்கு 1,000 பக்தர்கள் அழைத்துச் செல்லப்படுவார்கள் என்று அறிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து, இதுநாள்வரை 813 நபர்கள் பயனடைந்திருக்கிறார்கள்.

✶ அனைத்துத் திருக்கோயில்களிலும் பக்தர்களுக்கு கட்டணமில்லாத முடிக் காணிக்கை செலுத்தும் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. மேலும், முடிக் காணிக்கைப் பணியாளர்களுக்கு மாதம் 5,000 ரூபாய் ஊக்கத்தொகை வழங்கப்படுகிறது.

✶ தவில், நாதஸ்வரக் கல்லூரி, அர்ச்சகர், வேத ஆகம பள்ளிகளில் படிக்கின்ற மாணவர்களுக்கு மாதந்தோறும் ஊக்கத்தொகையாக 3,000 ரூபாய் வழங்கப்பட்டு வந்ததை 24.11.2023 முதல் 4,000 ரூபாயாக உயர்த்தி வழங்கப்பட்டு வருகிறது.

திருக்கோயில் பணியாளர்களுக்கு ஊக்கத்தொகை

✶ பழனி அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயிலில் தினக்கூலி, தொகுப்பூதிய அடிப்படையில் தொடர்ந்து 5 ஆண்டுகள் பணிபுரிந்த 13 பணியாளர்கள் பணிநிரந்தரம் செய்யப்பட்டிருக்கிறார்கள். இந்தத்திருக்கோயிலில் பணிபுரிந்து பணிக்காலத்தில் மறைவெய்திய பணியாளர்களின் வாரிசுதாரர்கள் 8 நபர்களுக்கு கருணை அடிப்படையிலான பணிநியமன ஆணை வழங்கப்பட்டிருக்கிறது.

✶ இதுவரை, திருக்கோயில்களில் தினக்கூலி, தொகுப்பூதியத்தில் பணிபுரிந்து வந்த 1,298 பணியாளர்கள் பணிநிரந்தரம் செய்யப்பட்டிருக்கிறார்கள். 111 பணியாளர்கள் கருணை அடிப்படையில் பணிநியமனம் செய்யப்பட்டிருக்கிறார்கள்.

✶ திருக்கோயில் பணியாளர்களுக்கு ஊக்கத்தொகை வழங்குதல், ஊக்கத்தொகை உயர்வு செய்தல், தினக்கூலி, தொகுப்பு ஊதியத்தில் பணிபுரிந்த 1,298 பணியாளர்களுக்குப் பணிநிரந்தரம் வழங்கப்பட்டது. ஓய்வூதியதாரர்களுக்குத் தொகை உயர்வும் வழங்கப்பட்டிருக்கிறது – இப்படி வரிசைப்படுத்திக் கொண்டே போகலாம்.

ஏதோ திடீர் என்று பழனியில் மாநாடு நடத்தவில்லை; இப்படிப்பட்ட பணிகளை எல்லாம் செய்து கொண்டுதான் பழனியில் இந்த மாநாட்டை இந்து சமய அறநிலையத்துறை நடத்துகிறது.

ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு விதமான நம்பிக்கைகள் இருக்கும். அதில் உயர்வு தாழ்வு இல்லை. அந்த நம்பிக்கைகளுக்குத் திராவிட மாடல் அரசு எப்போதும் தடையாக இருந்தது இல்லை. அதுமட்டுமல்ல, அனைவரது நம்பிக்கைக்கும் நன்மை செய்து தரக்கூடிய அரசாகவும் செயல்பட்டு வருகிறது.

திராவிட மாடல் என்பது எல்லோர்க்கும் எல்லாம் என்ற கருத்தியலை அடிப்படையாகக் கொண்டது. அனைத்துத் துறை வளர்ச்சி – அனைத்து சமூக வளர்ச்சி – அனைத்து மாவட்ட வளர்ச்சி – என்று விளக்கிக்கொண்டு வருகிறோம். அந்த வகையில்,

இந்து சமய அறநிலையத் துறையையும் மிகச் சிறப்பாக நடத்திக்கொண்டு வருகிறோம்.

அறநிலையப் பாதுகாப்புச் சட்டம்

திராவிட முன்னேற்றக் கழகத்தின் தாய் அமைப்பான நீதிக்கட்சி ஆட்சிக் காலத்தில்தான் பழுத்த ஆத்திகரான அன்றைய முதலமைச்சர் பனகல் அரசரால் இந்து சமய அறநிலையப் பாதுகாப்புச் சட்டம் நிறைவேற்றப்பட்டது. பண்பாட்டுச் சின்னங்களான கோயில்கள் முறையாகப் பாதுகாக்கப்படவேண்டும், முறையாக செயல்படவேண்டும் என்ற நோக்கத்துடன் அந்தச் சட்டம் கொண்டு வரப்பட்டது. இன்று சீரோடும், சிறப்போடும் கோயில்கள் இயங்க அடித்தளம் அமைத்தது அந்தச் சட்டம்தான்.

கடந்த மூன்றாண்டுக் காலத்தில் –

1,355 திருக்கோயில்களில் குடமுழுக்கு விழாக்கள்.

3 ஆயிரத்து 776 கோடி ரூபாயில் 8 ஆயிரத்து 436 திருக்கோயில்களில் திருப்பணிகள்.

50 கோடி ரூபாயில் கிராமப்புற ஆதிதிராவிடர் கோயில்களில் திருப்பணிகள் நடத்தி இருக்கிறோம்.

62 கோடியே 76 இலட்சம் ரூபாயில் 27 திருக்கோயில்களில் இராஜகோபுரங்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன.

80 கோடியே 50 இலட்சம் ரூபாயில் பழனி – இடும்பன்மலை, திருநீர்மலை, திருக்கழுக்குன்றம் கோயில்களில் கம்பிவட ஊர்திகள் அமைக்கப்பட்டிருக்கின்றன.

திருக்கோயில் சொத்துக்கள் மீட்பு

5 ஆயிரத்து 577 கோடி ரூபாய் மதிப்புடைய 6 ஆயிரத்து 140 ஏக்கர் கோயில் நிலங்கள் ஆக்கிரமிப்பில் இருந்து மீட்கப்பட்டிருக்கிறது.

756 திருக்கோயில்களில் நாள் முழுவதும் அன்னதானம் வழங்கும் திட்டம் செயல்பாட்டில் இருக்கிறது. தினந்தோறும் 82 ஆயிரம் பேர் உணவு உண்டு வருகிறார்கள்.

கோயில் சொத்துக்களை அளவிடும் பணி நடைபெற்று வருகிறது. கடந்த மூன்றாண்டுகளில் 1 இலட்சத்து 59 ஆயிரத்து 507 ஏக்கர் நிலங்கள் நவீன ரோவர் கருவிகள் மூலம் அளவீடு செய்யப்பட்டு; 64 ஆயிரத்து 522 கற்கள் நடப்பட்டுள்ளன.

4 ஆயிரத்து 189 ஏக்கர் நிலம், மீண்டும் கோயில் பெயரில் பட்டா செய்யப்பட்டிருக்கிறது.

திராவிடமாடல் அரசின் சாதனைகள்

இப்போது நான் சொன்னதெல்லாம் மிகவும் குறைவு. நம்முடைய திராவிட மாடல் அரசின் சாதனைகளை, இந்து சமய அறநிலையத்துறை மூலமாக ஒரு புத்தகமாகவே போடப்பட்டிருக்கிறது. அதில் இருந்து சிலவற்றைத்தான் நான் இப்போது சொல்லியிருக்கேன். அந்தப் புத்தகத்தை நீங்கள் எல்லோரும் வாங்கிப் படிக்கவேண்டும். நீங்கள் மட்டுமில்லை; ஊடகத்துறையைச் சேர்ந்த நண்பர்களும் இந்தச் சாதனைகளை மக்களிடம் கொண்டு சேர்க்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அந்தச் சாதனைகளுக்கு மகுடம் வைத்தது போல, பழனியில் நடக்கின்ற இந்த அனைத்துலக முத்தமிழ் முருகன் மாநாடு, இந்து சமய அறநிலையத் துறை வரலாற்றில் மட்டுமல்ல, தமிழ்நாட்டு ஆன்மீக வரலாற்றிலேயே மிகச் சிறப்பான இடத்தைப் பெறும்!

நீதியரசர்கள், மகா சன்னிதானங்கள், ஆன்மீகப் பெரியவர்கள், சமயச் சொற்பொழிவாளர்கள், தமிழ் இலக்கிய அறிஞர்கள், புலவர்கள், பேராசிரியர்கள், பேச்சாளர்கள், இசைக் கலைஞர்கள், நாட்டியக் கலைஞர்கள், பாடகர்கள் என்று பல்துறை அறிஞர்கள் பழனியில் சங்கமிக்கின்ற இந்த மாநாட்டுக்கு என்னுடைய வாழ்த்துகள்!

ஆலய வழிபாடுகளில் தமிழ்மொழி முதன்மை பெறவேண்டும்! திருக்கோயில் கருவறைக்குள் மனிதருக்கிடையே பாகுபாடு காட்டாத சமத்துவம் நிலவவேண்டும்! அன்பால் உயிர்கள் ஒன்றாகும்! அறத்தால் உலகம் நன்றாகும்!

நன்றி! வணக்கம்!

இந்நிகழ்ச்சியில் மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின் அவர்கள் ஆற்றிய உரை:

உங்கள் அனைவருக்கும் எனது வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

தமிழ்நாடு அரசின் இந்து சமய அறநிலையத்துறையின் சார்பாக நடத்தப்படுகின்ற அனைத்துலக முத்தமிழ் முருகன் மாநாட்டினை நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தொடங்கி வைத்தார்கள். காணொலிக் காட்சி மூலமாக இந்த மாநாட்டில் பங்கேற்றுப் பேசுவதில் நான் மிகுந்த மகிழ்ச்சி அடைகின்றேன், பெருமை அடைகின்றேன். உலகமெங்குமிருந்து ஆன்மீகப் பெரியோர்கள், அடியார்கள், தமிழ் அறிஞர்கள்,

முருக பக்தர்கள் பங்கேற்கின்ற இந்த மாநாட்டிற்கு வாழ்த்துரை வழங்க வாய்ப்பு தந்த மாண்புமிகு அமைச்சர் அண்ணன் திரு.பி.கே.சேகர்பாபு அவர்களுக்கு மீண்டும் எனது நன்றியை நான் தெரிவித்துக் கொள்கின்றேன். அண்ணன் சேகர்பாபு அவர்களை நமது முதலமைச்சர் அவர்கள் எப்போதுமே செயல் பாபு என்றுதான் பாராட்டி அழைப்பார்கள். அது எவ்வளவு உண்மை என்பது இந்த மாநாட்டிற்கான ஏற்பாடுகளைப் பார்க்கும் போதே புரிகின்றது. செய்தித்தாள்களை, செய்தி சேனல்களை பார்த்தால் எப்போதுமே அண்ணன் அவர்கள் ஏதாவது ஒரு திருக்கோயிலை ஆய்வு செய்து கொண்டு தான் இருப்பார். நம்முடைய முதலமைச்சர் அவர்கள் கூறியது போல கோவிலில் தான் அவர் குடியிருப்பார் என்று சொல்கின்ற அளவிற்கு அவர்களுடைய பணி சிறந்து விளங்குகின்றது.

இன்றைக்கு நம்முடைய திராவிட மாடல் அரசு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலில் அறநிலையத்துறை அறத்தோடு தனது பணிகளை முன்னெடுத்துச் செல்கிறது என்றால் அதற்குக் காரணம் அண்ணன் சேகர்பாபு அவர்கள்தான்.நாத்திகத்தோட்டத்தில்பூத்தஆத்திக மலராக அண்ணன் சேகர்பாபு அவர்கள், செயல் பாபு அவர்கள் மணம் வீசிக்கொண்டிருக்கிறார். திராவிட முன்னேற்றக் கழக அரசு திடீரென்று இந்த மாநாட்டை நடத்துகிறது என்று இன்றைக்கு ஒரு சிலர் கேள்வி எழுப்புகின்றார்கள். இந்த மாநாடு திடீரென்று நடத்தப்படுகின்ற மாநாடு அல்ல. கடந்த மூன்று ஆண்டுகளில் நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தலைமையிலான திராவிட மாடல் அரசு இந்து சமய அறநிலையத்துறையின் சார்பில் ஏராளமான சாதனைகளைச் செய்து விட்டு தான் இந்த மாநாட்டை நடத்தி வருகிறது.

அறநிலையத் துறையின் பொற்காலம்

திராவிட முன்னேற்றக் கழக அரசை பொறுத்தவரை யாருடைய நம்பிக்கைக்கும் குறுக்கே நிற்காத அரசு, எல்லோருடைய உணர்வுக்கும் மதிப்புக் கொடுக்கின்ற அரசு. இன்னும் சொல்ல வேண்டுமென்றால் அறநிலையத்துறையின் பொற்காலம் என்றால் அது நமது திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி தான். திராவிட இயக்கத்தின் ஆக்கப் புள்ளியாக இருந்த நீதிக்கட்சியின் ஆட்சியின் போது தான் இந்து சமய அறநிலையத்துறை பாதுகாப்புச் சட்டம் உருவாக்கப்பட்டு வழிபாட்டு உரிமை உறுதி செய்யப்பட்டது. குன்றக்குடி அடிகளார் தந்த விபூதியை நெற்றி நிறைய பூசி கொண்டவர் தான் தந்தை பெரியார் அவர்கள். பேரறிஞர் அண்ணா அவர்கள் ஒன்றே குலம் ஒருவனே தேவன் என்று முழங்கினார்கள். ஓடாத திருவாரூர் தேரை ஓட வைத்தவர் தான் நமது முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்கள். இப்படி நம்முடைய தலைவர்கள் வழியில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறநிலையத்துறையின் சார்பாக ஏராளமான திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறார்கள்.

8,500 திருக்கோயில் திருப்பணிகள்

திராவிட மாடல் அரசு அமைந்து, இந்த மூன்று ஆண்டுகள் மட்டும் 1,900 க்கும் மேற்பட்ட அதிகமான கோயில்களுக்குக் குடமுழுக்கு செய்து வைத்தது நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள். ரூபாய் 5,600 கோடி மதிப்பிலான 6,000 ஏக்கருக்கும் மேற்பட்ட கோயில் நிலங்கள் மீட்கப்பட்டுள்ளன. அதேபோல் 3,800 கோடி ரூபாய் மதிப்பில் 8,500 திருக்கோயில்களில் திருப்பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. நாள் ஒன்றுக்கு ஒரு இலட்சம் பக்தர்களுக்கு

கோயில்களில் உணவு வழங்கப்படுகிறது. அரசு, அரசு உதவி பெறும் தொடக்கப் பள்ளிகளில் நமது முதலமைச்சர் அவர்கள் காலைச் சிற்றுண்டி திட்டத்தைத் தொடங்கி வைத்தார்கள். இன்றைக்கு நாட்டிற்கே முன்மாதிரியாகப் பழனி முருகன் கோவில் கட்டுப்பாட்டில் உள்ள பள்ளி, கல்லூரியில் பயிலும் 4,000 மாணவர்களுக்கு காலை உணவு வழங்கப்பட்டு வருகிறது அதே போல் விரைவில் மதிய உணவு வழங்கப்படும் என்று முதலமைச்சர் அவர்கள் தெரிவித்துள்ளார்கள்.

திராவிடம் என்பது எல்லோருக்கும் எல்லாம் என்பதுதான். திராவிடம் யாரையும் ஒதுக்காது, எல்லோரையும் இணைக்கும் என்பதற்கு உதாரணத்தை அனைத்துச் சாதியினரையும், மகளிரையும் அர்ச்சகர் ஆக்கியவர் நமது முதலமைச்சர் அவர்கள். அதேபோல் அன்னைத் தமிழில் அர்ச்சனை என்ற திட்டம் அனைத்துக் கோயில்களிலும் செயல்படுத்தப்பட்டு வருகிறது. தமிழ்நாட்டில் மற்ற துறைகளைப் போலவே இந்து சமய அறநிலையத்துறையும் இந்திய ஒன்றியத்திற்கே வழிகாட்டி வருகின்றது. இப்படி அடுக்கடுக்கான சாதனைகளில் எல்லாம் செய்துவிட்டு தான் சிறப்புக்குரிய இந்த மாநாட்டினைத் தமிழக அரசு நடத்திக்கொண்டிருக்கிறது. இந்த மாநாடு ஆன்மீக மாநாடாக மட்டுமல்லாமல், பண்பாட்டு மாநாடாகவும் நடைபெறுகிறது. கழக அரசின் இந்த முயற்சிகளை எல்லாம் ஆன்மீகப் பெரியோர்கள், பக்தர்களாகிய நீங்கள் பாராட்டிக் கொண்டிருக்கிறீர்கள். தி.மு.க.வின் இளைஞர் அணிச் செயலாளராகவும், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சராகவும் இந்த மாநாட்டில் பங்கேற்பதில் மிகுந்த மகிழ்ச்சி அடைகின்றேன்.

ஆன்மீகத்தை எல்லோருக்கும் உணர்த்துகின்ற வகையில் நடைபெறும் அனைத்துலக முத்தமிழ் முருகன் மாநாடு வரலாற்றில் என்றென்றைக்கும் நிலைத்திருக்க போவது உறுதி. இந்த மாநாட்டைச் சிறப்பாக ஏற்பாடு செய்துள்ள இந்து சமய அறநிலையத்துறைக்கு எனது வாழ்த்துகளை நான் மீண்டும் தெரிவித்துக் கொள்கின்றேன். இந்த வாய்ப்புக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன்.

நன்றி வணக்கம்.

படமும்/செய்தியும்

சுதந்திர போராட்ட வீரர் தீரன் சின்னமலை அவர்களின் நினைவு நாள்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் 03.08.2024 அன்று சுதந்திரப் போராட்ட வீரர் தீரன் சின்னமலை அவர்களின் நினைவு நாளையொட்டி, சென்னை, கிண்டி, திரு.வி.க. தொழிற்பேட்டை வளாகத்தில் அமைந்துள்ள அவரது திருவுருவச் சிலைக்கு அருகில் வைக்கப்பட்டுள்ள திருவுருவப் படத்திற்கு மலர் தூவி மரியாதை செலுத்தினார்.

உயர்கல்வியில் ஆராய்ச்சிப் படிப்புப் பயிலும் மாணவ, மாணவியர்களுக்கு "முதலமைச்சரின் ஆராய்ச்சி ஊக்கத்தொகை"

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க. ஸ்டாலின்** அவர்கள் வழங்கினார் – 22.08.2024

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் 22.08.2024 அன்று தலைமைச் செயலகத்தில், உயர்கல்வித் துறை சார்பில் தமிழ்நாட்டில் உயர்கல்வி பயிலும் மாணவ, மாணவியருடைய ஆராய்ச்சித் திறனை மேம்படுத்திடவும், புதிய கண்டுபிடிப்புக்களை ஊக்கப்படுத்திடவும் முதலமைச்சரின் ஆராய்ச்சி ஊக்கத் தொகைத் திட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட 120 மாணவ, மாணவியர்களுக்கு ஆராய்ச்சி படிப்பைத் தொடர மாதம் ரூ.25,000/- ஊக்கத் தொகை பெறுவதற்கான ஆணைகளை வழங்கினார்.

தமிழ்நாட்டில் உயர்கல்வியை மேம்படுத்தும் நோக்கில், அதிக எண்ணிக்கையிலான உயர்கல்வி நிறுவனங்களைத் தொடங்குதல், அதன் வாயிலாக ஆராய்ச்சி, புதுமைப்படைப்புகள், தொழில்நுட்ப வளர்ச்சி ஆகியவற்றில் மாணவர்களின் திறன்களை வளர்த்து, வேலைவாய்ப்பினை உறுதி செய்தல், "நான் முதல்வன்" திட்டத்தின் மூலம் தகுதிவாய்ந்த திறன்மிகு இளைஞர்களை உருவாக்குதல், முதல் தலைமுறை பட்டதாரிகளுக்குச் சலுகைகள், அரசுப் பள்ளிகளில் ஆறாம் வகுப்பு முதல் பன்னிரெண்டாம் வகுப்பு வரை பயின்ற மாணவிகள், அரசு உதவி பெறும் பள்ளிகளில் தமிழ் வழியில் பயின்ற மாணவிகள் இடைநிற்றலின்றி உயர்கல்வி பயில மாதந்தோறும் ரூ.1,000/- உதவித் தொகை வழங்கும் "புதுமைப் பெண்" திட்டம், அதேபோன்று மாணவர்கள் உயர்கல்வி பயின்றிட "தமிழ்ப் புதல்வன்" திட்டம், கல்லூரிகள், பல்கலைக்கழகங்களின் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல் போன்ற பல்வேறுத் திட்டங்களைத் தமிழ்நாடு அரசு

செயல்படுத்தி வருவதால் அகில இந்திய அளவில் உயர்கல்வி சேர்க்கையில் தமிழ்நாடு முதலிடம் வகித்து வருகிறது.

சென்னை, அண்ணா பல்கலைக்கழகத்தில் 30.08.2022 அன்று நடைபெற்ற பல்கலைக்கழகத் துணைவேந்தர்கள் மாநாட்டில், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், "நம்முடைய மாணவர்களின் ஆராய்ச்சித் திறமையை மேம்படுத்தவும், புதிய கண்டுபிடிப்புக்களை தமிழ்நாட்டில் ஊக்கப்படுத்தவும் "CM Research Fellowship" "முதலமைச்சரின் ஆராய்ச்சி ஊக்கத்தொகை" திட்டம் தொடங்கப்படும். இதற்கான மாநில அளவில் தகுதித் தேர்வு நடத்தப்பட்டு மாணவர்கள் தேர்வு செய்யப்படுவார்கள்" என்று அறிவித்தார்.

அதன்படி, தமிழ்நாட்டில் உயர்கல்வி பயிலும் மாணவ, மாணவியருடைய ஆராய்ச்சி திறனையும், புதிய கண்டுபிடிப்புக்களையும் ஊக்கப்படுத்திடும் வகையில், முதலமைச்சரின் ஆராய்ச்சி ஊக்கத்தொகைத் திட்டத்தில் பயன்பெற்றிட ஆராய்ச்சி மாணவர்களைத் தெரிவு செய்வதற்காக ஆசிரியர் தேர்வு வாரியம் மூலம் தகுதித் தேர்வு 10.12.2023 அன்று நடத்தப்பட்டு, 120 மாணவ,மாணவியர்கள் தெரிவு செய்யப்பட்டனர். இவர்களில் 60 மாணவர்கள் அறிவியல் பாடப் பிரிவையும், 60 மாணவர்கள் கலை, மானுடவியல், சமூகவியல் பாடப் பிரிவையும் சார்ந்தவர்கள் ஆவார்கள். இவ்வாறு தெரிவு செய்யப்பட்ட 120 மாணவ, மாணவியர்கள் தங்கள் ஆராய்ச்சி படிப்பினை அரசு பல்கலைக்கழகங்கள் மற்றும் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் தொடர மாதம் ரூ.25,000/- ஊக்கத்தொகையாக மூன்று ஆண்டுகளுக்கு வழங்கப்படும். இத்திட்டத்திற்காக ரூ.12.31 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இத்திட்டத்தினைத் தொடங்கி வைக்கும் விதமாக மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தெரிவு செய்யப்பட்ட 120 மாணவ, மாணவியர்களில் 10 மாணவ, மாணவியர்களுக்கு முதலமைச்சர் ஆராய்ச்சி ஊக்கத்தொகை திட்டத்திற்கான ஆணைகளை வழங்கினார். இத்திட்டம், தமிழ்நாடு உயர்கல்வி நிறுவனங்களில் முதுநிலை பயின்று ஆராய்ச்சி மேற்கொள்ள இருக்கும் மாணவ, மாணவியர்களுக்கு பேருதவியாக இருக்கும்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களைப் புதிய தலைமைச் செயலாளர் அவர்கள் சந்தித்து வாழ்த்து

படமும்/செய்தியும்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்களை 19.08.2024 அன்று தலைமைச் செயலகத்தில், தமிழ்நாடு அரசின் தலைமைச் செயலாளராகப் பொறுப்பேற்றுக்கொண்ட திரு. **நா.முருகானந்தம்**, இ.ஆ.ப., அவர்கள் சந்தித்து வாழ்த்துப் பெற்றார்.

பசுமைத் தமிழ்நாடு இயக்கத்தின்கீழ், தமிழ்நாட்டில் 29 மாவட்டங்களில் 75 மரகதப் பூஞ்சோலைகள்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் திறந்து வைத்தார் - 14.08.2024

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் 14.08.2024 அன்று தலைமைச் செயலகத்தில், சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத்துறை சார்பில் திருப்பத்தூர் மாவட்டத்தில் ரூ.3.57 கோடிச் செலவில் மேம்படுத்தப்பட்ட ஏலகிரி – ஜலகம்பாறை சமுதாயம் சார்ந்த சூழல் சுற்றுலாத் தடம், தமிழ்நாட்டில் 29 மாவட்டங்களில் உள்ள அரசு நிலங்களில் பசுமைத் தமிழ்நாடு இயக்கத்தின் கீழ் உருவாக்கப்பட்டுள்ள 75 மரகதப் பூஞ்சோலைகள், சென்னை, காசிமேட்டில் ரூ.22.42 இலட்சம் செலவில் அமைக்கப்பட்டுள்ள பயன்பாடற்ற மீன்பிடி வலை சேகரிப்பு மையம், தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியத்தின் தலைமை அலுவலகத்தில் ரூ.1.50 கோடிச் செலவில் நிறுவப்பட்டுள்ள ஒருங்கிணைந்த சுற்றுச்சூழல் கண்காணிப்பு மையம் ஆகியவற்றைத் திறந்து வைத்தார்.

வனச்சூழல் சுற்றுலா மேம்பாட்டிற்காகத் தமிழ்நாடு அரசு எடுத்து வரும் நடவடிக்கைகள்

இவ்வரசு பொறுப்பேற்றதிலிருந்து தமிழ்நாட்டின் இயற்கைச் சூழலைப் பாதுகாத்து, மேம்படுத்திடும் நோக்கில் பல்வேறு வனச்சூழல் சுற்றுலா முன்னேற்றப் பணிகளை மேற்கொண்டு வருகிறது. கிராம மக்கள், மலைவாழ் மக்களை உள்ளடக்கிய சூழல் சுற்றுலாக்களை மேம்படுத்தப்படுவதால் கிராம மக்களின் பொருளாதாரம் ஏற்றம் பெறுவதோடு, சுற்றுலாப் பயணிகளுக்கும் வனங்கள், வன உயிரினங்களைப் பாதுகாப்பது குறித்த விழிப்புணர்வு ஏற்படுத்தப்படுகிறது. சூழல் சுற்றுலா மூலம் கிடைக்கும் வருவாயை கிராம மக்களுக்குப் பகிர்ந்தளிப்பதன் மூலம் கிராம மக்கள் வனம், வன உயிரினங்களைப் பாதுகாப்பதில் பங்கேற்க ஊக்கமளிக்கப்படுகிறது.

தமிழ்நாடு அரசு, இவ்வாண்டு மன்னார் வளைகுடா உயிர்க்கோள் காப்பக அறக்கட்டளையில் உள்ள சமூக அடிப்படையிலான அமைப்புகள் மூலம் இராமநாதபுரம் மாவட்டம், இராமேஸ்வரம் தீவில் ரூ.15 கோடி மதிப்பீட்டில் சூழல் சுற்றுலாவினை மேம்படுத்துவதற்கும், நாமக்கல் மாவட்டம், கொல்லிமலையில் ரூ.1 கோடி மதிப்பீட்டில் இரவு வான் பூங்கா அமைக்கவும், தமிழ்நாட்டின் வனப்பகுதியிலுள்ள மலையேற்ற வழித்தடங்களுக்கான வரைபடப் புத்தகங்கள் உருவாக்கப்படுவதுடன் அத்தடங்களில் அடிப்படை வசதிகளை ரூ.4 கோடி மதிப்பீட்டில் மேம்படுத்தவும் அறிவிப்புகளை வெளியிட்டுள்ளது.

வனம், வனவிலங்குகள் பற்றிய விழிப்புணர்வைச் சிறு வயதிலிருந்தே குழந்தைகளுக்கு ஏற்படுத்துவதற்காகக் கிண்டி சிறுவர் பூங்கா புனரமைக்கப்பட்டு ரூ.30 கோடிச் செலவில் சிறுவர்களுக்கு இயற்கை பூங்காவாக அமைக்கப்பட்டு,

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் 03.08.2024 அன்று திறந்து வைக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

காலநிலை மாற்றத்திற்கான தமிழ்நாடு உயிர்ப்பன்மைப் பாதுகாப்பு, பசுமையாக்குதல் திட்டத்தின் கீழ் குரும்பப்பட்டி, ஏற்காடு, அய்யூர், தேன்கனிக்கோட்டை, ஏலகிரி, பீமன் நீர்வீழ்ச்சிப்பகுதி, அங்குத்தி சுனை நீர்வீழ்ச்சிப் பகுதி, கூடலூரில் உள்ள மரபணுத் தோட்டம் சூழல் சுற்றுலா பகுதி, குடியம் குகை சூழல் சுற்றுலா பகுதி எனப் பல்வேறு பகுதிகளில் சூழல் சுற்றுலா பணிகள் மேற்கொள்ளப்பட்டு தமிழ்நாடு சூழல் சுற்றுலாவில் புதிய ஏற்றம் கண்டு வருகிறது.

மேம்படுத்தப்பட்ட ஏலகிரி – ஜலகம்பாறை சமுதாயம் சார்ந்த சூழல் சுற்றுலாத் தடத்தை திறந்து வைத்தல்

திருப்பத்தூர் வனச்சரகத்தில் நாகலூத்து காப்புக்காட்டில் அமைந்துள்ள ஏலகிரி மலைகளில் ஜலகம்பாறை நீர்வீழ்ச்சி முக்கிய சுற்றுலா தலமாகும். இது கிழக்குத் தொடர்ச்சி மலைத் தொடரின் பசுமைக்கு மத்தியில் ஓர் இனிய இயற்கைத் தலமாக விளங்குகிறது. இந்நீர்வீழ்ச்சி திருப்பத்தூர் நகரத்திலிருந்து எளிதில் அணுகக்கூடியதாகவும், இயற்கை ஆர்வலர்கள் மற்றும் சுற்றுலாப் பயணிகளிடையே பிரசித்தி பெற்றும் விளங்குகிறது. ஒவ்வொரு ஆண்டும் சராசரியாக ஒரு இலட்சத்துக்கும் அதிகமான சுற்றுலாப் பயணிகள் இந்த அருவிக்கு வருகை தருகின்றனர்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 29.06.2022 அன்று திருப்பத்தூர் மாவட்டத்திற்கு வருகை தந்தபோது, வனத்துறை மூலம் ஜலகம்பாறை நீர்வீழ்ச்சியில் சுற்றுலாப் பயணிகள் பயன்பெறும் வகையில் சூழல் சுற்றுலா வசதிகள் மேம்படுத்தப்படும் என அறிவித்தார்கள். அந்த அறிவிப்பிற்கிணங்க, திருப்பத்தூர் மாவட்டத்தில் உள்ள ஜலகம்பாறை அருவியில் காலநிலை மாற்றத்திற்கான தமிழ்நாடு உயிர்ப்பன்மை பாதுகாப்பு, பசுமையாக்குதல் திட்டத்தின் கீழ் ரூ.3.57 கோடிச் செலவில் சமூக அடிப்படையிலான சூழல் சுற்றுலாவினை ஊக்குவிக்கும் வகையில் மேம்பாட்டுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன.

இப்புதிய மேம்படுத்தப்பட்ட சூழல் சுற்றுலா வசதிகளுடன் கூடிய ஜலகம்பாறை நீர்வீழ்ச்சி, ஏலகிரி சூழல் சுற்றுலாத் தடத்தினை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் திறந்து வைத்தார்.

இச்சுற்றுலாத் தடத்தில், மேம்படுத்தப்பட்ட நீர்வீழ்ச்சிப் பகுதி, அருவிக்கு செல்லும் நடைபாதை, நிழற்குடைகள், உயிர் அளவு வன உயிரின சிலைகள், திறந்தவெளி விளக்க மையம், சூழல் அங்காடி, சிற்றுண்டியகம், நுழைவாயில் வளைவுகள், புதிய சிறுவர் பூங்கா, செயற்கை நீரூற்று, மேம்படுத்தப்பட்ட கழிவறை வசதிகள், உடை மாற்றும் அறைகள் எனப் பல்வேறு புதிய வசதிகள் ஜலகம்பாறை நீர்வீழ்ச்சியில் உருவாக்கப்பட்டுள்ளன.

மேலும், ஏலகிரி மலைகளில் சமூக அடிப்படையிலான சூழல் சுற்றுலாவை ஊக்குவிப்பதற்குப் புதிய சூழல் வகுப்பறைகள், நிலாவூரில் நடைபாதைகளுடன் கூடிய புதிய காட்சிமுனை, விழிப்புணர்வுப் பலகைகளுடன் கூடிய புதிய தொலைநோக்கிக் காட்சிமுனை ஆகியவையும் உருவாக்கப்பட்டுள்ளன.

பசுமைத் தமிழ்நாடு இயக்கத்தின்கீழ் உருவாக்கப்பட்டுள்ள 75 மரகதப் பூஞ்சோலைகளைத் திறந்து வைத்தல்

2022-2023ஆம் ஆண்டிற்கான வனத்துறை மானியக் கோரிக்கையில், 100 கிராமங்களில் மரகதப் பூஞ்சோலைகள் ஏற்படுத்தப்படும் என்றும், இச்சோலைகள் ஒவ்வொன்றும் ஒரு ஹெக்டேர் பரப்பளவைக் கொண்டிருக்கும் என்றும், நீர்நிலையை மேம்படுத்தி சூழலியல் சேவைகளை வழங்குவதோடு பல்வேறு பொழுதுபோக்கு வசதிகளையும் வழங்கும் என்றும் அறிவிக்கப்பட்டது.

அந்த அறிவிப்பின்படி, இத்திட்டத்தினைச் செயல்படுத்திடும் வகையில், உள்ளூர் மக்களின் உள்ளார்ந்த பங்கேற்புடன் தமிழ்நாட்டில் 29 மாவட்டங்களில் அரசு நிலங்கள் தேர்வு செய்யப்பட்டு, இதுவரை மொத்தம் 75 எண்ணிக்கையிலான மரகதப்பூஞ்சோலைகள் பசுமைத் தமிழ்நாடு இயக்கத்தின் கீழ் உருவாக்கம் செய்யப்பட்டுள்ளது. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் இன்றைய தினம் 75 மரகதப் பூஞ்சோலைகளைத் திறந்து வைத்தார். இத்திட்டத்திற்காக ரூ.19.75 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது.

ஒவ்வொரு மரகதப் பூஞ்சோலையும் வருவாய்த் துறை நிலங்களில் 1 ஹெக்டேர் பரப்பில் வனத்துறையால் உருவாக்கப்பட்டு இரண்டு வருடப் பராமரிப்பு மேற்கொள்ள நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டதுடன், அந்தந்தக் கிராம ஊராட்சிகளிடம் தொடர் பராமரிப்பு செய்யும் பொருட்டு ஒப்படைப்பு செய்யப்படும். செடி நடவு பணிகளின்கீழ் 75 மரகதப் பூஞ்சோலைகளிலும் மொத்தம் 46,875 எண்ணிக்கையிலான தடி மரங்கள், பழ மரங்கள் நடவு செய்யப்பட்டு, ஆழ்துளை கிணறு அமைக்கப்பட்டு, பூங்காவில் ஆங்காங்கே உட்காரும் நீள-சாய்வு நாற்காலிகள், பார்வையாளர் அமர பகுதி நிரந்தரக் கூடாரம், நடைபாதைகள் போன்றவை ஏற்படுத்தப்பட்டுள்ளன.

இந்த மரகதப் பூஞ்சோலைகள் தமிழ்நாடு அரசின் தனித்துவமான முன்னெடுப்பாக பிரதிபலிப்பதுடன், கிராம மக்களுக்கு ஒரு பொழுது போக்கு, புவி வெப்ப சமநிலைப்படுத்தும் இடமாகவும், விலங்கினங்கள், மக்களுக்குத் தேவையான உணவுகளான பழம், தீவனம், தண்ணீர், தடிமரம் தருவதுடன், எதிர்காலத்தில் காலநிலை மாற்றப் பாதுகாப்புச் சூழலை கிராமங்களுக்கு கிடைக்கும் வகையிலும் அமைக்கப்பட்டுள்ளது.

இப்பூங்காவில் மர இனங்களான நாவல் (Syzygium cumini), நெல்லி, (Phyllanthus emblica), நீர்மருது (Terminalia arjuna), தென்னை (Cocos nucifera), பாதாம் (Terminalia catappa), புளி (Tamarindus indica) வில்வம் (Aegle marmelos), பூவரசு (Thespesia populnea), கொய்யா (Psidium guajava), செஞ்சந்தனம் (Pterocarpus santalinus), எட்டி (Strychnos nux-vomica), பலா (Artocarpus heterophyllus), மகிழம் (Mimusops elengi), புன்னை (Calophyllum inophyllum), அத்தி (Ficus racemosa), ஆல் (Ficus benghalensis), கொடுக்காப்புளி (Pithecellobium dulce), மா (Mangifera indica), வேம்பு (Azadirachta indica) முதலியன பெருமளவில் நடவு செய்யப்பட்டுள்ளது.

2024-2025ஆம் நிதியாண்டில் மீதமுள்ள 8 கிராமங்களுக்கும் மரகதப் பூஞ்சோலைகள் உருவாக்கும் வகையில் ரூ.1.58 கோடி நிதி மறுஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது. அத்துடன் எஞ்சிய 17 கிராமங்களிலும் இத்திட்டத்தைச் செயல்படுத்த நடவடிக்கையும் எடுக்கப்பட்டு வருகிறது.

சென்னை, காசிமேட்டில் அமைக்கப்பட்டுள்ள பயன்பாடற்ற மீன்பிடி வலை சேகரிப்பு மையத்தைத் திறந்து வைத்தல்

சென்னை, காசிமேட்டில் ரூ.22.42 இலட்சம் செலவில் அமைக்கப்பட்டுள்ள பயன்பாடற்ற மீன்பிடி வலைகள் சேகரிப்புகளின் முதல் மையத்தை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் திறந்து வைத்தார். இந்த மையம் பயன்பாடற்ற மீன்பிடி வலைகள் சேகரிப்பை நிர்வகித்து, சேகரிக்கப்பட்ட மீன்பிடி வலைகள் மறுசுழற்சி செய்பவர்களுக்கே அனுப்புவதன் மூலம் சுழல் பொருளாதாரம் உறுதி செய்யப்படுகிறது.

இதன்மூலம், கடல் மாசுபாட்டிற்கு எதிரான முன்னோடி முயற்சியாக, தமிழ்நாடு மீன்பிடி வலைகளை மீட்டெடுக்கும் முயற்சியைத் தமிழ்நாடு அரசு மேற்கொள்கிறது. இந்த முயற்சியால் பயன்பாடற்ற மீன்வலைகளை மீட்டெடுக்கவும் மறுசுழற்சி செய்யவும், கடல் பல்லுயிர்களைப் பாதுகாக்கவும், சுற்றுப் பொருளாதாரத்தை மேம்படுத்தவும் இயலும்.

தமிழ்நாடு மாசுக்கட்டுப்பாட்டு வாரியம் கடல்களைப் பாதுகாப்பதற்கும், கடல் மாசுபாட்டைக் குறைப்பதற்கும், கடலோரச் சமூகங்களை மேம்படுத்திடவும் விழிப்புணர்வு நிகழ்ச்சிகளை முன்னெடுத்து வருவதோடு, கடற்கரையோரங்களில் அப்புறப்படுத்தப்பட்ட மீன்பிடி வலைகள், பிளாஸ்டிக் குப்பைகளின் அளவை மதிப்பிடுவதற்கு விரிவான அடிப்படைக் கணக்கெடுப்பினை நடத்தி, மாநிலத்தில் உள்ள மீன்பிடி வலை உற்பத்தியாளர்களுக்கான நீட்டிக்கப்பட்ட உற்பத்தியாளர் பொறுப்பு (Extended Producer's Responsibiity) திட்டத்தை வடிவமைத்து மேம்படுத்துவதை நோக்கமாக கொண்டு செயல்பட்டு வருகிறது. இதன்மூலம், சேகரிக்கப்பட்ட மீன்பிடி வலைகள் மறுசுழற்சி செய்பவர்களிடம் தடையின்றிச் சென்றடைவதை உறுதிசெய்து, கழிவுகள் மதிப்புமிக்க வளங்களாக மாற்றியமைக்கப்படும்.

ஒருங்கிணைந்த சுற்றுச்சூழல் கண்காணிப்பு மையத்தைத் திறந்து வைத்தல்

2021-2022ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையில், தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாட்டு வாரியத்தில் ஒருங்கிணைந்த சுற்றுச்சூழல்

கண்காணிப்பு மையம் (IEMS) நிறுவப்படும் என்று அறிவிக்கப்பட்டது. அதன்படி, தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாட்டு வாரியத்தின் தலைமை அலுவலகத்தின் இரண்டாவது தளத்தில் தமிழ்நாடு அரசின் இ-சேவை மையத்தின் (TNeGA) மூலம் ரூ.1.50 கோடிச் செலவில் நிறுவப்பட்டுள்ள ஒருங்கிணைந்த சுற்றுச்சூழல் கண்காணிப்பு மையத்தை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் திறந்து வைத்தார்.

தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாட்டு வாரியம் இம்மையத்தினை வாரியத்தின் மத்திய கண்காணிப்பு மையமாக நிறுவியுள்ளது. இதன்மூலம், தொழிற்சாலைகளில் இருந்து வெளியேறும் உமிழ்வு, கழிவுநீர், காற்று / நீரின் தரம், அபாயகரமான / மருத்துவக் கழிவுகள் போன்றவற்றைக் கொண்டு செல்லும் வாகனங்களின் இயக்கத்தை நிகழ்நேர அடிப்படையில் கண்காணிக்க முடியும். இம்மையத்தில் பணிபுரியும் வாரிய அதிகாரிகள் சுற்றுப்புறக் காற்றின் தரம், தொழிற்சாலைகள் காற்று உமிழ்வு, கழிவுநீர் கண்காணிப்பு, பொது மற்றும் தனிச் சுத்திகரிப்பு நிலையங்களின் செயல்பாடுகள் போன்றவற்றின் தர அளவுகளை தொடர்ந்து 24x7 மணிநேரமும் கண்காணிக்க முடியும். மேலும், ஏதேனும் அளவுருக்கள் வாரியத்தால் பரிந்துரைக்கப்பட்ட தரநிலைக்கு அதிகமாக இருக்கும் பட்சத்தில் அத்தொழிற்சாலைகளுக்கும், அப்பகுதி வாரியத்தின் இணைத் தலைமைச் சுற்றுச்சூழல் பொறியாளர்கள்/மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர்கள் ஆகிய அதிகாரிகளுக்கும் தக்க நடவடிக்கைக்காகத் தகவல்களை உடன் அனுப்ப இயலும். அத்துடன், இணைத் தலைமை சுற்றுச்சூழல் பொறியாளர்கள், மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர்கள் தங்கள் அலுவலகங்களிலிருந்து இணையச் சேவை மூலம் 24x7 நேரமும் தொடர்ந்து கண்காணிக்கும் வசதியும் செய்யப்பட்டுள்ளது.

அகவை முதிர்ந்த தமிழறிஞர்களுக்கு உதவித்தொகைக்கான அரசாணைகள்

படமும்/செய்தியும்

மாண்புமிகு தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் திரு. மு.பெ.சாமிநாதன் அவர்கள் சென்னைப் பல்கலைக்கழக வளாகத்தில் உள்ள தந்தைப் பெரியார் அரங்கில் 07.08.2024 அன்று தமிழ் வளர்ச்சித்துறை சார்பில் அகவை முதிர்ந்த தமிழறிஞர்களுக்கு உதவித்தொகைக்கான அரசாணைகளை வழங்கினார். இந்நிகழ்ச்சியில் தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறைச் செயலாளர் திரு. வே.ராஜாராமன், இ.ஆ.ப., தமிழ் வளர்ச்சித்துறை இயக்குநர் முனைவர் ந.அருள், அரசு அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

ரூ.30 கோடியில் சென்னை, கிண்டி சிறுவர் பூங்கா புனரமைப்பு

"கிண்டி சிறுவர் இயற்கை பூங்கா" எனப் பெயர் மாற்றம்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் 03.08.2024 அன்று சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத்துறை சார்பில் சென்னை, கிண்டி சிறுவர் பூங்கா ரூ.30 கோடிச் செலவில் புனரமைக்கப்பட்டு, பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ள கிண்டி சிறுவர் இயற்கை பூங்காவைத் திறந்து வைத்தார். மேலும், ஒருங்கிணைந்த யானைகளின் கணக்கெடுப்பு-2024 அறிக்கையை வெளியிட்டார்.

இவ்வரசு பொறுப்பேற்றதிலிருந்து தமிழகத்தின் இயற்கை சூழலைப் பாதுகாத்திடவும், வனப்பரப்பை அதிகப்படுத்தும் நோக்கிலும், 2 கோடியே 80 இலட்சம் மரக்கன்றுகளை நட்டு பசுமைத் தமிழ்நாடு இயக்கத்தை தொடங்கி வைத்தது, முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவையொட்டி 5 இலட்சம் மரக்கன்றுகள் நடும் திட்டமும் தொடங்கி வைக்கப்பட்டது. பள்ளிக்கரணையில் 2.5 ஹெக்டேர் நிலப்பரப்பில் ரூ.20 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்பட்ட சதுப்புநிலச் சூழலியல் பூங்கா, சென்னை செனாய் நகரில் மெட்ரோ இரயில் கட்டுமானத்திற்குப் பின்னர் ரூ.18 கோடிச் செலவில் மறுசீரமைக்கப்பட்ட திரு.வி.க.பூங்கா திறந்து வைக்கப்பட்டது, ஆகியவை குறிப்பிடத்தக்க பசுமை சார்ந்த பணிகளாகும்.



மேலும், சென்னையில் உள்ள செங்காந்தள் பூங்காவிற்கு அருகில் உள்ள 6.09 ஏக்கர் நிலத்தில் "கலைஞர் நூற்றாண்டு பூங்கா", கோயம்புத்தூர், காந்திபுரம் மத்தியச் சிறைச்சாலை வளாகத்தில் 165 ஏக்கர் பரப்பளவிலான செம்மொழிப் பூங்கா ஆகியவற்றிற்கு அடிக்கல் நாட்டப்பட்டு, அங்குப் பணிகள் துரிதமாக நடைபெற்று வருகின்றன. இவைமட்டுமின்றி பெருநகர சென்னை மாநகராட்சி, நகராட்சி நிருவாகத் துறை வாயிலாகவும் புதிய பூங்காக்களை உருவாக்குதல், பழைய பூங்காக்களை புனரமைத்தல் போன்ற பல்வேறு முனைப்பான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.

கிண்டி சிறுவர் இயற்கைப் பூங்கா திறந்து வைத்தல்

கிண்டி சிறுவர் பூங்கா சென்னையிலுள்ள முக்கிய சுற்றுச்சூழல் சுற்றுலாத் தலங்களில் ஒன்றாகும், ஆண்டுதோறும் 7 முதல் 8 இலட்சம் பார்வையாளர்கள் வருகை தருகின்றனர். மேலும், சென்னை, அதனைச் சுற்றியுள்ள நூற்றுக்கணக்கான பள்ளிகளைச் சேர்ந்த 60,000க்கும் மேற்பட்ட மாணவர்கள் பூங்காவில் நடைபெறும் நிகழ்ச்சிகளில் பங்கேற்கின்றனர்.

2022-2023ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையில், இளம் வயதிலிருந்தே வனம், வன விலங்குகளைப் பற்றிய விழிப்புணர்வைக் குழந்தைகளுக்கு ஏற்படுத்த, கிண்டிக் குழந்தைகள் பூங்காவை மறுவடிவமைத்து, பறவைகள், வண்ணத்துப்பூச்சிகள், விலங்குகள் உள்ளடங்கிய இயற்கைப் பூங்காவாக அமைக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டது.

அந்த அறிவிப்பிற்கிணங்க, வனம், வனவிலங்குகள் பற்றிய விழிப்புணர்வை சிறு வயதிலிருந்தே குழந்தைகளுக்கு ஏற்படுத்துவதற்காக தற்போதுள்ள கிண்டிச் சிறுவர் பூங்கா புனரமைக்கப்பட்டு ரூ.30 கோடிச் செலவில் சிறுவர்களுக்கு இயற்கைப் பூங்காவாக அமைக்கப்பட்டுள்ளதை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் திறந்து வைத்தார்.

இப்பூங்கா திறப்பு விழாவின்போது, வனவிலங்குகளை மீட்பதற்கும், வனப்பகுதிகளில் ஏற்படும் காட்டுத்தீ போன்ற விபத்துகளைத் தடுக்கும் பணிகளை மேற்கொள்வதற்காகவும் 9 நவீன வாகனங்களை (All Terrain Vehicles) மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் கொடியசைத்துத் தொடங்கி வைத்தார். அதனைத் தொடர்ந்து, இப்பூங்காவில் அமைக்கப்பட்டுள்ள வேடந்தாங்கல் பறவைகள் இருப்பிடத்தைத் திறந்து வைத்து, பூங்காவில் ஏற்படுத்தப்பட்டுள்ள மேம்படுத்தப்பட்ட பல்வேறு வசதிகளைப் பார்வையிட்டார்.

கிண்டி சிறுவர் இயற்கை பூங்காவின் சிறப்பம்சங்கள்

தமிழ்நாட்டிலேயே முதன்முறையாக இந்தப் பூங்காவில் 2,800 சதுர மீட்டர் பரப்பளவில் மிகப்பெரிய நீர்வாழ் பறவைக் கூடம், வன உயிரின விழிப்புணர்வு மையம், விலங்குகள், பறவைகளின் விவரங்கள் அறிந்துகொள்ளும் வகையிலான LED மின் திரைகள், நூலகம், நிருவாகப் கட்டடம், அழகிய நுழைவுவாயில், நீரூற்றுகள், செல்பி பாயிண்ட்,

குழந்தைகளுக்கான விளையாட்டுப் பகுதி, மழை நீர் வடிகால் வசதிகள், நடைபாதைகள், சிசிடிவி கண்காணிப்பு கேமராக்கள் போன்ற வசதிகள் செய்யப்பட்டுள்ளன.

மேலும், பார்வையாளர்களுக்கு உணவு, சிற்றுண்டி கிடைக்கும் வகையில் நவீன கட்டமைப்புடன் கட்டப்பட்டுள்ள இரண்டு சிற்றுண்டிக் கூடங்கள், சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் நிலையங்கள், புதிய கழிவறைகள், மேம்படுத்தப்பட்ட வாகனம் நிறுத்துமிடம் போன்ற வசதிகளும் செய்யப்பட்டுள்ளன. அத்துடன், மாற்றுத்திறனாளிகள், முதியோர்களுக்கு ஏற்ற வகையில் அவர்களின் தேவைகள் அறிந்து இப்பூங்காவில் சிறப்பு வசதிகளும் செய்யப்பட்டுள்ளன.

"ஒருங்கிணைந்த யானைகள் கணக்கெடுப்பு அறிக்கை 2024" வெளியிடுதல்

தென்னிந்திய மாநிலங்களான கருநாடகா, கேரளா, தமிழ்நாடு, ஆந்திரப் பிரதேசத்தின் எல்லையோர மாவட்டங்களில் ஒருங்கிணைந்த யானைகள் கணக்கெடுப்பு 23.05.2024 முதல் 25.05.2024 வரை நடத்தப்பட்டது. இந்தக் கணக்கெடுப்பு தமிழ்நாட்டில் உள்ள 26 வனப் பிரிவுகளில் நடத்தப்பட்டது. இக்கணக்கெடுப்பில் 1,836 வனத்துறை ஊழியர்கள், 342 தன்னார்வலர்கள் என மொத்தம் 2,178 நபர்கள் ஈடுபட்டனர். இந்தக் கணக்கெடுப்பில், சேகரிக்கப்பட்ட தகவல்கள் முறையாகப் பகுப்பாய்வு செய்யப்பட்டு, 26 வனப் பிரிவுகளில் யானைகளின் எண்ணிக்கை மதிப்பிடப்பட்டுள்ளது. இந்த கணக்கெடுப்பானது யானைகளின் எண்ணிக்கை, பாலின விகிதம், யானைகளின் இயக்கவியல் மற்றும் யானைகளின் வாழ்விடத்தைச் சிறப்பாக நிருவகிப்பதற்கு யானைகளின் பயன்பாட்டின் பரப்பளவு பற்றிய தெளிவான விவரங்களை வழங்கும். தமிழகத்தில் யானைகளின் எண்ணிக்கையையும் அதன் வாழ்வியல் முறைகளையும் அறிந்துகொள்ள உதவிடும் 2024ஆம் ஆண்டிற்கான ஒருங்கிணைந்த யானைகள் கணக்கெடுப்பு அறிக்கையை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் வெளியிட்டார்.

2017 கணக்கெடுப்பின்படி தமிழகத்தில் யானைகளின் எண்ணிக்கை 2,761 ஆக இருந்தது. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்களின் தலைமையிலான அரசு பொறுப்பேற்றதிலிருந்து யானைகளின் பாதுகாப்பிற்காக மேற்கொண்ட பல்வேறு நடவடிக்கைகளின் காரணமாக ஒருங்கிணைந்த யானைகள் கணக்கெடுப்பு அறிக்கை 2023இன் படி தமிழகத்தில் யானைகளின் எண்ணிக்கை 2,961ஆக உயர்ந்தது. தற்போது அதன் தொடர்ச்சியாக, 2024ஆம் ஆண்டிற்கான யானைகள் கணக்கெடுப்பு அறிக்கையின்படி தமிழகத்தில் தற்போது யானைகளின் எண்ணிக்கை 3,063ஆக உயர்ந்துள்ளது.

தமிழ்நாடு அரசு மேற்கொண்ட பல்வேறு வன உயிரினப் பாதுகாப்பு நடவடிக்கைகள், குறிப்பாக யானைகள் பாதுகாப்பு இயக்கத்தின் மூலமாக மேற்கொண்ட நடவடிக்கைகள் வாயிலாகத் தமிழ்நாட்டில் யானைகள் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. அகத்திய மலை யானைகள் காப்பகம், தமிழ்நாடு யானைகள் பாதுகாப்பு இயக்கம், யானைகள் வாழிடங்களைப் பாதுகாத்தல் மற்றும் மேம்படுத்துதல் போன்ற தமிழ்நாடு அரசின் நடவடிக்கைகளும் இதற்குக் காரணமாக விளங்கின என்பது குறிப்பிடத்தக்கது.

“தலைசிறந்த மூன்றாண்டு! தலைநிமிர்ந்த தமிழ்நாடு!” மூன்றாண்டுச் சாதனை மலர்

மாண்புமிகு
தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. **மு.க. ஸ்டாலின்** அவர்கள்
வெளியிட்டார் - 14.08.2024

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் 14.08.2024 அன்று தலைமைச் செயலகத்தில், திராவிட மாடல் அரசு 2021ஆம் ஆண்டு மே திங்கள் 7ஆம் நாள் ஆட்சிப் பொறுப்பேற்று மூன்றாண்டுகள் நிறைவடைந்ததையொட்டித் தமிழ்நாடு அரசின் செய்தி மக்கள் தொடர்புத்துறையின் 'தமிழரசு' அச்சகத்தின் மூலம் “தலைசிறந்த மூன்றாண்டு! தலைநிமிர்ந்த தமிழ்நாடு!” என்னும் பெயரில் மூன்றாண்டுச் சாதனை மலரை வெளியிட்டார்.

திராவிட மாடல் அரசு 2021ஆம் ஆண்டு மே திங்கள் 7ஆம் நாள் பொறுப்பேற்று மூன்றாண்டுகள் நிறைவடைந்து; நான்காம் ஆண்டிலும் தொடர்ந்து சிறப்பான பல திட்டங்களைச் செயல்படுத்திப் பல்வேறு துறைகளிலும் சாதனைகளை நிகழ்த்தி வருகிறது.

திராவிட மாடல் அரசு மூன்று ஆண்டுகள் நிறைவடைந்து, நான்காம் ஆண்டில் அடியெடுத்து வைத்து, பல்வேறு புதுமையான திட்டங்களை நிறைவேற்றித் தமிழ்நாடு, இந்திய அளவில் படைத்துள்ள சாதனைகள் ஒன்றிய அரசின் நிதிஆயோக்-நிர்யாத் அமைப்புகள் வெளியிட்டுள்ள அறிக்கைகள் நாட்டிற்குப் பறைசாற்றியுள்ளன.

அதாவது, தமிழ்நாடு இந்தியாவில் உயர்கல்வி மாணவர் சேர்க்கையில் முதல் மாநிலம், தொழில் வளர்ச்சியில் முன்னணி மாநிலம், ஆயத்த ஆடைகள் ஏற்றுமதியில் முதலிடம், ஜவுளித் துணிகள் ஏற்றுமதியில் முதலிடம், மருத்துவத் துறையில் முன்னணி மாநிலம், மகளிர் முன்னேற்றத்தில் தமிழ்நாடு முதலிடம், கர்ப்பிணிப் பெண்கள் சுகாதாரத்தில் தமிழ்நாடு முதலிடம், மக்கள் தொகையைக் கட்டுப்படுத்துவதில் தமிழ்நாடு முதலிடம், மகப்பேறுக்குப் பிந்தைய சிசு

வாளாகவும், கேடயமாகவும் துணைநிற்கும் கொள்கைகளும், சாதனைகளும்

"நாள்தோறும் திட்டங்கள் கொண்டுவந்து, தமிழ்நாட்டை வளர்ச்சிப் பாதையில் கொண்டு செல்லும் நமது திராவிட மாடல் அரசின் வெற்றிப் பயணத்தைத் "தலைசிறந்த மூன்றாண்டு! தலைநிமிர்ந்த தமிழ்நாடு!" என ஆவணப்படுத்தி, சாதனை மலராகச் செய்தி மக்கள் தொடர்புத் துறை சார்பில் வெளியிடப்பட்டுள்ளது.

அறிவிற் சிறந்த அறிஞர் பெருமக்களது கட்டுரைகளுடன் வெளியாகியுள்ள இந்தக் கருத்துப் பெட்டகத்தை உங்களுடன் பகிர்கிறேன்...

நமது இலட்சியப் பயணத்தில், கொண்ட கொள்கைகளும் – செய்யும் சாதனைகளுமே வாளாகவும் கேடயமாகவும் துணைநிற்கும்!"

— மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்களின்
சமூக வலைத்தளப்பதிவு - 14.08.2024

கவனிப்பில் முன்னணி மாநிலம், வேளாண் உற்பத்தியில் முன்னணி மாநிலம், தோல் பொருள்கள் ஏற்றுமதியில் தலைசிறந்த மாநிலம், மின்னணுப் பொருள்கள் ஏற்றுமதியில் தமிழ்நாடு முதலிடம், பொறியியல் சார்ந்த பொருள்கள் ஏற்றுமதியில் இரண்டாம் இடம், தொழில் வளர்ச்சிக்கான 50 சிறப்புப் பொருளாதார மண்டலங்களை ஏற்படுத்தியதில் தமிழ்நாடு முதலிடம் போன்ற சாதனைகளைப் படைத்து வருகிறது.

இவை குறித்துச் சான்றோர்களும், பத்திரிகைகளும், ஊடகங்களும் பாராட்டி வருகின்றன. இவையல்லாமல் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் காலை உணவுத் திட்டம் தெலுங்கானா மாநிலத்திலும், கனடா நாட்டிலும் பின்பற்றப்படுகின்றது. இந்த அரசின், "நான் முதல்வன்" போன்ற வேறு பல திட்டங்களும் இந்திய அளவிலும், வெளிநாட்டிலும் புகழ் பரப்பிவரும் சூழ்நிலையில், திராவிட மாடல் அரசு கடந்த மூன்றாண்டுக் காலத்தில் பல்வேறுத் துறைகளிலும் நிறைவேற்றியுள்ள திட்டங்கள், அவற்றின் பயன்கள் ஆகியவற்றைத் துறைவாரியாகத் தொகுத்துத் தமிழ்நாடு அரசின் செய்தி மக்கள் தொடர்புத்துறையின் 'தமிழரசு' அச்சகத்தின் மூலம் "தலைசிறந்த மூன்றாண்டு! தலைநிமிர்ந்த தமிழ்நாடு!" என்னும் பெயரில் மூன்றாண்டு சாதனை மலரைச் சிறப்பாகத் தயாரித்துள்ளது.

இச்சாதனை மலரில் பல்வேறு பெருமக்களின் கட்டுரைகளாக, மேற்கு வங்க முன்னாள் ஆளுநர் திரு.கோபால கிருஷ்ண காந்தி அவர்கள் எழுதிய "தமிழ்நாட்டின் நலன்கள் உறுதி செய்யப்பட்டுவிட்டது", தமிழ்நாடு திட்டக்குழுத் துணைத் தலைவர் திரு.ஜெ.ஜெயரஞ்சன் அவர்கள் எழுதிய, "விடியல் பயணம் ஒரு சமூக நீதித்திட்டம்", சட்டமன்ற உறுப்பினர் மருத்துவர் எழிலன் நாகநாதன் அவர்கள் எழுதிய, "திராவிட மாடல் தத்துவமும் தனித்துவமும்", பேராசிரியர் ராஜன் குறை அவர்கள் எழுதிய "மூன்றாண்டுக் காலத்தில் முதன்மைச் சாதனைகள், வழக்கறிஞர் அ.அருள்மொழி அவர்கள் எழுதிய, 'வினைத்திட்பம்' கொண்ட முதலமைச்சர்", கல்வி ஆலோசகர் திரு.ஜெயபிரகாஷ் காந்தி அவர்கள் எழுதிய, "கல்விக் கட்டமைப்பில் உயரம் தொட்ட முதலமைச்சர்", திரு.கனகராஜ் அவர்கள் எழுதிய, "முற்றுகைக்கு மத்தியிலும் மூன்றாண்டுச் சாதனைகள்", பத்திரிகையாளர் திரு.திலீப் மண்டல் அவர்கள் எழுதிய, "ஒருங்கிணைந்த வளர்ச்சியும் சமூக நீதியும் தமிழ்நாட்டின் திராவிட மாடல்", பத்திரிகையாளர் திருமதி சங்கீதா கந்தவேல் அவர்கள் எழுதிய, "பெண்களுக்கான மேம்பாட்டுக்கு வழிகோலும் திராவிட மாடல்", பத்திரிகையாளர் திரு. அருள் எழிலன் அவர்கள் எழுதிய, "தமிழ்நாட்டைப் பின்தொடரும் இந்தியா" ஆகிய கட்டுரைகளும், இம்மலரில் இடம் பெற்றுத் தமிழ்நாடு அரசைப் பாராட்டியுள்ளன. இத்தகையப் பாராட்டு மொழிகளுடன், அழகிய வடிவமைப்புடனும், பல்வேறு வண்ணப் புகைப்படங்களுடனும் இந்த மூன்றாண்டுச் சாதனை மலர் தயாரிக்கப்பட்டுள்ளது.

திருச்சிராப்பள்ளியில்
ரூ.1.82 கோடிச் செலவில்
அரசு கிளை அச்சகத்தின் கூடுதல் கட்டடம்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. **மு.க. ஸ்டாலின்** அவர்கள் திறந்து வைத்தார் – 14.08.2024

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள் 14.08.2024 அன்று தலைமைச் செயலகத்தில், எழுதுபொருள் மற்றும் அச்சுத்துறை சார்பில் திருச்சிராப்பள்ளி மாவட்டம், துவாக்குடி, சிட்கோ வளாகத்தில் அமைந்துள்ள அரசு கிளை அச்சகத்தில் ரூ.1.82 கோடிச் செலவில் கட்டப்பட்டுள்ள கூடுதல் கட்டடத்தைத் திறந்து வைத்தார்.

எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறையானது மாநிலம் முழுவதிலும் உள்ள அரசுத் துறைகளின் பயன்பாட்டிற்குத் தேவைப்படும் நிலைப்படுத்தப்பட்ட படிவங்கள், பதிவேடுகள், துறை சார்ந்த நடைமுறை நூல்கள், பிறப்பு, இறப்பு சான்றிதழ்கள், தேர்தல் படிவங்கள் ஆகியவற்றை அச்சிட்டு வழங்கி வருவதுடன், அரசு அச்சகங்களுக்குத் தேவையான புதிய நவீன இயந்திரங்களை கொள்முதல் செய்தல், உதிரிபாகங்கள் மற்றும் காகிதங்களைக் கொள்முதல் செய்தல், அரசு அச்சகங்களுக்குத் தேவையான பணியாளர்களை நியமனம் செய்தல் போன்ற பணிகளை மேற்கொண்டு வருகிறது.

திருச்சிராப்பள்ளி அரசு கிளை அச்சகத்தில் கட்டப்பட்டுள்ள கூடுதல் கட்டடத்தை திறந்து வைத்தல்

திருச்சிராப்பள்ளி அரசு கிளை அச்சகம் 1965ஆம் ஆண்டு கட்டப்பட்ட பழமை வாய்ந்த கட்டடமாகும். தற்போதுள்ள அக்கட்டடத்தின் அளவு 13,200 சதுர அடி மற்றும் காகித ரீல் குடோன் அளவு 132 சதுர அடி ஆகும். இந்த அச்சகத்தில் பொதுத்துறை தொடர்பான 28 பதிவேடுகளும், காவல்துறை தொடர்பான 17 பதிவேடுகளும் மற்றும் கல்வித்துறை தொடர்பான 1 பதிவேடு, என மொத்தம் 46 பதிவேடுகளும், பொதுத் துறைக்கான 27 படிவங்கள், காவல்துறைக்கான 2 படிவங்கள், என மொத்தம் 29 படிவங்கள் அச்சிடப்பட்டு வருகின்றன. மேலும், திருச்சிராப்பள்ளி, கரூர், அரியலூர் மற்றும் பெரம்பலூர் மாவட்டங்களுக்கான மாவட்ட அரசிதழ்கள் அச்சிடப்பட்டு அனுப்பும் பணியும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இவற்றுடன்

அவ்வப்போது ஒதுக்கீடு செய்யப்படும் அரசு தேர்வு விடைத்தாள்கள், தேர்தல் படிவங்கள், பல்கலைக்கழக விடைத்தாள்கள் போன்ற அவசரப் பணிகளும் அச்சிடப்பட்டு அனுப்புகை செய்யப்பட்டு வருகிறது.

இந்த அச்சகம் தமிழ்நாட்டின் மத்திய மாவட்டத்தில் செயல்படுவதால் பிறமாவட்டங்களில் இயங்கும் அரசு அலுவலகங்களுக்குத் தேவையான படிவங்கள்/ பதிவேடுகள் அச்சிட்டு உடனடியாக வழங்க இயலுமென்பதாலும், கிளை அச்சகத்தின் காகித குடோனில் உள்ள காகித இனங்களை வகைப்படுத்தி வைக்க போதுமான இடவசதி இல்லையென்பதாலும், கூடுதல் பணிகள் மேற்கொண்டு உற்பத்தித் திறனை அதிகரிக்கவும், இந்த அச்சகத்திற்கு, கூடுதல் கட்டடம் கட்டுவதற்கு துறை சார்பில் நடவடிக்கை எடுக்கப்பட்டது.

அதன்படி, திருச்சிராப்பள்ளி மாவட்டம், துவாக்குடி, சிட்கோ வளாகத்தில் அமைந்துள்ள அரசு கிளை அச்சகத்தில் 9,456.97 சதுர அடி பரப்பில் ரூ.1.82 கோடிச் செலவில் கட்டப்பட்டுள்ள கூடுதல் கட்டடத்தை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் திறந்து வைத்தார். இக்கூடுதல் கட்டடத்தில், பல்கலைக்கழகங்கள், அரசு தேர்வுகளுக்கு தேவையான விடைத்தாள்கள், பொது படிவங்களின் அச்சுப்பணிகளை அதிகரிக்கவும், அச்சுப்பணிகளுக்குத் தேவையான காகித ரீல்கள், காகிதங்களைப் பாதுகாக்கவும், அச்சிடப்பட்ட படிவங்கள், பதிவேடுகளை உரிய முறையில் பராமரித்து இருப்பு வைப்பதற்கும், பொதுமக்கள், பணியாளர்களுக்கு உரிய வசதிகளை ஏற்படுத்திடவும், மாற்றுத்திறனாளிகள் பயன்படுத்தும் வகையில் சாய்தளம் வசதி போன்ற பல்வேறு வசதிகளுடன் கட்டப்பட்டுள்ளது.

கேலோ இந்தியா இளைஞர் விளையாட்டுபோட்டி குறித்த காலப்பேழை புத்தகம் வெளியீடு

படமும்/செய்தியும்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் 22.08.2024 அன்று தலைமைச் செயலகத்தில், கேலோ இந்தியா இளைஞர் விளையாட்டுப் போட்டி - 2023 குறித்து விளக்கும் வகையில் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தால் தயாரிக்கப்பட்ட "Future is Here - Khelo India Youth Games 2023" என்ற காலப்பேழை புத்தகத்தை (Coffee Table Book) வெளியிட்டார். இந்நிகழ்ச்சியில், மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாடுத்துறை அமைச்சர் திரு. **உதயநிதி ஸ்டாலின்** அவர்கள் கலந்து கொண்டார்.

ரூ.90.52 கோடி மதிப்பீட்டில் BS–VI 150 புதிய பேருந்துகள் இயக்கம்

மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் திரு. **உதயநிதி ஸ்டாலின்** அவர்கள் கொடி அசைத்துத் தொடங்கி வைத்தார்கள்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்படி, 28.08.2024 அன்று சென்னை, மாநகர் போக்குவரத்துக் கழக, மத்தியப் பணிமனையில் நடைபெற்ற நிகழ்ச்சியில், மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின் அவர்கள், அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகத்திற்கு ரூ.90.52 கோடி மதிப்பீட்டில் BS–VI 150 புதிய பேருந்துகளின் இயக்கத்தை கொடி அசைத்துத் தொடங்கி வைத்தார்கள்.

அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகத்திற்கு நவீன தொழில் நுட்பத்துடன் கூடிய படுக்கை, இருக்கை வசதி கொண்ட BS–VI 200 புதிய பேருந்துகள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. முதற்கட்டமாக 150 BS–VI புதிய பேருந்துகள் இன்று முதல் இயக்கப்பட்டது. புதிய பேருந்தில் மாற்றுத்திறனாளிகள், முதியோர்கள், பெண்கள், குழந்தைகள் எளிதாக பயணிக்கும் வகையில் கீழ்க்கண்ட சிறப்பு அம்சங்கள் உள்ளது.

BS–VI புதிய பேருந்தில் பயணிகளுக்கான முக்கிய அம்சங்கள்:

- இந்தியாவிலேயே முதல் முறையாக அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகத்தில், பயணிகளின் சொகுசுப் பயணத்திற்காக முன்புற Air Suspension வசதி செய்யப்பட்டுள்ளது.
- மூத்த குடிமக்கள், குழந்தைகளின் வசதிக்காக 50 பேருந்துகளில் கீழ் படுக்கை வசதி அமைக்கப்பட்டுள்ளன.

- படுக்கை இரண்டிற்கும் இடையே அதிகரித்த இடம், தடுப்பு வசதியுடன் வழங்கப்பட்டுள்ளது.
- ஒவ்வொரு இருக்கை, படுக்கைக்கும் தனித்தனியாகத் தனிப்பட்ட சார்ஜிங் போர்ட்கள் வழங்கப்பட்டுள்ளது.
- ஒவ்வொரு படுக்கைக்கும் தனித்தனியாகப் பயணிகள் வசதிக்காகத் தனித்தனி மின்விசிறி பொருத்தப்பட்டுள்ளது.
- பயணிகளின் பாதுகாப்பிற்காக ஓட்டுநர் இருக்கைக்கு அருகில் அபாய ஒலி எழுப்பி (SOS) அமைக்கப்பட்டுள்ளது.
- நடத்துனரால் பயணிகளுக்குத் தகவல் அறிவிப்புகளுக்கான ஒலி பெருக்கி (Micro Phone) அமைக்கப்பட்டுள்ளது.
- பயணிகளின் வசதிக்காக டிஜிட்டல் கடிகாரம் அமைக்கப்பட்டுள்ளது.
- பயணிகளின் சுமைப் பெட்டி மற்றும் சரக்கு பார்சலுக்காகவும் போதிய இட வசதிகள் வடிவமைக்கப்பட்டுள்ளன.

BS-VI புதிய பேருந்துகளின் முக்கிய அம்சங்கள்:

- அரசாங்க விதிமுறைகளின்படி காற்று மாசுபாட்டைக் குறைக்கும் வகையில் BS-VI புதிய பேருந்துகளின் engine வடிவமைக்கப்பட்டுள்ளது.
- மேம்படுத்தப்பட்ட பிரேக்கிங் செயல் திறனுக்காக எலக்ட்ரானிக் மேக்னடிக் ரேடர் (EMR) நிறுவப்பட்டுள்ளது.
- இன்ஜின் தீயை முன் கூட்டியே திறம்பட அனுமானித்து, தீ கட்டுப்பட்டு அடக்கும் அமைப்புக் (FDSS) கருவி வடிவமைக்கப்பட்டுள்ளது.



செப்டம்பர் 17: தந்தை பெரியார் அவர்களின் பிறந்த நாள்

“எம்தந்தை பெரியார்”

வங்கத்துத் தாகூர் போல் தாடியுண்டு
பொங்குற்ற வேங்கைபோல் நிமிர்கின்ற பார்வை உண்டு,
செங்குன்றத் தோற்றம் உடலில் உண்டு-வெண்
சங்கொத்த கண்களிலே விழியிரண்டும் கருவண்டு-அதில்
சாகும்வரை ஒளி உண்டு!

பம்பரமும் ஓய்வுபெறும் சுற்றியபின்-இவரோ
படுகிழமாய்ப் போனபின்னும் பம்பரமாய்ச் சுற்றிவந்தார்.
எரிமலையாய்ச் சுடுதழலாய்
இயற்கைக் கூத்தாய்
எதிர்ப்புகளை நடுங்கவைக்கும் இடி ஒலியாய்
இன உணர்வுத் தீப்பந்தப் பேரொளியாய்
இழிவுகளைத் தீர்த்துக்கட்டும்; கொடுவாளாய்
இறைவனுக்கே மறுப்புச் சொன்ன இங்கர்சாலாய்
எப்போதும் பேசுகின்ற ஏதென்சுநகர் சாக்ரடீசாய்
ஏன் என்று கேட்பதிலே வைரநெஞ்ச வால்டேராய்
எம்தந்தை பெரியாரும் வாழ்ந்திட்டார், இன்றைக்கோ
இறப்பின் மடியினிலே வீழ்ந்திட்டார்.

– முத்தமிழறிஞர் **கலைஞர்** அவர்கள்

கட்டாய கல்வி உரிமைச் சட்டத்தைச் செயல்படுத்துவதில் தமிழ்நாடு இந்தியாவிலேயே முன்னோடி மாநிலமாக விளங்குகிறது

மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் திரு. **உதயநிதி ஸ்டாலின்** அவர்கள் 04.08.2024 அன்று சென்னை, ஜவஹர்லால் நேரு உள்விளையாட்டு அரங்கில், பள்ளிக் கல்வித் துறை சார்பில் 2023-2024ஆம் கல்வியாண்டில் நடைபெற்ற சர்வதேச/ தேசிய / மாநில அளவிலான விளையாட்டுப் போட்டிகளில் பதக்கம் வென்ற மாணவ, மாணவியர், 10, 12ஆம் வகுப்பு அரசுப் பொதுத் தேர்வுகளில் 100 சதவிகித தேர்ச்சி பெற்ற தனியார் பள்ளிகளுக்குப் பாராட்டுச் சான்றிதழ்கள் வழங்கி ஆற்றிய விழாப்பேருரை.

சென்ற கல்வி ஆண்டில் நடைபெற்ற சர்வதேச தேசிய, மாநில அளவிலான விளையாட்டுப் போட்டிகளில் பதக்கங்களை வென்ற மாணவ, மாணவிகளுக்கும், அதேபோல 10ஆம் வகுப்பு, 12ஆம் வகுப்பு அரசுப் பொதுத் தேர்வுகளில் 100 சதவிகித தேர்ச்சி பெற்ற தனியார் பள்ளிகளுக்கும் பாராட்டுச் சான்றிதழ் வழங்குகின்ற இந்தச் சிறப்பான விழாவில் பங்கேற்பதில் நான் மிகுந்த மகிழ்ச்சியும், பெருமையும் அடைகின்றேன். இந்த விழாவில் பங்கேற்கும் வாய்ப்பை எனக்குத் தந்த பள்ளிக்கல்வித் துறை அமைச்சர் திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி அவர்களுக்கு மீண்டும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இன்றைக்கு ஞாயிற்றுக்கிழமை. நீங்கள் அனைவரும் வீட்டில் ரிலாக்ஸாக இருந்திருக்க வேண்டும். இங்கு அழைத்துவந்து விட்டார்கள் என்ற கவலை ஏதுமின்றி, உற்சாகத்துடன் இங்கு வந்து அமர்ந்துள்ளீர்கள். உங்களைப் பார்க்கும் போது அதே உற்சாகமும் மகிழ்ச்சியும் எங்களுக்கும் வந்திருக்கிறது. திராவிட இயக்கத்தில் இருந்துவரும் ஒவ்வொரு தொண்டருக்கும் படிக்கும் மாணவர்களைப் பார்த்தால் ஒரு தனி மகிழ்ச்சி ஏற்படும். அதற்கு ஒரு எடுத்துக்காட்டு, ஒரு நிகழ்ச்சியை சுட்டிக்காட்ட விரும்புகின்றேன். ஒரு முறை தந்தைப் பெரியார் அவர்கள் ஒரு பொதுக் கூட்டத்தை முடித்து விட்டுச் சாலையில் அவரது வாகனத்தில் சென்றுகொண்டிருந்தார். அந்த வழியாகப் பெண் குழந்தைகள் பள்ளிக்கூடத்தை முடித்துவிட்டு அவர்கள் சீருடையில் நடந்து சென்றார்கள். அப்போது, தந்தைப் பெரியாருக்கு 94 வயது. அவரது வாகனத்தில் உட்கார்ந்தபடியே அந்தக் காட்சியைப் பார்த்துக்கொண்டு, ஒரு சின்னக் குழந்தைபோல், உற்சாகமாக அந்தப் பெண் குழந்தைகளைப் பார்த்துக் கைதட்டி ரசித்து மகிழ்ந்தார். இதற்குத் தானே நான் காலம் முழுவதும் போராடினேன். திராவிட இயக்கத்தின் கருணை இதோ நான் என் கண் முன்பே பார்த்துவிட்டேன்.

அப்படி என்ற மகிழ்ச்சிதான் தந்தைப் பெரியாரின் மகிழ்ச்சி துள்ளச் செய்தது. மாணவிகள் பள்ளிக்கு நடந்து போவதைப் பார்த்த பெரியார் மகிழ்ச்சி அடைந்தார். கலைஞர் அவர்கள் ஆட்சிக்கு வந்தபொழுதுமாணவ-மாணவிகள்பள்ளிக்குநடந்து போகக் கூடாது என்று அவர்களுக்கு பஸ் பாஸ் வழங்கிப் பேருந்துத் திட்டத்தை அளித்து பேருந்தில் போக வைத்தார் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள். தந்தைப் பெரியாருக்கும், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களுக்கும் ஏற்பட்டுள்ள அந்த மகிழ்ச்சிதான், இன்றைக்கு இங்கு வந்துள்ள மாணவச் செல்வங்களைப் பார்க்கும் போது எங்கள் அத்தனை பேருக்கும் ஏற்படுகின்றது. இந்த மகிழ்ச்சி எல்லா நாளும் தொடர வேண்டும் என்பதுதான் நம்முடைய முதலமைச்சர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவருடைய ஒரே இலட்சியம். நம்முடைய குழந்தைகள் அனைவரும் பள்ளிப்படிப்பை நன்றாகப் படிக்க வேண்டும். பள்ளிப்படிப்பை முடித்த அத்தனை மாணவர்களும், பள்ளிப்படிப்பு மட்டும் போதாது, உயர் கல்வியிலும் சேரவேண்டும். உயர்கல்வி படிக்கின்ற மாணவர்கள் எல்லாம் இன்ஜினியராக, ஆராய்ச்சியாளர்களாக, மருத்துவர்களாக, அரசு அதிகாரிகளாகப் பெரிய பெரிய பொறுப்புகளுக்கு வரவேண்டும் என்பதுதான் நம்முடைய முதலமைச்சருடைய, நம்முடைய திராவிட மக்கள் அரசுடைய ஒரே இலட்சியம். அதற்கு ஏற்றவாறு தான் நம்முடைய முதலமைச்சர் அவர்கள் பல திட்டங்களைத் தந்துகொண்டிருக்கின்றார்கள். நம்முடைய முதலமைச்சர் அவர்களைப் பொறுத்தவரை அரசுப் பள்ளி, தனியார் பள்ளி என்று அவர் பிரித்துப் பார்ப்பது கிடையாது. இன்றும் குறிப்பிட்டுச் சொல்லவேண்டும் என்றால், தனியார் பள்ளியில் இருக்கும் அத்தனை வசதிகளும், அரசுப் பள்ளிகளுக்கும் வரவேண்டும் என்றுதான் ஒவ்வொரு திட்டத்தையும் அவர் பார்த்துப் பார்த்து செய்து கொண்டிருக்கிறார். தமிழ்நாடு கல்வியில் என்று முன்னேறிய மாநிலமாக இருக்கிறது என்றால் அதற்காக நம்முடைய திராவிடமாடல் அரசு எடுக்கின்ற நடவடிக்கைகளுக்குத் தனியார் பள்ளிகள் நீங்கள் அளிக்கின்ற ஒத்துழைப்பு மிகமிக முக்கியமானது. இன்றைக்குப் பள்ளிப்படிப்பை முடித்துவிட்டு கல்லூரிகளில் சேராமல் இருக்கும் மாணவர்கள் எல்லாம் தொடர்பு கொண்டு அவர்கள் எல்லாம் உயர்கல்வியில் சேர்க்க வேண்டும் என்பதற்காக தான் நம்முடைய அரசு தனி முயற்சி எடுத்து வருகின்றது. அதேபோல், விளையாட்டில் சேர்ந்தவர்கள் அனைவருக்கும் இந்த அரசு எல்லா வகையிலும் உதவத் தயாராக இருக்கின்றது. விளையாட்டுத் துறையில் சாதிக்கின்ற திறமையாளர்களுக்கு உதவிட தமிழ்நாடு அரசு இந்தியாவிலேயே முதன்முறையாகத் தமிழ்நாடு சாம்பியன்ஸ் பவுன்டேஷன் என்ற திட்டத்தை அறக்கட்டளை தொடங்கப்பட்டு இருக்கிறது. இந்த அறக்கட்டளை மூலமாக நூற்றுக்கணக்கான விளையாட்டுகளுக்கு இதுவரை இந்த ஒரு வருடத்தில் மட்டும் ரூ.10 கோடி அளவுக்கு அவர்களுக்கு உயரிய ஊக்கத் தொகை வழங்கப்பட்டு வருகிறது. இதுதவிர சர்வதேச தேசிய அளவிலான போட்டிகளில் சாதிக்கின்ற மாணவர்களுக்கு உயரிய ஊக்கத்தொகை வழங்கி தமிழக அரசு கௌரவப்படுத்தியும், ஊக்கப்படுத்தியும் வருகின்றது. இன்றைக்குப் பாராட்டுச் சான்றிதழ் பெற்று இருக்கின்ற பள்ளி மாணவர்கள் நாளைக்கு

தமிழ்நாட்டுக்குப் பெருமை சேர்க்கும் வகையில் தொடர்ந்து பல்வேறு போட்டிகளில் பங்கேற்று பதக்கங்களையும் கோப்பைகளையும் பெற வேண்டும். அதற்கு என்னென்ன தேவையோ அத்தனை உதவிகளையும் நம்முடைய தமிழ்நாடு அரசு தரத் தயாராக இருக்கின்றது. ஆகவே மாணவர்களாகிய நீங்கள் உங்கள் திறமைகளை வளர்த்துக்கொள்வதில் நன்றாக கவனம் செலுத்துங்கள். இந்த நேரத்தில் மாணவிகளுக்கும் தனியார் பள்ளியைச் சார்ந்தவர்களுக்கும் ஒரு விஷயத்தை சொல்லிக்கொள்ள விரும்புகின்றேன். படிப்பு என்று சொன்னால் பாடத்தில் உள்ளதை மட்டுமே வெறுமனே மனப்பாடம் செய்து தேர்வு எழுதி, மதிப்பெண் வாங்குவது மட்டும் தான் கல்வி என்பது கிடையாது. உண்மையான படிப்பு என்றால், பாடத்தில் உள்ளதை நன்றாகப் புரிந்து கொண்டு படிக்க வேண்டும். அறிவைப் பயன்படுத்துபவருக்கு மட்டும் எல்லா இடத்திலும் மரியாதையும் சிறப்பும் தானாகவேகிடைக்கும்.அறிவைப்பயன்படுத்தாமல் வைத்திருப்பதால் எந்தப் பயனும் இல்லை. முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள், பேரறிஞர் அண்ணா நூற்றாண்டை முன்னிட்டு அண்ணா நூற்றாண்டு நூலகத்தைச் சென்னையில் திறந்து வைத்தார்கள். நம்முடைய முதலமைச்சர் கலைஞர் நூற்றாண்டை முன்னிட்டு கலைஞர் நூற்றாண்டு நூலகத்தை மதுரையில் திறந்து வைத்தார்கள். 10 இலட்சத்துக்கும் அதிகமானவர்கள் அந்த நூலகத்திற்கு சென்று படித்திருக்கிறார்கள். தமிழ்நாட்டில் பல்வேறு ஊர்களில் இருந்து மாணவர்கள் படையெடுக்கின்றார்கள். விரைவில் கோவையிலும், திருச்சியிலும் கலைஞர் நூற்றாண்டு நூலகம் அமைய இருக்கின்றது. கட்டாயக் கல்வி உரிமைச் சட்டப்படி, வறுமையில் இருக்கக்கூடிய குழந்தைகளுக்குத் தனியார் பள்ளிகளில் 25 சதவிகித இட ஒதுக்கீடு வழங்க வேண்டும். இந்தச் சட்டத்தைச் செயல்படுத்துவதில் இந்தியாவிலேயே தமிழ்நாடு முன்னோடி மாநிலமாக விளங்கி வருகிறது. இந்தச் சட்டத்தின்படி சேர்க்கப்பட்ட மாணவர்களுக்கான கல்விக் கட்டணத்தை ஆண்டுதோறும் தனியார் பள்ளிகளுக்கு அரசே வழங்க வேண்டும் என்பது சட்டம். ஆனால், முந்தைய ஆட்சிக் காலங்களில் இந்தத் தொகையைத் தாமதமாகத் தான் தனியார் பள்ளிகளுக்கு வழங்கப்பட்டது. ஆனால், திராவிடமாடல் அரசு பொறுப்பேற்ற பிறகு சுமார் 1,200 கோடி ரூபாயை பள்ளிகளுக்கு வழங்க அரசாணை வெளியிடப்பட்டு அதற்கான பணிகள் நடைபெற்று வருகின்றன. இனி வரும் கல்வியாண்டுகளில் இந்த குழந்தைகளுக்கான கல்விக் கட்டணத் தொகையை அந்தந்த ஆண்டே வழங்க நம்முடைய முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள். எனவே, அரசுப் பள்ளிகளின் வளர்ச்சி மட்டுமின்றி தனியார் பள்ளிகளின் முன்னேற்றத்திற்கும் நம்முடைய திராவிடமாடல் அரசு என்றைக்கும் துணை நிற்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

இங்கு நிறைய ஆசிரியர் பெருமக்கள் வந்துள்ளீர்கள். எப்பொழுதும் சொல்வது போல் உங்களுக்கும் ஒரு வேண்டுகோள். நாடாளுமன்ற உறுப்பினர் திரு. தயாநிதிமாறன் அவர்கள் பேசும் போது, சென்ற கேலோ இந்தியா போட்டியின்போது இந்தியா வரிசையில் நம்முடைய மாநிலம் ஆறாவது இடத்தைப் பிடித்தது என்று சொன்னார். அதில் ஒரு சின்ன திருத்தம். தமிழ்நாடு 2ஆவது இடத்தைப் பெற்றது. முதல் முறையாக பதக்கப்பட்டியலில் கேலோ இந்தியா போட்டியில் 2ஆவது இடத்தை தமிழ் நாட்டு வீரர் வீராங்கனைகள் பிடித்தனர். ஆசிரியர்களுக்கு மீண்டும் ஒரு வேண்டுகோள். விளையாட்டு வகுப்புகளைத் தயவு செய்து கடன் வாங்கி, கணிதம், அறிவியல் வகுப்புகள் நடத்தாதீர்கள். ஏனென்றால், பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் இந்நிகழ்ச்சியை நடத்தி இருந்தாலும், இந்த நிகழ்ச்சி நடப்பது ஜவஹர்லால் நேரு உள்விளையாட்டு அரங்கம் (விளையாட்டுத் திடல்). கல்வி எவ்வளவு முக்கியமோ அதே அளவுக்கு உடற்பயிற்சியும் விளையாட்டும் முக்கியம். நன்றாக விளையாடும் குழந்தைக்கு நல்ல ஆரோக்கியம் கண்டிப்பாக இருக்கும். நல்ல ஆரோக்கியம் இருந்தால் நன்றாகப் படிப்பார்கள். எனவே, விளையாட்டு வகுப்புகளைத் தயவு செய்து கடன் வாங்காதீர்கள் என்று கணிதம், அறிவியல் ஆசிரியர்களை மீண்டும் நான் கேட்டுக் கொண்டு, இங்கு பாராட்டுச் சான்றிதழைப் பெற்றுள்ள தனியார் பள்ளிகளுக்கும், மாணவர்களுக்கும் என்னுடைய பாராட்டுகளைத் தெரிவித்து, வாய்ப்புக்கு நன்றி கூறி விடைபெறுகின்றேன்.

அகில இந்தியக் குடிமைப்பணித் தேர்வு பயிற்சி மையம்

சென்ற மாத இதழின் தொடர்ச்சி....

ஒரு பார்வை...

மாதிரி ஆளுமைத் தேர்வு

முதன்மைத் தேர்வில் வெற்றி பெறுபவர்களுக்கு இந்நிலையம் மாதிரி ஆளுமைத் தேர்வை நடத்தி வருகிறது. புதுதில்லியில் நடைபெறும் ஆளுமைத் தேர்வுக்கு வெகுநாட்களுக்கு முன்னதாக இது நடத்தப்படுகிறது. இவர்களுக்கு இடைநிகழ்வுச் செலவிற்கு ரூ.2,000 வழங்கப்பட்டு வந்தது. மனித வள மேலாண்மை (பயிற்சி-1) துறை, அரசாணை (நிலை) எண்-68, நாள்: 08.07.2022இன்படி இடைநிகழ்வுச் செலவு தொகை ரூ.2,000லிருந்து ரூ.5,000 ஆக உயர்த்தி வழங்கப்பட்டு வருகிறது.

பயிற்சி ஆசிரியர்கள்

இப்பயிற்சி மையத்தில் ஒரு முதல்வர், ஒரு முழுநேர இணைப் பேராசிரியர் மற்றும் ஒரு நிருவாக அலுவலர் அல்லாமல், 20க்கும் அதிகமாக அழைப்பு விரிவுரையாளர்களைக் கொண்டு 23க்கும் மேற்பட்ட பாடப்பிரிவுகளில் பயிற்சி அளிக்கப்படுகிறது.

இப்பயிற்சி மையத்தில் கீழ்கண்ட வசதிகள் உள்ளன.

❖ மொத்தம் 76 கழிப்பறையுடன் கூடிய விடுதி அறைகள் உள்ளன.

❖ 27,190 புத்தகங்கள், 12 மாத இதழ்கள் கொண்ட நூலகம் உள்ளது.

❖ மாணவர்களுக்காகத் தனிக் கணினி கூடமும் இலவச வை – பை வசதியும் உள்ளது.

❖ நடப்பு நிகழ்வுகளில் நன்றாக நுணுக்கங்களை அறிந்து கொள்வதற்காக தொலைக்காட்சிப் பெட்டி, செய்தித்தாள்களுடன் ஒரு வாசிப்பு அறையும் படிப்பதற்கு இரண்டு அறைகளும் உள்ளன.

❖ விடுதியில் தங்கி பயிற்சி மேற்கொள்ளும் 225 மாணக்கர்களுக்கு உணவு, விடுதி கட்டணம் இலவசம்.

வலைதளத்தில் நேரடியாக ஒளிபரப்புவதற்கான வசதி

அரசு ஆணை எண் 123. பணியாளர், நிருவாகச் சீர்திருத்தப் (பயிற்சி 1) துறை நாள் 14.08.2019 இன்படி அகில இந்திய குடிமைப்பணித் தேர்வுப் பயிற்சி மையத்தின் பயிற்சிகளை வலைத்தளத்தில் நேரடியாக ஒளிப்பரப்புவதற்கான வசதிக்காக ரூ.33 இலட்சம் அரசு ஆணை வழங்கப்பட்டுள்ளது.

அகில இந்தியக் குடிமைப்பணித் தேர்வு பயிற்சி மையத்திற்கு "கணினி ஆய்வகத்தினை புதுப்பிக்கும் பொருட்டுக் கணினிகள், அச்சுப்பொறி மற்றும் உபகரணங்கள் வாங்கப்படும்" என மாண்புமிகு மனித வள மேலாண்மைத்துறை அமைச்சர் 13.09.2021 அன்று சட்டப் பேரவையில் 2021-2022ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கையில் விதி எண்.110இன்கீழ் அறிவித்துள்ளதைத் தொடர்ந்து மாண்புமிகு நிதி மற்றும் மனித வள மேலாண்மைத்துறை அமைச்சர் 13.09.2021 அன்று சட்டப் பேரவையில் 2021-2022ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கை எண். 35இன் கீழ் அறிவிப்பு வெளியிடப்பட்டு, அரசாணை (நிலை) எண்.136 மனிதவள மேலாண்மைத் (பயிற்சி-1) துறை நாள் 06.12.2021இன் படி 40 கணினிகள், 6 – அச்சுப் பொறிகள், 2 - மடிக்கணினிகள், 2 – ஸ்கேனர்கள், 3 - ஒளிப்படக் காட்டிகள் (Projector), 4 – தொலைக்காட்சி பெட்டிகள் (LED TV), 4 – நகல் எடுக்கும் இயந்திரங்கள் (Xerox Machines), மற்றும் 10 KVA UPS ஆகிய உபகரணங்கள் வாங்குவதற்குத் தொகை ரூ.50,99,940 (ரூபாய் ஐம்பது இலட்சத்து தொண்ணூற்று ஒன்பதாயிரத்துத் தொள்ளாயிரத்து நாற்பது மட்டும்) அரசால் வழங்கப்பட்டு கணினி

அகில இந்திய குடிமைப் பணித் தேர்வில்
நான் முதல்வன் திட்டத்தின்கீழ்ப் பயிற்சி பெற்ற பயனாளி
மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு நன்றி

திரு. **அஸ்வின்**

அகில இந்தியக் குடிமைப் பணி தேர்வில் நான் முதல்வன் திட்டத்தின் கீழ், பயிற்சி பெற்றுத் தேர்ச்சி அடைந்த திருப்பூர் மாவட்டத்தைச் சேர்ந்த திரு. அஸ்வின் அவர்கள் நம்மிடம் கூறியபோது,

எல்லோருக்கும் வணக்கம். நான் திருப்பூர் மாவட்டத்திலிருந்து வர்றேன். நான் பி.டெக். முடிச்சிட்டு இப்ப வந்து யு.பி.எஸ்.சி. படிக்கலாம்னு யோசிச்சிட்டு இருக்கையிலேயே கரைக்ட்டா நான் முதல்வன்ல ஆல் இந்தியா சிவில் சர்வீஸ் எக்ஸாம் கண்டக்ட் பண்ணுவாங்க, வருச வருசம் வருது. அப்ப கரைக்டா இந்த வருசம் எக்ஸ்ட்ரா ஸ்டைபண்ட் ஆட் பண்ணி 7,000 ரூபாய் கொடுக்கிறாங்கன்னு சொன்னாங்க. அது நல்ல ஸ்ப்ரட் ஆகி எனக்கு வந்துச்சு. சரி நம்மளும் எழுதுவோம் பார்ப்போம் என எழுதினேன். அப்புறம் எழுதி போன 2023 அக்டோபர்ல எனக்கு கெடச்சுது. ரெண்டுமே கெடச்சுது.

ஆல் இந்தியா சிவில் சர்வீஸ் கோச்சிங் சென்டரில் இலவசப் பயிற்சி, இலவச உணவு, இலவசத் தங்கும் விடுதியோடு உங்களுக்கு ட்ரைனிங் குடுப்பாங்க. அதிலையும் செலக்ட் ஆனேன். அதுக்கப்புறம் நான் முதல்வன்ல ஸ்டைபன்ட் 7,500 ரூபாய் குடுத்தாங்க. அதுக்கப்புறம் போன வருசம் அக்டோபர்ல ஜாயின் பண்ணதுல இருந்து அடுத்த ப்லிரிமினரி எக்ஸாம் ஃபுல் டைம் கோச்சிங்கல அட்டன் பண்ணியிருந்தேன். இந்த கோச்சிங் ரொம்ப யுஸ்ஃபுல்லா இருந்துச்சி.

இப்ப வந்து கோச்சிங் எப்படி குடுப்பாங்கனா முதலில் இருந்ததை விட புதுசா அப்ரோச் சேஞ்சி பண்ணி நமக்கு என்ன தேவைங்கிறத புரிஞ்சிகிட்டு கேப் பில் பன்ற மாதிரி முதலில் பாத்தீங்கனா ஃபுல் கிளாஸ் நடக்கும். நீங்க இருக்கிற லெவல் புரிஞ்சிட்டு என்ன டெஸ்ட் வெக்கலாம் என அனலைஸ் பண்ணி நீங்க எங்க வீக்கா இருக்கிறீங்க அதையும் புரிஞ்சிகிட்டு இன்புட் நிறைய பண்ணி அந்த மாதிரி அப்ரோச் பண்ணி இம்புரூமெண்ட்டும் நல்ல பயங்கரமா காம்சுருக்காங்க. கிட்டத்தட்ட ஒரு 80 ஸ்டூடன்ஸ் இங்கிருந்து குவாலிபைடு ஆகி இருக்காங்க ப்ரிலிமினரியில் ஃபர்ஸ்ட் ஸ்டேஜ்ல-அதை முடிச்சுட்டு மெயின் எக்ஸாம் நெக்ஸ்ட் கோச்சிங் ஸ்டார்ட் பண்ணி அது போக ஆரம்பிச்சிடுச்சு.

நீங்க ப்ரிலிமினரி இங்கிருந்து படிச்சிருந்தாலும் சரி, வெளியிலிருந்து படிச்சு குவாலிபைடு பண்ணியிருந்தாலும் சரி இந்த இன்ஸ்டிடியுட்ல ஜாயின் பண்ணிக்கலாம் மெயின் எக்ஸாம்கு. எந்த எக்ஸாமும் எதுவுமே கிடையாது. ஒரிஜினல் பிரிலிமினரி குவாலிபைடு இருந்தா இங்க வந்து ப்ரியாகவே மெயின்ஸ்க்கு ஜாயின் பண்ணிக்கலாம். இங்க மெயின்ஸ்கு சூப்பரா நல்ல டெஸ்ட் வெச்சு கோச்சிங் குடுத்து போயிட்டு இருக்கிறது. 7,500 ரூபாய் போக யாரெல்லாம் குவாலிபைடு பண்ணியிருந்தாங்களோ அவங்களுக்கு எல்லாம் மெயின்ஸ்கு எக்ஸ்ட்ரா 25,000 ரூபாய் தமிழ்நாடு அரசு தராங்க. இது வந்து ரொம்ப யுஸ்ஃபுல்லா இருக்கு.

இப்படி நான் முதல்வன் திட்டத்தின் மூலம் எங்க எய்ம அச்சீவ் பன்றதுக்கு கூட இருந்து உறுதுணையாக இருந்து வரும் தமிழ்நாடு அரசுக்கும், நான் முதல்வன் திட்டத்தைத் தந்த மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கும், நன்றியை தெரிவித்துக்கொள்கிறேன்.

நன்றி! வணக்கம்!

ஆய்வகம் மற்றும் கணினி நூலகம் (E-Library) புதுப்பிக்கப்பட்டுள்ளது.

உணவுக் கட்டணம்

அரசு ஆணை எண் 91, பணியாளர், நிருவாகச் சீர்திருத்த (பயிற்சி-1) துறை நாள் 19.07.2019இன்படி அகில இந்தியக் குடிமைப்பணித் தேர்வு பயிற்சி மைய பகுதிநேரப் பயிற்சி மாணவ/ மாணவியர்களுக்கும் உணவுக் கட்டணம் மற்றும் பயிற்றுவிப்புக் கட்டணத்திற்காக ரூ.9.84 இலட்சம் 2020-2021ஆம் ஆண்டு ஒதுக்கீடு செய்து, அரசு ஆணை வழங்கப்பட்டுள்ளது.

அரசு ஆணை எண்.163 பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் (பயிற்சி-1) துறை, நாள் 22.10.2019இன்படி அகில இந்தியக் குடிமைப்பணித் தேர்வுப் பயிற்சி மைய மாணவ/

மாணவியர்களுக்கான உணவுக் கட்டணம் ரூ.2,000லிருந்து ரூ.3,000ஆக உயர்த்தி, அரசு ஆணை வழங்கப்பட்டுள்ளது.

அரசாணை (நிலை) எண். 71, மனிதவள மேலாண்மைத் (பயிற்சி-1) துறை நாள் 15.07.2022 இன்படி இப்பயிற்சி மையத்தில் பயிற்சி பெறும் ஆர்வலர்களுக்கு உணவு வழங்குவதற்கு உணவுக் கூடப்பிரிவுகட்டுமானபணிகள்,மிடுக்குவகுப்பறைகள் (Smart Class ooms) தொடர்பான பணிகள் மேற்கொள்ள தொகை ரூ.1,17,96,383 (ரூபாய் ஒரு கோடியே பதினேழு இலட்சத்து தொண்ணூற்று ஆறாயிரத்து முந்நூற்று எண்பத்தி மூன்று மட்டும்) அரசால் வழங்கப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன.

மாற்றுத்திறனாளி மாணவ / மாணவியர்களுக்கான பயிற்சி

மாற்றுத்திறனாளி மாணவ / மாணவியர்களுக்குச் சேர்க்கைக்கான இட ஒதுக்கீடு முழுநேரம் – 09, பகுதி நேரம் – 04 பின்பற்றப்பட்டுப் பயிற்சி அளிக்கப்படுகிறது.

மாற்றுத்திறனாளி மாணவ / மாணவியர்களுக்கு கீழ்காணும் வசதிகளும் உதவி உபகரணங்களும் அகில இந்திய குடிமைப்பணித் தேர்வுப் பயிற்சி மையத்தில் உள்ளன.

மாற்றுத்திறனாளி மாணவ / மாணவியர்களுக்கெனப் படியில்லா நடைபாதை (Ramp) அமைக்கப்பட்டுள்ளது.

மாற்றுத்திறனாளி மாணவ / மாணவியர்களுக்கெனப் பிரத்தியேகமான கழிவறை அமைக்கப்பட்டுள்ளது.

மாற்றுத்திறனாளி மாணவ / மாணவியர்களுக்கென ஒரு சக்கர நாற்காலி உள்ளது.

பிரேய்லி மேப், உலக உருண்டை உள்ளது (URANIO 3 in 1 Raised relief Oglobe), பார்வை குறைபாடுள்ள ஆர்வலர்களுக்காக ஒலி வடிவில் (Audio) 61 – மின்னணுப் புத்தகங்கள் (E-Book) வசதி ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

சூரிய ஒளி மூலம் மின்சார உற்பத்தி செய்யும் சோலார் உபகரணங்கள் மூன்றாவது தளத்தில் பொருத்தப்பட்டுள்ளன.

மதுரை, கோயம்புத்தூர் – குடிமைப்பணிகள் பயிற்சி மையம்

சென்னையில் உள்ள அகில இந்தியக் குடிமைப்பணிப் பயிற்சி மையத்தை போன்று அகில இந்தியக் குடிமைப்பணிகள்/அகில இந்திய காவல் பணிகள் பயிற்சி அளிக்க, மதுரை காமராஜர் பல்கலைக்கழகம், மதுரை, பாரதியார் பல்கலைக்கழகம், கோயம்புத்தூர் ஆகிய இரண்டு இடங்களில் கிராமப்புற மாணவர்களின் நலன்களைக் கருத்தில்கொண்டு, அண்ணா நூற்றாண்டுக் குடிமைப்பணிகள் பயிற்சி மையம் என்ற பெயரில் புதியதாக இரண்டு பயிற்சி மையங்கள் அரசால் தொடங்கப்பட்டுள்ளன. இப்பயிற்சி மையங்களில் மத்திய தேர்வாணையத்தின் முதல்நிலைத் தேர்விற்கு மட்டும் பயிற்சி அளிக்கப்படுகிறது.



செப்டம்பர் 15: பேரறிஞர் அண்ணா அவர்கள் பிறந்த நாள்

“ஒப்பற்ற தலைவர்”

“பேரறிஞர் அண்ணா அவர்கள் திராவிட முன்னேற்றக் கழகத்தைத் தோற்றுவித்துத் தமது எழுத்தாலும், பேச்சாலும், ஈடுஇணையற்ற உழைப்பாலும் தமிழகத்தின் இன்றைய எழுச்சிக்கும், வளர்ச்சிக்கும் வலுவான அடித்தளங்களை உருவாக்கிய ஒப்பற்றத் தலைவர்.

தமிழ்மொழி, இன, பண்பாட்டு மரபுகள் தமிழகத்தில் மீண்டும் உயிர்பெற வேண்டும்; ஆண்டான் அடிமை எனும் பேதம் நீங்கி, “ஒன்றே குலம்; ஒருவனே தேவன்” எனும் உணர்வு நிலைபெற வேண்டும்; வலிவும் பொலிவும் நிறைந்த இளைஞர் சமுதாயம், “கடமை கண்ணியம் கட்டுப்பாடு” எனும் முப்பெரும் கோட்பாடுகளுடன் வளர்ந்து, வாழ்வில் வளம்பெற வேண்டும்; வளரும் வருங்காலத் தலைமுறைகளுக்கு வழிகாட்டிடவும் வேண்டும் - என இந்தத் தமிழ்ச் சமுதாயத்திற்காக இறுதிவரை பாடுபட்டவர் அண்ணா!”

– முத்தமிழறிஞர் **கலைஞர்** அவர்கள்

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம்

(TNPSC) குரூப் – I, II, IV

10ஆம் வகுப்புச் சமூக அறிவியல், திறனறி

பயிற்சி வினா விடைத்தாள் - 23.12.2023

1. சுருக்குக. $2\sqrt[3]{40}+3\sqrt[3]{625}-4\sqrt[3]{320}$

   A. $3\sqrt[3]{5}$ B. $2\sqrt[3]{5}$ C. $5\sqrt[3]{5}$ D. $4\sqrt[3]{5}$

   Simplifi it. $2\sqrt[3]{40}+3\sqrt[3]{625}-4\sqrt[3]{320}$

   A. $3\sqrt[3]{5}$ B. $2\sqrt[3]{5}$ C. $5\sqrt[3]{5}$ D. $4\sqrt[3]{5}$

2. $9\sqrt{8}/6\sqrt{6}=?$

   A. $18\sqrt{2/3}$ B. $18\sqrt{4/3}$ C. $6\sqrt{4/3}$ **D. $6\sqrt{2/3}$**

3. மதிப்பு காண்க. $\sqrt[3]{(1024)^{-2}}$

   A. $64\sqrt[3]{4}$ B. $1/64\sqrt[3]{4}$ **C. $1/64\sqrt[3]{1/4}$** D. $64\sqrt[3]{1/4}$

   Find the value of $\sqrt[3]{(1024)^{-2}}$

   A. $64\sqrt[3]{4}$ B. $1/64\sqrt[3]{4}$ C. $1/64\sqrt[3]{1/4}$ D. $64\sqrt[3]{1/4}$

4. மீ.பொ.வ காண்க. $(y^3+1)(y^3-1)$

   A. $(y+1)$ B. $(y-1)$ C. $(y+1)(y-1)$ D. 1

   Find the GCD of $(y^3+1)(y^3-1)$

   A. $(y+1)$ B. $(y-1)$ C. $(y+1)(y-1)$ D. 1

5. ஒரு கூடத்தின் அளவு 10மீ * 9மீ * 8மீ என உள்ளது. அக்கூடத்தின் சுவர்கள் மற்றும் மேற்கூரைக்கு வெள்ளையடிக்க ஒரு ச.மீ.க்கு ₹ 9.50 வீதம் ஆகும் மொத்த செலவு என்ன?

   A. ₹ 3349 **B. ₹ 3743** C. ₹ 6840 D. ₹ 3420

   The dimensions of a hall is 10m * 9m * 8m. Find the cost of white washing the walls and ceiling at the rate of ₹ 9.50 per m^2?

   A. ₹ 3349 **B. ₹ 3743** C. ₹ 6840 D. ₹ 3420

6. ஒரு மீன் தொட்டியானது 3.8மீ * 2.5மீ * 1.6மீ என்ற அளவுகளை உடையது. இந்த தொட்டியானது எத்தனை லிட்டர் கொள்ளும்?

   A. 15200லி B. 152000லி C. 1520லி D. 152லி^{3}

   The dimensions of a fish tank are 3.8m * 2.5m * 1.6m. How many litres of water it can hold?

   A. 15200l B. 152000l C. 1520l D. 152l^3

7. இரு கனச்சதுரங்களின் பக்கங்களின் விகிதமானது 3:5 எனில் அதன் புறப்பரப்புகளின் விகிதம்

   A. 3:5 B. 6:25 **C. 9:25** D. 5:3

   If the ratio of the sides of two cubes are 3:5, then ratio of their surface area will be

   A. 3:5 B. 6:25 **C. 9:25** D. 5:3

8. 7 தரவுகளின் சராசரி 30 என்க. ஒவ்வோர் எண்ணையும் 4ஆல் வகுக்க கிடைக்கும் புதிய சராசரியைக் காண்க.

A. 9.5 B. 10 C. 15 D. 7.5

If the arithmetic mean of 7 values is 30 and if each value is divided by 4, then find the arithmetic mean of new set of values

A. 9.5 B. 10 C. 15 D. 7.5

9. கீழ்க்கண்ட தொடரில் அடுத்த எண் எது?

-1, 6, 25, 62, ...

A. 119 B. 79 C. 73 D. 123

Find the next number of the following series.

-1, 6, 25, 62, ...

A. 119 B. 79 C. 73 D. 123

10. கீழ்க்கண்ட தொடரின் 26 ஆவது உறுப்பைக் காண்க.

2, 5, 10, 17

A. 675 B. 697 C. 676 D. 68

Find the 26th number of the given order.

2, 5, 10, 17

A. 675 B. 697 C. 676 D. 68

11. நீதிக்கட்சியின் பெயரைத் திராவிடர் கழகம் என எப்போது பெரியார் மாற்றினார்?

A. 1941 B. 1942 C. 1943 D. 1944

When did Periyar convene justice Party to Dravidar Kazhagam?

A. 1941 B. 1942 C. 1943 D. 1944

12. அகில இந்திய பெண்கள் மாநாடு நிறுவப்பட்ட ஆண்டு

A. 1926 B. 1927 C. 1928 D. 1929

When was All India Women's Conference formed?

A. 1926 B. 1927 C. 1928 D. 1929

13. தக்காணபீட பூமியின் பரப்பளவு ------- சதுர கிமீ ஆகும்

A. 8 இலட்சம் B. 6 இலட்சம் C. 5 இலட்சம் D. 7 இலட்சம்

Deccan plateau covers an area on about --------sq.km

A. 8 lakh B. 6 lakh C. 5 lakh D. 7 lakh

14. கொல்லேறு ஏரி எந்த நதியின் டெல்டாவில் அமைந்துள்ளது?

A. மகாநதி B. காவேரி C. கிருஷ்ணா D. கோதாவரி

In which River delta is Kolleru fresh water lake located?

A. Mahanadi B. Kauveri C. Krishna D. Godavari

15. தமிழ்நாடு எந்த பருவக்காற்றின் மூலம் அதிக அளவு மழையை பெறுகிறது?

A. தென்மேற்கு பருவகாற்று B. தென்கிழக்கு பருவக்காற்று
C. வடகிழக்கு பருவக்காற்று D. வடமேற்கு பருவக்காற்று

Which season gives maximum amount of rainfall to Tamilnadu?

A. South West monsoon B. South East monsoon
C. North East monsoon D. North West monsoon

16. இந்தியாவில் எத்தனை வனவிலங்கு சரணாலயங்கள் உள்ளன?

A. 512 B. 513 C. 514 D. 515

How many wildlife sanctuaries are there in India?

A. 512 B. 513 C. 514 D. 515

17. இந்தியாவில் தங்க இழைப்பயிர் என அழைக்கப்படுவது?

A. பருத்தி B. கோதுமை C. சணல் D. புகையிலை

Which crop is called as 'golden fibre' in India?

A. Cotton B. Wheat C. Jute D. Tobacco

18. உலக மீன் உற்பத்தியில் இரண்டாம் இடத்தில் எந்த நாடு இடம் பிடித்துள்ளது

A. மலேசியா B. வியட்நாம் C. இந்தியா D. சீனா

Which country occupies Second place among the fish producing nations of the world?

A. Malaysia B. Vietnam C. India D. China

19. இந்தியாவின் முதல் வாகன தொழிலகம் தொடங்கப்பட்ட ஆண்டு?

A. 1945 B. 1946 C. 1947 D. 1948

When was the first automobile industry of India was started?

A. 1945 B. 1946 C. 1947 D. 1948

20. பாக்சைட் உற்பத்தியில் இந்தியாவின் முதன்மை உற்பத்தியாளராக திகழும் மாநிலம் எது?

A. மத்திய பிரதேசம் B. ஜார்கண்ட் C. தமிழ்நாடு D. ஒரிசா

Which state is the largest producer of bauxite in India?

A. Madya Pradesh B. Jharkhand C. Tamilnadu D. Orissa

21. 2011 ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி இந்தியாவில் எத்தனை கோடி மக்கள் இடம்பெயர்ந்தார்களாவர்.

A. 25 கோடி B. 35 கோடி C. 45 கோடி D. 55 கோடி

How many crores of people in India are reported as migrants as per 2011?

A. 25 crore B. 35 crore C. 45 crore D. 55 crore

22. கொங்கன் இரயில்வே தொடங்கப்பட்ட ஆண்டு

A. 1996 B. 1997 C. 1998 D. 1999

When was Konkan Railway started?

A. 1996 B. 1997 <u>C. 1998</u> D. 1999

23. தமிழ்நாட்டின் வற்றாத ஆறு எது?

<u>A. தாமிரபரணி</u> B. பாலாறு C. பெண்ணையாறு D. வைகை

The Perennial River of tamilnadu is

<u>A. Thamirabarani</u> B. Balar C. Pennaiyar D. Vaigai

24. தமிழ்நாட்டில் எத்தனை கிராம ஊராட்சிகள் உள்ளது?

<u>A. 12,618</u> B. 13,618 C. 14,618 D. 15,618

How many village panchayats are there in TamilNadu?

<u>A. 12,618</u> B. 13,618 C. 14,618 D. 15,618

25. தென்பெண்ணை ஆற்றின் குறுக்கே கட்டப்பட்டுள்ள அணை எது ?

A. அமராவதி அணை B. மேட்டூர் அணை
<u>C. சாத்தனூர் அணை</u> D. முல்லைப் பெரியார் அணை

Which Dam is built on Thenpennai river?

A. Amaravathi dam B. Mettur dam
<u>C. Sathanur dam</u> D. Mullaiperiyar dam

26. பின்வருவனவற்றில் எந்த அணை 'காரையாறு அணை' என்று அழைக்கப்படுகின்றது.

A. வைகை அணை <u>B. பாபநாசம் அணை</u>
C. மணிமுத்தாறு அணை D. சாத்தனூர் அணை

Which dam is also known as Karaiyar dam?

A. Vaigai dam <u>B. Papanasam dam</u>
C. Manimuthar dam D. Sathanur dam

27. இந்திய அரசியலமைப்பு சட்டத்தின் எப்பகுதி இந்தியாவின் மகா சாசனம் என்று அழைக்கப்படுகிறது?

A. பகுதி-II <u>B. பகுதி-III</u> C. பகுதி-IV D. பகுதி-V

Which part of the constitution is described as Magna Carta of india?

A. Part-II <u>B. Part-III</u> C. Part-IV D. Part-V

28. இந்திய அரசால் அங்கீகரிக்கப்பட்ட மொழிகள் எத்தனை?

A. 20 B. 21 <u>C. 22</u> D. 23

How many official languages are there in India?

A. 20 B. 21 <u>C. 22</u> D. 23

29. முதன்முதலில் அரசியலமைப்பு கொள்கை--------இல் தோன்றியது

<u>A. அமெரிக்கா</u> B. சோவியத் யூனியன் C. ஜப்பான் D. ஆஸ்திரேலியா

The concept of constitution first originated in

<u>A. USA</u> B. USSR C. Japan D. Australia

30. இந்திய நாடாளுமன்றத்தைப் பற்றிக் கூறும் சட்டப்பிரிவு எது?

A. சட்டப்பிரிவு 53-68
B. சட்டப்பிரிவு 69-78
C. சட்டப்பிரிவு 79-122
D. சட்டப்பிரிவு 123-139

Which article deals with the Parliament of India?

A. Article 53 to 68
B. Article 69 to 78
C. Article 79 to 122
D. Article 123 to 139

31. தமிழகத்தில் இருந்து நாடாளுமன்றத்திற்கு தேர்ந்தெடுக்கப்படும் மாநிலங்களவை உறுப்பினர்கள் எத்தனை பேர்?

A. 16 B. 17 C. 18 D. 19

How many members represent Rajya Sabha from Tamilnadu?

A. 16 B. 17 C. 18 D. 19

32. இந்திய அரசின் தலைமை வழக்கறிஞரை நியமிக்க வழி வகை செய்யும் சட்டப்பிரிவு எது?

A. சட்டப்பிரிவு-73 B. சட்டப்பிரிவு-74 C. சட்டப்பிரிவு-75 D. சட்டப்பிரிவு -76

Which article defines the article of office of Attorney General in India?

A. Article-73 B. Article-74 C. Article-75 D. Article-76

33. மாநில ஆளுநரை நியமிப்பவர்

A. பிரதமர் B. முதலமைச்சர் C. குடியரசுத்தலைவர் D. தலைமை நீதிபதி

The Governor of state is appointed by

A. Prime Minister B. Chief Minister C. President D. Chief Judge

34. தமிழ்நாட்டில் சட்ட மேலவை நீக்கப்பட்டு அச்சட்டம் எப்போது நடைமுறைக்கு வந்தது?

A. ஆகஸ்ட் 1, 1986 B. செப்டம்பர் 1, 1986 C. அக்டோபர் 1, 1986 D. நவம்பர் 1, 1986

When did the Tamilnadu Legislative Council abolition come into force?

A. 1st August, 1986 B. 1st September, 1986 C. 1st October, 1986 D. 1st November, 1986

35. முதலமைச்சரின் தலைமையிலான அமைச்சரவையின் ஆலோசனை மற்றும் வழிகாட்டுதலின் படி ஆளுநர் செயல்படுவதைக் குறிக்கும் சட்டப் பிரிவு எது?

A. சட்டப்பிரிவு 162 B. சட்டப்பிரிவு 163 C. சட்டப்பிரிவு 164 D. சட்டப்பிரிவு 165

Which article provides for a council of Ministers to aid and advice the Governor?

A. Article 162 B. Article 163 C. Article 164 D. Article 165

36. இந்தியாவில் பிறப்பின்போது எதிர்பார்க்கப்பட்ட ஆயுட்காலம் -------ஆண்டுகள் ஆகும்

A. 65 B. 60 C. 70 D. 55

India's life expectancy at birth is-------years

A. 65 B. 60 C. 70 D. 55

37. GDP யின் நவீன கருத்தை முதன்முதலில் உருவாக்கியவர் யார்?

A. சைமன் குஸ்நட் B. கார்ல் மார்க்ஸ் C. அமர்த்தியா சென் D. ஆடம்ஸ்மித்

Who developed the modern concept of GDP?

A. Simon Kuznets B. Karl Marx C. Amartya sen D. Adam smith

38. மொத்த உள்நாட்டு உற்பத்தியில் இந்தியா உலகத்தில் ------வது வரிசையில் உள்ளது?

A. 5வது B. 6வது C. 7வது D. 8வது

What is the rank of India in terms of GDP?

A. 5th B. 6th C. 7th D. 8th

39. டேனியர்கள் எந்த ஆண்டு டேனிஷ் கிழக்கிந்திய நிறுவனம் ஒன்றை உருவாக்கினார்கள்?

A. 1615 B. 1616 C. 1617 D. 1618

When was Danes East India company formed?

A. 1615 B. 1616 C. 1617 D. 1618

40. அந்நிய செலாவணி மேலாண்மைச் சட்டம் இயற்றப்பட்ட ஆண்டு?

A. 1998 B. 1999 C. 2000 D. 2001

Foreign Exchange Management Act was passed in?

A. 1998 B. 1999 C. 2000 D. 2001

41. பின்வருவனவற்றில் எது பிரெஞ்சின் தலைமை இடமாக மாறியது?

A. பாண்டிச்சேரி B. கோழிக்கோடு C. மசூலிப்பட்டினம் D. புலிக்காட்

Which became the Headquarters of French?

A. Pondycherry B. Calicut C. Masulipatnam D. Pulicat

42. தமிழ்நாடு ஒருங்கிணைந்த ஊட்டச்சத்து திட்டம் -----------ல் தொடங்கப்பட்டது

A. 1980 B. 1975 C. 1955 D. 1965

Tamilnadu Integrated Nutrition Programme was started in ----------

A. 1980 B. 1975 C. 1955 D. 1965

43. மதிய உணவு திட்டம் என்பது---வயது பள்ளி குழந்தைகளுக்கு தமிழக அரசால் வழங்கப்படும் உணவு திட்டம் ஆகும்

A. 2 to 14 B. 4 to 14 C. 5 to 14 D. 6 to 14

The Government of Tamilnadu provides Mid-day meal programme to the age group of

A. 2 to 14 B. 4 to 14 C. 5 to 14 D. 6 to 14

44. சுத்தமான பணச் செயல்பாடு எப்போது தொடங்கப்பட்டது?

A. 2016 B. 2017 C. 2018 D. 2019

When was the Operation Clean Money launched?

A. 2016 B. 2017 C. 2018 D. 2019

45. பண்டங்கள் மற்றும் பணிகள் வரியை முதன்முதலில் அறிமுகப்படுத்திய நாடு எது?

A. சிங்கப்பூர் B. பிரான்ஸ் C. ஜெர்மனி D. ஆஸ்திரேலியா

Which country implemented the GST first?

A. Singapore B. France C. Germany D. Australia

46. -------- முறையில் வரியின் அடிப்படைத் தளம் அதிகரிக்கும்போது வரி விகிதமும் அதிகரிக்கிறது?

A. விகித வரி விதிப்பு
B. வளர்வீத வரி விதிப்பு
C. தேய்வுவீத வரி விதிப்பு
D. குவிப்பு வரி

The rate of taxation increases as the tax base increases in?

A. Proportionate tax
B. Progressive tax
C. Regressive tax
D. Accumulate tax

47. வருமான வரி என்பது எதற்கு எடுத்துக்காட்டாகும்

A. வளர்வீத வரி விதிப்பு வரி
B. தேய்வு வீத வரி விதிப்பு
C. விகித வரி விதிப்பு
D. குவிப்பு வரி

Income tax is an example of

A. Progressive tax
B. Regressive tax
C. Proportionate tax
D. Accumulated tax

48. சேலம் இரும்பு எஃகு ஆலை எப்போது அமைக்கப்பட்டது?

A. 1971 B. 1972 C. 1973 D. 1974

When was Salem steel plant started?

A. 1971 B. 1972 C. 1973 D. 1974

49. தமிழ்நாட்டில் TIDCO எப்போது நிறுவப்பட்டது

A. 1965 B. 1975 C. 1985 D. 1995

When did TIDCO establish in TamilNadu?

A. 1965 B. 1975 C. 1985 D. 1995

50. SIPCOT எப்போது நிறுவப்பட்டது

A. 1972 B. 1976 C. 1971 D. 1978

SIPCOT was formed in the year?

A. 1972 B. 1976 C. 1971 D. 1978

விடைகள்: அடிக்கோடிட்டவை

கீழ்க்கண்ட தலைப்புக்கான சரியான பதிலை இவ்வலுவலக இணையதள மின்னஞ்சலுக்கு அனுப்பும் கட்டுரைக்கு சிறப்புப் பரிசு மற்றும் புகைப்படத்துடன் கூடிய கட்டுரை அடுத்தமாத இதழில் இடம்பெறும்.

தலைப்பு:

2030ஆம் ஆண்டுக்குள் தமிழ்நாடு 1 டிரில்லியன் (ஒரு இலட்சம் கோடி) அமெரிக்க டாலர் பொருளாதார வளர்ச்சிபெற்ற மாநிலமாகவும், இந்தியப் பொருளாதாரத்திற்கு மிக முக்கியப் பங்களிக்கிற மாநிலமாகவும் தமிழ்நாட்டை உயர்த்திடும் பெரும் இலட்சிய இலக்கை நிர்ணயித்து மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் மேற்கொண்டுள்ள அமெரிக்க பயணம் ஏற்படுத்தும் தாக்கம் என்ன?

கட்டுரை அனுப்ப வேண்டிய இணையதள முகவரி: tamilarasujournal@gmail.com

தமிழ்நாட்டு மாணவர்கள் தரணியை வென்றிட

தமிழ்ப் புதல்வன்

திட்டம்

சொன்னதைச் செய்யும் நம் முதல்வர்!

தமிழரசு

Tamilarasu

R.N.I. No. 21446/70 Regn. No. TN/CCN/643/2024-2026
& WPP No. TN/PMG (CCR) 518/2024-2026

Date of Publication : 2nd week of every month
Date of Posting : 27th - 30th of every month

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் 29.08.2024 அன்று அமெரிக்கா நாட்டின், சான் பிரான்சிஸ்கோ நகரில் நடைபெற்ற முதலீட்டாளர்கள் மாநாட்டில், அப்ளைடு மெட்டீரியல்ஸ் நிறுவனத்திற்கும் தமிழ்நாடு அரசிற்கும் இடையே சென்னை, தரமணியில் செமிகண்டக்டர் உற்பத்தி, உபகரணங்களுக்கான மேம்பட்ட செயற்கை நுண்ணறிவு தொழில் நுட்ப மேம்பாட்டு மையம் அமைப்பதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்தானது.

Published by : Dr. R. Vaithinathan, I.A.S., on behalf of Information and Public Relations Department Government of Tamil Nadu, Secretariat, Fort St. George, Chennai - 600 009 and Printed by: R.Pugazh Vendhan at TAMILARASU PRESS, Rajiv Gandhi Salai, Taramani, Chennai - 600 113. Editor : Dr. R. Vaithinathan, I.A.S.,